2013, October 16 - 30

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/News/72/2013

## தன்னையே ஆள முடியாமல் திணறும் அமெரிக்கா உலகின் மீது தொடர்ந்து அதிகாரம் செலுத்த முடியுமா?

CHOGM 2013 Sri Lanka

## கொழும்பு மகாநாடும் மன்மோகன் சிங்கும்



## கூட்டமைப்பு எங்கே போகிறது?


## தமிழரசு கட்சி எங்கே நிற்கிறது?

| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீமை செய்பவர்களினால் உலகம் நிர்மூலம் செய்யப்படப்போவதில்லை. தீமை செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு எதையும் செய்யாமல் பார்த்துக் கொண்டிருப்பவர்களினாலேயே உலகம் நிர்மூலம் செய்யப்படும்.

- அல்பேர்ட் அயன்ஸ்டீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகாலம்
2013, ஒக்டோபர் 16 - 30
பக்கங்கள் - 68




26 இலங்கை அரசும் இந்திய நெருக்குதலும்
- கலாநிதி ஜெஹான் பெரேரா

29 குற்றுயிராகிக்கிடக்கும் அதிகாரப் பகிர்வு
- எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.

32 இது பொதுநலவரசின் முடிவின் தொடக்கமா?
- தனஞ்சயன் ஸ்ரீஸ்கந்தராஜா



34 உலகு மீது தொடர்ந்து அமெரிக்கா ஆதிக்கம் செலுத்த முடியுமா?
- லியுசாங்

19 வலிமையான மிதவாத தலைமை
- ஹரிம் பீரிஸ்

59 ஏ.பி.டி.சொய்சா வாழ்க்கை வரலாற்று நூல் அறிமுகம்
- க.சண்முகலிங்கம்



40 கொழும்பு மகாநாடும் மன்மோகன் சிங்கும்
- எம்.பி.வித்தியாதரன்



46 அனல் பறக்கும் பிரசாரத்திற்கு தயாராகும் தமிழகக்கட்சிகள்
- முத்தையா காசிநாதன்

64 சூழல்சார் சுற்றுலாத்துறை
பனுவல் பார்வை



52 சச்சின் ஒரு சகாப்தம்
- சிவகணேசன்



12 வட மாகாணம்: அரசு வேறு அரசியல் வேறு
- என்.சத்தியமூர்த்தி

22 தமிழரசுக்கட்சி எங்கே நிற்கிறது? கூட்டமைப்பு எங்கே போகிறது?
- யதீந்திரா



56 மனித கௌரவத்திற்காக சளைப்பின்றி உழைத்த போராளி
- பேராசிரியர் என்.சண்முகரத்தினம்



66 கடைசிப் பக்கம்
மருந்தாளர் ம.சுந்தரேசன்


*Samakalam focuses on issues that affect the lives of people of Sri Lanka, the neighbourhood and the world*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரிடமிருந்து...

# தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தலைவர்களின் கவனத்திற்கு...

வடமாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு தமிழ் மக்கள் வழங்கிய பிரமிக்கத்தக்க ஆணை தங்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப அரசியல் விவேகத்துடனும் துணிவாற்றலுடனும் தொலைநோக்குடனும் அதன் தலைவர்கள் செயற்படுவார்கள் என்று அவர்களுக்கு இருந்திருக்கக்கூடிய நம்பிக்கையுணர்வை வெளிக்காட்டியது. ஆனால், தேர்தல் முடிந்த கையோடு கூட்டமைப்பினர் நடந்து கொண்ட முறை தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியையும் விசனத்தையும் ஏற்படுத்தியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. புதிய மாகாண சபையில் பதவிகளைப் பகிர்ந்துகொள்வதில் ஏற்பட்ட பிசகுகளையடுத்து உறுப்பினர்களின் பதவிப் பிரமாணங்கள் இடம்பெற்ற இலட்சணம் கூட்டமைப்பின் தலைவர்கள் தமிழ்மக்கள் தங்களிடம் வேண்டிநிற்பதை புரிந்து விளங்கிக் கொண்டிருக்கிறார்களா என்ற கேள்வியை தவிர்க்க முடியாமல் எழுப்பியது.

வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அரசியலுக்குப் புதியவராக இருந்தாலும், தமிழ் மக்களினால் பெரிதும் மதிக்கப்படுபவர். வடமாகாண தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிட முன்வருமாறு அமைப்பு விடுக்கப்பட்ட நேரத்தில் அவர் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளின் சகல தலைவர்களும் ஏகோபித்து தன்னை அழைத்தால் அரசியலில் இறங்குவது குறித்து பரிசீலிக்கத் தயாராக இருப்பதாகத்தான் கூறினார். அத்துடன், தனது பிரவேசம் கூட்டமைப்பிற்குள் இருக்கக் கூடிய ஐக்கியத்துக்கு குந்தகமாக அமையக் கூடாது என்றும் வலியுறுத்தியிருந்தார். அத்தகைய 'நிபந்தனை'களை முன்வைத்துக் கொண்டு அரசியலுக்கு வந்த விக்னேஸ்வரன் அவர்களின் முன்னிலையில் கூட்டமைப்பின் சகல மாகாண சபை உறுப்பினர்களும் ஒருமித்து பதவிப் பிரமாணம் செய்யக்கூடியதாக நிலைவரங்கள் இருக்கவில்லை என்பது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளுக்குள் ஏற்பட்ட பிணக்குகளுக்கு சுமுகமான முடிவொன்றைக் காண்பதற்கு சகலவிதமான பிரயத்தனங்களையும் செய்து, சகல உறுப்பினர்களும் ஒரே அரங்கில் ஏககாலத்தில் பதவிப் பிரமாணம் செய்யக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தியபிறகே விக்னேஸ்வரன் அவர்கள் பதவிப்பிரமாண வைபவத்துக்கு முன்வந்திருக்கவேண்டும். அத்தகையதொரு அணுகுமுறையே அங்கத்துவக்கட்சிகளுக்குள் மேலும் முறுகல் நிலை வளருவதைத் தடுக்கக் கூடியதாக அமைந்திருக்கும்.

கூட்டமைப்பிற்குள் தோன்றிய பிசகுகள் எல்லாம் 'தேநீர்க்கோப்பைக் குள் வீசிய புயல்' என்றும் சகல அங்கத்துவக் கட்சிகளும் அடிப்படை இலட்சியத்தில் உறுதியான நிலைப் பாட்டைக் கொண்டிருக்கின்றன என்றும் கூறுவது விவேகமானதோ பொருத்தமானதோ அல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சிகளுக்குள் இருக்கக் கூடிய முரண்பாடுகளைத் தீர்த்து வைத்து ஓரணியில் சகலரையும் கொண்டு செல்லக்கூடிய முயற்சிகளுக்கு முன்னரங்கத்தில் நிற்கும் ஒரு தலைவராக முதலமைச்சர் விக்னேஸ்வரனைப் பார்க்கவே தமிழ் மக்கள் விரும்புகிறார்கள்.

இன்று தமிழ் மக்களுக்குத் தேவைப்படுவது வக்கிரத் தனமான உணர்வுகளை வெளிப்படுத்தும் கட்சி அரசியலே அல்ல. தமிழ் மக்களின் குறைந்த பட்ச அபிலாசைகளையாவது பூர்த்தி செய்யக்கூடிய அரைகுறைத் தீர்வைக் காணப்பதற்கும் கூட இடந்தராத தென்னிலங்கை அரசியல் சமுதாயத்தின் போக்குகளுக்கு மத்தியிலேயே தாங்கள் அரசியல் செய்ய வேண்டியிருக்கிறது என்பதைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் புரிந்து கொள்ள முடியாதவர்கள் அல்ல. இன்றுவரை கொழும்பு அரசியல் அதிகாரப் பீடத்தினால் பிளவுபடுத்த முடியாத அரசியல் சக்தியாக கூட்டமைப்பு ஒன்று மாத்திரமே விளங்குகிறது. இந்த அந்தஸ்துக்கு பாதகமாக அமைந்துவிடக்கூடிய செயற்பாடுகளை கூட்டமைப்பின் தலைவர்களிடம் தமிழ் மக்கள் எதிர்பார்க்கவில்லை.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகவும் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுவின் தலைவராகவும் இருக்கும் பழுத்த அரசியல்வாதி இரா.சம்பந்தன் அவர்கள் தமிழரசுக் கட்சியையோ அல்லது கூட்டமைப்பையோ தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று உரிமை கோருபவரல்ல. கூட்டமைப்பை அவர் தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற அரசியல் அணி என்றே கூறிவந்திருக்கிறார். அந்த வகையில் அந்தக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளில் ஏனையவற்றைவிட ஒன்றின் மீதே தமிழ் மக்கள் கூடுதலான நம்பிக்கையை வைத்திருக்கிறார்கள் என்று உரிமை கோர முயற்சிக்கக்கூடிய அளவுக்கு சம்பந்தன் அவர்கள் அரசியல் விவேகமும் முதிர்ச்சியும் இல்லாதவரல்ல. முதலமைச்சர் விக்னேஸ்வரன் போன்றவர்களுடன் இணைந்து சம்பந்தன் அவர்களின் அனுபவமும் அறிவும் பக்குவமும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஐக்கியத்தைக் குலையவிடாமல் பாதுகாக்கும் என்று தமிழ் மக்கள் நம்புகிறார்கள்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நம்பகத்தன்மையான ஒரு அரசியல் சக்தியாக மாத்திரமல்ல, தமிழ்மக்களுக்கான தலைமைச்சக்தியாகவும் தலையெடுத்திருக்கிறது என்று சர்வதேச சமூகம் கொண்டிருக்கின்ற நம்பிக்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத அரசியல் அணுகுமுறையையும் செயற்பாடுகளையும் அதன் தலைவர்கள் முன்னெடுப்பார்களாக! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதங்கள்













### சீவல் தொழிலின் சவால்கள்

வேறு எந்தவொரு சஞ்சிகையிலோ, பத்திரிகையிலோ காண முடியாத விடயங்களைத் தேடி அறிந்து பிரசுரிப்பதில் சமகாலத்திற்கு நிகர் சமகாலம் தான்.

அந்தவகையில் கடந்த இதழில், இன்றைய இளம் சமுதாயத்தினரில் கணிசமானவர்கள் அறிந்திராத சீவல் தொழில் தொடர்பாகவும் அது இன்று எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பிலும் பெருவாரியான தரவுகளுடன் அகிலன் கதிர்காமரும் அகல்யா பிரான்சிஸும் எழுதிய கட்டுரையை வாசித்தேன்.

மிகவும் அருமையாக இக்கட்டுரை அமைந்திருந்தது. இவ்வாறான பயனுள்ள கட்டுரைகளை எதிர்வரும் சமகால இதழ்களிலும் வாசிக்கலாம் என்று ஆவலுடன் காத்திருக்கிறேன்..

கோவிந்தன் புருஷோத்மன், கோப்பாய்.

### திரை விமர்சனம்

இன்று இலங்கையின் எந்தப் பத்திரிகையைப் புரட்டிப் பார்தாலும் திரைப்படங்கள் தொடர்பிலான உருப்படியான விமர்சனங்களைக் காணக்கூடியதாக இருப்பதில்லை. அவ்வாறு இருந்தாலும் அவை இந்திய இணையத்தளங்களினூடாக பெறப்பட்டுப் பிரசுரிக்கப்பட்டவையாகவே காணப்படும்.

ஆனால் அந்தக்குறையை சமகாலம் தீர்த்துக் கொண்டு வந்த நிலையில், கடந்த சில திரைவிமர்சனங்களைக் காண முடியவில்லை. இது ஒரு வருத்தத்திற்குரிய விடயம். வரும் சமகாலத்தின் திரைவிமர்சனங்கள் வருமா என்ற ஆவலுடன் காத்திருக்கிறேன்.

எம்.கதிர்வேலு, கரவெட்டி

### மோடியும் தி.மு.க.வும்

இந்தியப் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுவதற்கு முதல் பாரதிய ஜனதா கட்சியுடனான கூட்டணிக்கு பதில் சொல்ல வேண்டிய இக்கட்டான நிலையில் தி.மு.க. இருக்கிறது. அதேநேரம் சிறந்த தலைமைத்துவம் என்பதால் மட்டும் மோடிக்கு ஆதரவு தெரிவிக்க முடியாது. பிரதமரானதன் பின்னர் அவர் இந்துத்துவ தலைவராக மாறிவிட்டால், தமிழக சிறுபான்மையினருக்கு என்ன பதில் கூறுவது என்ற அடுத்த கட்டத்தையும் தி.மு.க. சிந்திக்கிறது.

திருச்சியில் நடந்து முடிந்த மோடியின் உரைக்கு பின்னர் தி.மு.க.வின் பொதுக்குழுக் கூட்டமும் கூடவுள்ளமையானது தமிழக மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மதவாத கருத்துகளுக்கு தி.மு.க. தலைவர் நான்கு மாதங்களுக்கு முன்னரே முழுக்குப் போட்டமை, நிருபர்களின் கேள்விக்களித்த பதில் போன்றன ஆட்சியை மையப்படுத்திய சலுகைக்கு அதாவது மோடி பிரதமரானால் தமிழகத்தில் செல்வாக்குடன் அரசியல் நடத்தலாம் என்ற நிலைப்பாட்டிலேயே

### காம்பிய பற்றிய தகவல்கள்

கடந்த சமகால இதழை வாசித்ததனூடாக புதியதொரு விடயத்தை என்னால் கற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. ‘பொதுநலவரசு அமைப்பிலிருந்து விலகிய காம்பியா’ என்ற மகுடமிட்டு செய்தி ஆய்வுப் பக்கத்தில் வெளிவந்த கட்டுரை தான் அந்தவிடயம். காம்பியா என்ற நாடு இருப்பது ஏற்கனவே தெரிவித்திருந்த போதிலும், அந்த நாடு தொடர்பில் சமகாலத்தின் வெளியான பல தகவல்கள் எனக்குப் புதியனவே.

முத்தையா சிறிதரன், கிண்ணியா.

விளம்பரங்களுக்கு : தொலைபேசி; 011-7767702, 011-7767703, 011-7322736

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி.மு.க. இருப்பதாக சென்னை மெயில் கட்டுரை குறிக்கின்றது.

தி.மு.க.விற்குள் பல அடிமட்ட பிரச்சினைகள் இருக்கும் நிலையில் டிசம்பர் மாதம் கூடவுள்ள தி.மு.க.வின் பொதுக்குழுக் கூட்டத்தில் நரேந்திரமோடியின் விவகாரமும் இடம்பெற்றிருப்பது பா.ஜ.க.வுக்கு ஆதரவு அளித்து மோடியை பிரதமராக்குவதே தி.மு.க.வின் உள்ளார்ந்த அக்கறையாக இருக்கிறது போலத் தோன்றுகிறது.

மோடி என்ற தனி மனிதரை எதிர்க்கவில்லை என்று கூறும் தி.மு.க. முன்னணிப் பிரமுகர் ஒருவர், நரேந்திரமோடியை யாரும் இந்துத்துவா தலைவராக பார்க்க வில்லை; அவரை ஒரு நல்ல நிர்வாகி என்றே பார்க்கிறார்கள் என்ற கருத்தே என்னை இந்த முடிவுக்கு இட்டுச்சென்றது.

சிவராமன் சர்வேஸ்வரன், வெள்ளவத்தை

## வடமாகாண சபை எதிர்கொள்ளும் நெருக்கடி

வடமாகாண சபைக்கான முதலாவது தேர்தல் முடிவடைந்திருக்கும் நிலையில் வாசகர் மத்தியில் பல கேள்விகள் எழுப்பப்படுகின்றன. வட மாகாணத்தைப் பொறுத்தவரையில் ஒரு இணக்க அரசியல் முன்னெடுக்கப்படுமா அல்லது எதிர்ப்பு அரசியல் ஒன்றைத்தான் கூட்டமைப்பு முன்னெடுக்குமா என்பதுதான் இதில் பிரதான கேள்வி. இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிப்பதாகத்தான் கடந்த சமகாலம் இதழில் குமார் டேவிட் எழுதியுள்ள கட்டுரை அமைந்திருக்கின்றது.

தேர்தலுக்குப் பின்னர்தான் உண்மையான சச்சரவு இருக்கின்றது என குமார் டேவிட் முன்னரே குறிப்பிட்டிருந்தார். அதாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தத் தேர்தலில் வெற்றிபெறும் என்பது தெரிந்தே இருந்தது. ஆனால், தேர்தலின் பின்னர் அமைக்கப்படும் மாகாண சபையின் செயற்பாடுகள் எவ்வாறு அமையும் என்பதுதான் கேள்விக்குரியதாக இருந்தது. இதில், வடக்கின் முதலமைச்சர் கவனிக்க வேண்டிய 5 விடயங்கள் தொடர்பில் குமார் டேவிட் குறிப்பிட்டுள்ளார்.

மாகாண சபைக்கான அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வதிலும், அதன் மூலம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் புதிய முதலமைச்சர் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். மத்திய அரசாங்கம் இவை எல்லாவற்றையும் உடனடியாகக் கொடுத்துவிடும் என எதிர்பார்க்க முடியாது. குறிப்பாக காணிப் பிரச்சினை, இராணுவமயநீக்கம் என்பவற்றில் மத்திய அரசாங்கம் விட்டுக்கொடுப்புடன் செயற்படும் என எதிர்பார்க்க முடியாது. இந்த இடத்தில் மாகாண சபை எவ்வாறு செயற்படும் என்பதுதான் கேள்வி.

விக்னேஸ்வரன் அரசியலுக்குப் புதியவர். சட்டத்துறையிலிருந்து அரசியலுக்கு வந்தவர். சட்டத்துறையில் உள்ளவர்களுடன் நெருக்கமானவர். அந்த வகையில் பிரச்சினைகளுக்குத் தீர்வைக்காண்பதில் அந்த அனுபவங்களை அவர் கையாள்வார் என கட்டுரையாளர் எதிர்பார்க்கின்றார்.

கே.சுபாஷினி, கொட்டாஞ்சேனை.




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 02 இதழ் 08

2013, ஒக்டோபர் 16 - 30

A Fortnigtly Tamil News Magazine

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
தொலைபேசி : +94 11 7322700
ஈ-மெயில்: samakalam@expressnewspapers.lk

ஆசிரியர்
வீரகத்தி தனபாலசிங்கம்
(e-mail : suabith@gmail.com)

உதவி ஆசிரியர்
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

பக்க வடிவமைப்பு
எம்.ஸ்ரீதரகுமார்

ஒப்பு நோக்கல்
என்.லெப்ரின் ராஜ்



ஒரு அரசியல்வாதியாக மாறுவதா அல்லது விபசாரவிடுதியில் பியானோ வாசிப்பவராக இருப்பதா என்பதே வாழ்க்கையில் நான் செய்யவேண்டிய தெரிவாக இருந்தது.

\- ஹரி ட்ருமன்

வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
சமகாலம்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

பெக்ஸ்: 011 7778752, 011-7767704, 011-2327827,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குமூலம்....

கொழும்பில் நடைபெறவிருக்கும் பொதுநலவரசு அமைப்பின் உச்சி மகா நாட்டில் கலந்துகொள்வதற்கு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கைத் தூண்டுவ தற்காகவே இலங்கை அரசாங்கம் சம்பூர் அனல் மின்நிலையத் திட்டம் தொடர் பான உடன்படிக்கையில் கைச்சாத்திட் டது. இந்த உடன்படிக்கை மன்மோகன் சிங்கிற்கு கொடுக்கப்பட்ட இலஞ்சம் என்பது தெளிவானது.



ஜனதா விமுக்தி பெரமுனை
எம்.பி.அனுரா திசாநாயக்க

இலங்கையில் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக எதிர்காலத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உருவாகும் நிலை காணப்ப டுகிறது. அவ்வாறு மாறியதும் கூட்டமை ப்பு அதன் பலம் முழுவதையும் பிரிவி னைவாதத்திற்காகப் பயன்படுத்தும். அப் போது அரசாங்கத்தினால் எதையும் செய்ய முடியாமற் போய்விடும்.

விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை ஒழித் துக்கட்டிய அரசாங்கம் அப்பாவிப் பிரஜை களை கொலைசெய்யும் இருபயங்கரவாதக் குழுக்கள் நாட்டில் சுதந்திரமாக இயங்குவதற்கு அனுமதித்திருக்கிறது. விவசாய இரசாயன ஆலைகளும் டுபாக்கோ நிறுவனமுமே அவ் விரு பயங்கரவாதக் குழுக்களாகும்.



மேல் மாகாண அமைச்சர்
உதய கம்மன்பில

கூடுதல் எண்ணிக்கையான அமைச்சர்களை நியமித்த அரசாங்கத்தலைவர் என்று கின் னஸ் சாதனைப் புத்தகத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பெயரைப் பதிவு செய் விப்பதற்காக கின்னஸ் நிறுவனத்துடன் நான் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறேன்.



ஐக்கிய தேசியக்கட்சி தேசிய அமைப்பாளர் தயாகமகே

எனக்கு கார் ஒன்றைத் தருவதாக கலாசார அமைச் சர் உறுதியளித்தார். ஆனால், எனக்கு இன்னும் அது கிடைக்கவில்லை. தம்பனவுக்கு வருகின்ற வர்கள் என்னிடம் காரைப் பற்றிக் கேட்கிறார்கள். பெரிய தொல்லையாக இருக்கிறது. அமைச்சர் என்னை ஏமாற்றி விட்டார் என்ற பதிலையே அவர்களுக்குக் கூறிவருகிறேன். எனது சமூகத் தின் தேவைகளைப் பற்றி கவலைப்படாமல், எனக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்ற ஆடம்பரக் காரின் மீதே நாட்டில் உள்ளவர்க ளுக்கு கூடுதல் அக்கறையாக இருக்கிறது.



வேடுவ தலைவர் உருவாரிகே வன்னிலா அத்தோ

வடமாகாண சபையின் நான்கு அமைச்சர்களையும் தெரிவு செய்வதில் முதலமைச்சர் விக் னேஸ்வரனுக்கு முழுச்சுதந்திரத் தையும் கட்சி வழங்கியது. உறுப் பினர்களின் சுயவிபரக் கோவை யைப் பரிசீலனை செய்த பிறகே அவர் அமைச்சர் பதவிகளுக்கு தெரிவுகளைச் செய்தார். அமைச் சர்கள் தெரிவில் முதலமைச்சர் மிகவும் ஆழமாகச் சிந்தித்துச் செயற்பட்டிருக்கிறார். இது தவிர, தமிழ்த்தேசியக் கூட்டமை ப்பைச் சேர்ந்த மாகாணசபை உறுப்பினர்கள் சகலருக்கும் அமைச்சுப் பொறுப்புகளைக் கண்காணிக்கும் பணியையும் ஒப்படைக்கப் போகிறார் விக்னேஸ்வரன்.



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு
தலைவர் இரா. சம்பந்தன்

வேடுவ மக்கள் கிரிக்கெட் விளையாடக்கூடாது. அது அவர்களின் கலாசாரத்திற்கு கெடுதலை உண்டுபண்ணும். கிரிக்கெட் விளையாடினால் வேடுவமக்களின் வாழ்க்கை முறை மாறிவிடும். ஏனென் றால் அவர்கள் காற்சட்டை, சேட்டுகள் அணிய வேண்டி வரும்.



கலாசார அமைச்சர்
ரி.பி.ஏக்கநாயக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

▶▶ செய்தி ஆய்வு ◀◀

# தொடர்ந்து அதிகரிக்கும் அமைச்சர்கள் எண்ணிக்கை

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இருக்கிறது. அதன் பாராளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டுபங்கினர் அமைச்சர்களாகவும் பிரதியமைச்சர்களாகவும் இருக்கிறார்கள். அண்மையில் மேலும் 9 பிரதியமைச்சர்கள் நியமிக்கப்பட்டதை எதிர்க்கட்சிகள் கடுமையாகக் கண்டனம் செய்திருக்கின்றன. பெரியநாடுகளான சீனா, ரஷ்யா மற்றும் இந்தியாவிலும் கூட இலங்கையில் உள்ளதைப் போன்ற பிரமாண்டமான அமைச்சரவை கிடையாது. எதிர்க்கட்சியிலிருந்து தாவியவர்கள் உட்பட அரசாங்கத் தரப்பில் 161 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இவர்களில் 105 பேர் அமைச்சர்களா கவும் பிரதியமைச்சர்களாகவும் பதவி வகிக்கிறார்கள். ஏற்கனவே உள்ள பெரிய அமைச்சரவையைப்பராமரிக்க பெருந்தொகை நிதி செலவிடப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில்



தொடர்ந்தும் அமைச்சர்களை நியமித்துக்கொண்டிருக்கும் அரசாங்கத் தலைமைத்துவத்தின் போக்கு மக்களின் உணர்வுகளை அலட்சியம் செய்வதாக அமைந்திருக்கிறது. அண்மையில் நியமிக்கப்பட்ட 9 பிரதியமைச்சர்களுக்கும் மேலதிகமாக சில பிரதியமைச்சர் களை நியமிக்கும் உத்தேசமும் அரசாங்கத்துக்கு இருப்பதாகக் கூறப்படுகிறது.

அமைச்சர்களினதும் பிரதியமைச்சர்களினதும் சலுகைகள், வசதிகள் மற்றும் வரப்பிரசாதங்களுக்காக கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவிடப்பட்டுக் கொண்டிருக்கின்ற அதேவேளை, அரசாங்கம் பொதுமக்களுக்கு இடையறாது மேலும் பொருளாதாரச் சுமைகளை ஏற்றிக்கொண்டேயிருக்கிறது. நவம்பர் முதல் பஸ் கட்டணங்களும் அதிகரிக்கப்படவிருக்கின்றன.

மக்களின் தேவைகள் குறித்து ராஜபக்ஷ அரசாங்கம் எந்தவிதமான கரிசனையும் காட்டாமல் ஆளும் கட்சி அரசியல்வாதிகளுக்கு சலுகைகளையும் வரப்பிரசாதங்களையும் தொடர்ந்தும் பெருக்குவதிலேயே கண்ணும் கருத்துமாக செயற்படும் துரதிர்ஷ்டவசமான நிலைவரத்தைக் காணக்கூடியதாகவுள்ளது. ■

# இலவச மருத்துவ சேவைக்கு நேர்ந்த கதி இலவச கல்விக்கும் வருமா?

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களினால் நடத்தப்படுகின்ற தனியார் வளாகங்களை இலங்கையில் அமைப்பதற்கான திட்டங்களை அரசாங்கம் அண்மையில் பாராளுமன்றத்தில் அறிவித்தது. பல்கலைக்கழகக் கல்வியைப் பெறுவதற்கான தகுதியைப் பெறும் பெருவாரியான மாணவர்கள் உள்ளூர் பல்கலைக்கழகங்களில் அனுமதியைப் பெறமுடியாமல் இருக்கிறா ர்கள். அத்துடன் பல்கலைக்கழகக் கல்விக்காக வெளிநாடு செல்லும் மாணவர்கள் அந்நிய செலாவணியாகப் பெருந்தொகைப் பணத்தைச் செலுத்த வேண்டியிருக்கின்றது. அதனாலேயே தனியார் பல்கலைக்கழங்களை திறப்பதற்கு திட்டமிட்டிருப்பதாக அரசாங்கத் தலைவர்கள் தங்கள் நிலைப்பாட்டுக்கு நியாயம் கற்பிக்கிறார்கள்.

ஆனால், சுயலாபத்தை மனதிற் கொண்ட சக்திகள் பின்கதவு வழியாக மேற்கொள்கிற நடவடிக்கைகளின் விளைவாக இலவசக்கல்விக்கு பெரும் பாதிப்பு ஏற்படப்போகிறது என்று எதிரணிக் கட்சிகள் அரசாங்கத்தின் இத்திட்டத்துக்கு பலத்த கண்டனத்தை தெரிவித்திருக்கின்றன.

உத்தேச வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் கிளைகளை உயர்கல்வி அமைச்சின் கண்காணிப்பின் கீழ் அமைக்காமல், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் கண்காணிப்பில் எதற்காக அமைக்க வேண்டும் என்றும் எதிரணிக் கட்சிகள் கேள்வியெழுப்புகின்றன. இலவச மருத்துவ சேவைக்கு நேர்ந்த கதி இலவசக் கல்விக்கும் நேர்ந்துவிடுமோ என்று அஞ்சவேண்டியிருக்கிறது.

இன்று தனியார் மருத்துவ நிறுவனங்கள் தனவந்தர்களுக்கும் மேல்

(21ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி ஆய்வு

# நோபல் சமாதானப் பரிசுக்கு பின்னாலுள்ள செய்தி



இவ்வருடத்துக்கான நோபல் சமாதானப் பரிசை இரசாயன ஆயுத தடைக்கான அமைப்புக்கு (Organization for the prohibition of chemical weapons) வழங்கிய தன் மூலமாக நோர்வே நோபல் கமிட்டி உலகில் இருந்து பேரழிவு ஆயுதங்களை இல்லாமற் செய்யும் இலக்கை நோக்கிய செயற்பாடுகளுக்கு இன்னொரு உத்வேகத்தைக் கொடுத்திருக்கிறது. 2005ஆம் ஆண்டு நோபல் சமாதானப் பரிசு சர்வதேச அணுசக்தி நிறுவனத்துக்கு (International Atomic Energy Agency) வழங்கப்பட்டது.

இரசாயன ஆயுதத் தடைக்கான அமைப்பு தற்போது சிரியாவின் இரசாயன ஆயுதங்களை நிர்மூலஞ் செய்யும் பணிகளைக் கண்காணிக்கும் சிக்கலான பொறுப்பைக் கையேற்றிருக்கிறது. 2013 நோபல் சமாதானப் பரிசு இந்தப் பொறுப்புக்கான ஒரு அங்கீகாரமாக தோன்றக் கூடுமென்றாலும், அந்த அமைப்பு 1997 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து இரசாயன ஆயுதங்கள் சாசனத்தின் (Chemical Weapons Convention) பாதுகாவலன் என்ற வகையில் மெச்சத்தக்க பணியைச் செய்து வந்திருக்கிறது. இரசாயன ஆயுதங்களைத் தடைசெய்யும் இச் சாசனத்தில் 189 நாடுகள் கைச்சாத்திட்டிருக்கின்றன. சாசனத்தின் ஏற்பாடுகளின்படி இந்த நாடுகள் அவற்றின் கையிருப்பில் இருக்கக்கூடிய இரசாயன ஆயுதங்களை குறிப்பிட்ட ஒரு கால அட்டவணைக்குள் பகிரங்கப்படுத்தி நிர்மூலஞ் செய்யக்கடமைப்பட்டிருக்கின்றன.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் ஆகியவற்றுக்கு விசேட அந்தஸ்தை வழங்குகின்ற அணுவாயுதப் பரம்பல் தடுப்பு உடன்படிக்கையைப் (Nuclear Non-proliferation Treaty) போலன்றி, இரசாயன ஆயுதங்கள் சாசனம் சகல நாடுகளுக்குமே பொதுவானது. எந்தவொரு நாட்டுக்கும் பிரத்தியேக அந்தஸ்தை அது வழங்கவில்லை. இரசாயன ஆயுதத் தடைக்கான அமைப்புக்கான பரிசு வாசகத்தில் நோபல் கமிட்டி, 'குறிப்பிட்ட சில நாட்கள் அவற்றின் இரசாயன ஆயுதங்களை நிர்மூலம் செய்வதற்கான காலக்கெடுவைக் கடைப்பிடிக்கவில்லை' என்று குறிப்பிட்டிருக்கிறது. 2012 ஏப்ரிலே அந்தக் காலக்கெடுவாகும். இது விசேடமாக அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் பொருந்தும்.

அமெரிக்கா தன்னிடமுள்ள இரசாயன ஆயுதக் கையிருப்பை நிர்மூலஞ் செய்வதற்கு மேலும் ஒரு தசாப்த கால அவகாசம் கேட்டிருக்கும் அதே வேளை, ரஷ்யா அதன் இரசாயன ஆயுதங்களை நிர்மூலஞ் செய்யும் பணிகளை 2018ஆம் ஆண்டளவில் மாத்திரமே பூர்த்தி செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்காவும் ரஷ்யாவும் அவற்றிடம் இருக்கின்ற இரசாயன ஆயுதக் கையிருப்புகளை நிர்மூலஞ்செய்வதில் தங்களுக்கு இருக்கக்கூடிய கடப்பாட்டை நிறைவேற்றுவதில் தாமதம் காட்டுகின்ற அதேவேளை, சிரியாவிடமிருக்கும் இரசாயன ஆயுதக் கையிருப்பை அழிப்பதற்கு தங்களுக்குள் உடன்பாடொன்றைக் கண்டதில் உள்ள முரண்நிலையை கவனிக்கத் தவறக்கூடாது. இலங்கையின் அயல் நாடான இந்தியா இரசாயன ஆயுதங்கள் சாசனத்தின் ஏற்பாடுகளுக்கு இசைவான முறையில் முழுமையாகச்செயற்பட்டு நான்கு வருடங்களுக்கு முன்னர் அதனிடமிருந்த இரசாயன ஆயுதக் கையிருப்பை அழித்தொழித்து விட்டதாகக்



ஹேக் நகரில் அக்டோபர் 9, 2013 நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இரசாயன ஆயுதத் தடைக்கான அமைப்பின் பணிப்பாளர் நாயகம் அஹ்மட் உசும்கூவின் அரசியல் ஆலோசகர் மாலிக் இலாஹி, வெளியுறவு விவகாரங்கள் பணிப்பாளரும் குழுத்தலைவருமான வாங் யூ, பிரகடனங்கள் கிளையின் தலைவர் நிஹாட் அலிஹொட்சிக் மற்றும் இரசாயன ஆயுத நீக்க கிளைத்தலைவர் டொமினிக் அனெலி ஆகியோர் ( இடமிருந்து வலமாக). (ராய்ட்டர்ஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்படுகிறது.

ஆயுதப்பரிகரணம் தொடர்பில் தங்களுக்கு இருக்கின்ற கடப்பாட்டை நிறைவேற்றக்கூடிய முறையில் பெரிய வல்லரசு நாடுகள் செயற்பட வேண்டும். அதற்கு அப்பால், அந்த நாடுகள் இரசாயன ஆயுதத் தடைக்கான அமைப்பின் செயற்பாடுகளில் தலையீடுகள் இடம்பெறாதிருப்பதையும் உறுதிசெய்ய வேண்டியதும் அவசியமாகும். அந்த அமைப்பு அதன் இலக்குகளை நிறைவேற்றுவதற்கு தொழில்நுட்ப மற்றும் இராஜதந்திர நிபுணத்துவத்திலேயே தங்கியிருக்கிறது. அமைப்பின் செயற்பாடுகள் கடந்த காலத்தில் பக்கச்சார்பு அரசியலின் விளைவாக குந்தகத்துக்குள்ளாகியிருந்தன. 2003 ஆம் ஆண்டு ஈராக் மீதான அமெரிக்காவின் சட்டவிரோத ஆக்கிரமிப்பிற்கு முன்னதாக, அந்த அமைப்பின் பணிப்பாளர் நாயகமான பிரேசில் இராஜதந்திரி ஜோசே மோரிசியோ பஸ்ராணி தங்களது நோக்கத்துக்கு குறுக்கே நிற்பார் என்பதைக் கண்ட புஷ் நிருவாகத்தினர் அவர் பதவியில் இருந்து நீக்கப்படுவதை உறுதிசெய்து கொண்டனர்.

இரசாயன ஆயுதத் தடைக்கான அமைப்பில் ஈராக் இணைவதை உறுதி செய்துகொள்ளும் நோக்கில் பஸ்ராணி அன்றைய ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசெய்னுடன் பேச்சுவார்த்தை நடத்தவிரும்பினார். அந்த அமைப்பைத் தடுத்துக்கொண்டு அமெரிக்கா அதன் சொந்த நலன்களை மேம்படுத்துவதற்காக ஈராக்கிற்கான விசேட ஐக்கியநாடுகள் ஆணைக்குழு போன்ற அமைப்புகளைப் பயன்படுத்தியது. இதன் மூலமாகப் பேரழிவு ஆயுதங்களை நிர்மூலஞ் செய்யும் இலட்சியத்துக்கு அமெரிக்கா எந்தச் சேவையையும் செய்யவில்லை. மட்டுப்படுத்தப்பட்ட காலவரையறையை அடிப்படையாகக்கொண்டு நோக்கும் போது, சிரியாவில் இரசாயன ஆயுதத்தடைக்கான அமைப்பின் வகிபாகம் தெளிவானதாகத் தெரிகிறது. இழப்புகளுக்கு வாய்ப்புகள் கூடுதலாக இருக்கின்றன. வெளித்தலையீடுகளோ அல்லது பலவந்தங்களோ இல்லாமல் அமைப்பைச் செயற்பட அனுமதிக்க வேண்டியது அவசியமாகும். சிரியாவின் இரசாயன ஆயுதங்கள் விரைவாகவும் பயனுறுதியுடைய முறையிலும் இல்லாதொழிக்கப்படுமானால், அது பலதரப்புகளின் இணைந்த செயற்பாடுகள் (multilateralism) மீது உலகிற்கு கூடுதல் நம்பிக்கை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும் என்பதுடன், மிகவும் கீர்த்திமிக்க பரிசுக்கான நோபல் கமிட்டியின் தெரிவும் நியாயப்படுத்தப்படும். ■

**இந்து**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உள்நாட்டு அரசியல்

எதிர்பார்த்தது போலவே, வட மாகாண சபைத் தேர்தலில், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ளது. முதலமைச்சராக முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி விக்னேஸ்வரனும் பிற நான்கு அமைச்சர்களும் பதவி ஏற்றுள்ளனர். மேலும் தேர்தலுக்காகவே ஒத்திவைக்கப்பட்டதாகக் கருதப்பட்ட கூட்டமைப்பின் உட்கட்சி விவகாரங்கள் எதிர்பார்த்ததை விடவும் வேகமாக மீண்டும் உயிர்த்தெழுந்துள்ளன.

இதனிடையே, எதிர்பாராத விடயங்களும் இருந்தன. ஒன்று, தேர்தல் நடைபெற்ற 36 இடங்களில் 28 இடங்களைக் கூட்டமைப்பு கைப்பற்றியதை, கட்சியின் அதி தீவிர ஆதரவாளர்கள் கூட எதிர்பார்க்கவில்லை. இரண்டு, கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் விக்னேஸ்வரன் 1,32,000இற்கும் அதிகமான 'விருப்பு வாக்குகள்' பெற்று, வடக்கு மாகாண தேர்தல்-அரசியலில் தனக்கென்று ஒரு தனி இடத்தைப் பிடித்து விடுவார் என்பதையும் பலரும் எதிர்பார்க்கவில்லை. இதில் விக்னேஸ்வரனுக்கு எதிராக கூட்டமைப்பிற்கு உள்ளேயே கிளம்பவிருக்கும் எதிர்ப்பாளர்களும் அடங்குவர்.

இதுபோன்றே, கூட்டமைப்பு ஆதரவாளர்களும் வாக்காளர்களும் எதிர்பாராத சம்பவம் ஒன்றும் அரங்கேறியுள்ளது. தேர்தலுக்குப் பின்னர், நீதியரசர் விக்னேஸ்வரனின் முதலமைச்சர் பதவியேற்பு விழாவிற்கு கூட்டமைப்புத் தலைமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு அழைப்பு விடுத்ததும் அதனை அவர் ஏற்றுக்கொண்டதும், எதிர்வரும் காலங்களில் இரு தரப்பினரிடையே சுமுக உறவு நிலவுவதற்கு அச்சாரமாக அமையும். அதனால் மட்டுமே, 'இப்பொழுதே பிள்ளை பெற்று பெயரிட்டு விடலாம்' என்றல்ல பொருள்.



மத்திய அரசு - மாகாண அரசாங்க உறவுகளுக்கு அப்பாற்பட்டு, அரசாங்க செயற்பாடு வேறு, அரசியல் வேறு என்ற உண்மையை உணர்ந்து செயல்பட்டால் மட்டுமே, வடமாகாணத்தின் கூட்டமைப்பு அரசு தான் ஏற்றுக்கொண்ட பொறுப்புகளையும் தனது கடமைகளையும் சரிவரச் செய்து தமது மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியும். தேர்தல் அரசியலில் அது முக்கியமான ஓர் அங்கமாகும். தற்போதைய நிலையில், இனப்பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுப்பதா அல்லது தமது மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முதலில் முனைவதா என்ற கேள்வி மாகாண அரசு தலைமையின் முன் தோன்றும் அல்லது, இப்போதே தோன்றிவிட்டது எனலாம்.

### கடைநிலை வாக்காளர்கள்

மாகாண மந்திரிசபை அமைப்பது குறித்து தோன்றிய பிரச்சினையை எதிர்கொள்ளும் முகமாக, கூட்டமைப்பில் உள்ள 'எதிரணியினர்' இப்போதே தங்களது தேர்தல் அறிக்கையை முன்வைத்தே முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையிலான அரசு செயல்பட வேண்டும் என்று கருத்து தெரிவித்து வந்துள்ளனர். கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையில் மக்களின் அன்றாடத் தேவைகள் குறித்து ஒரு வார்த்தை கூட கூறப்படவில்லை. முற்றாக, அறிக்கையில் 'தமிழ்த் தேசியம்' மற்றும் 'தமிழ்த் தேசியவாதிகளின்' கருத்துகளுக்கு மட்டுமே இடமிருந்தது.

இவ்வாறான ஓர் தேர்தல் அறிக்கை கூட, அரசியல் முதிர்ச்சி உடைய கூட்டமைப்புத் தலைமையின் அரசுசாரா கடந்த காலத்தையே பிரதிபலித்தது. அப்போது எல்லாம், விண்ணையோ-மண்ணையோ எண்ணிப் பார்க்காமல், இனப் பிரச்சினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்.சத்தியமூர்த்தி

# வட மாகாணம்; அரசு வேறு, அரசியல் வேறு

குறித்து அடுத்தடுத்து அறிக்கைகளை வெளியிடுவதும், அன்று மத்தியில் யார் பதவியில் இருக்கிறார்களோ அவர்களைக் குற்றஞ்சாட்டி அரசியல் செய்வது மட்டுமே கூட்டமைப்பின் முக்கிய செயற்பாடாக இருந்து வந்தது. தற்போது, மாகாண அரசிற்கு தலைமை வகிக்கும் சூழலில், தாங்களும் தங்களது மக்களின் அன்றாடத் தேவைகளுக்கு பதில் சொல்லவேண்டும் என்ற நிலை தோன்றியுள்ளது.

எதிர்க்கட்சியில் இருந்து ஆளும் கட்சிக்கான மன நிலைக்கு மாறி, அதற்குண்டான மாற்றங்களைக் கூட்டமைப்புத் தலைமையும் தலைவர்களும் அறிந்து, உணர்ந்து அதன்படி செயல்பட வேண்டும். ஏனோ தானோ என்று 'எடுத்தோம்-கவிழ்த்தோம்' என அரசியல் செய்து தப்பித்துக் கொள்ளமுடியாது. அவ்வாறே தொடர்ந்து செயற்பட்டு வந்தால் அதன் விளைவுகளை அடுத்தடுத்த தேர்தல்களில் கூட்டமைப்பும் அதன் தற்போதைய உறுப்புக் கட்சிகளும் சந்திக்க வேண்டும். இது, சரித்திரம் கூறும் உண்மை.

யார் முடிவு செய்து, கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையைத் தயாரித்தார்களோ தெரியவில்லை. ஆனால், அவர்கள் யாருமே மூன்று தசாப்தங்களாக இனப்போரில் அவதிப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கை நிலையைச் சிறிதளவாவது மேம்படுத்த, தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் கூட்டமைப்பு அரசு என்ன செய்ய வேண்டும், என்ன செய்ய முடியும் என்று நினைத்துக்கூடப் பார்க்கவில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. அவர்களைப் பொறுத்தவரை, வடக்கு மாகாணத்தில் ஆட்சிக்கு வந்தாலும், கூட்டமைப்பு 'எதிர்க்கட்சி அரசியல்' மட்டுமே செய்ய வேண்டும் என்று வரிந்து கொண்டுள்ளார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது.

அந்த விதத்தில் தங்களது நிகழ்காலக் கடமையையும் எதிர்கால அரசியல் நிலைப்பாடு மற்றும் தேர்தல் எதிர்பார்ப்புகள் குறித்தும் கூட்டமைப்புத் தலைமை எண்ணிப் பார்க்கவில்லை என்றும் எண்ணத் தோன்றுகிறது. அதுமட்டுமல்ல, தமது மக்கள், கூட்டமைப்பு அரசிடமிருந்து 'தமிழ்த் தேசியம்' குறித்த முன்னெடுப்புகளையும் முடிவுகளையும் மட்டுமே எதிர்பார்க்கிறார்கள் என்று கட்சித் தலைமையே கட்டியம் கூறியுள்ளது போன்ற எண்ணமே இதனால் உருவாகியது எனலாம்.

இந்தப் பின்னணியில், கூட்டமைப்பின் எதிர்பார்க்கப்பட்ட உட்கட்சிப் பூசல்கள், மாகாண அரசின் செயற்பாடுகளைப் பாதிக்கும் என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை. இந்தப் பிரச்சினை, அடிமட்டத்தில், கூட்டமைப்பின் உறுப்புக் கட்சிகளின் இரண்டாம் கட்ட தலைவர்களிடையே தோற்றுவிக்கும் மன உளைச்சல்கள், அரசின் நலத்திட்டங்கள் மக்கள் அனைவரையும் சென்றடையாத நிலைமையைத் தோற்றுவிக்கலாம். வெளிப்படையாகச் சொல்லப்போனால், தேர்தலுக்கு முன் மத்திய அரசில் பங்கு பெறும் தமிழ் உறுப்புக் கட்சிகள் குறித்து கூட்டமைப்பு முன் வைத்து வந்துள்ள குற்றச்சாட்டுகள் அவர்களினுள்ளேயே எழும் வாய்ப்புள்ளது. அவ்வாறு இல்லாமல் செய்ய, கட்சி மற்றும் ஆட்சியின் 'இரட்டைத் தலைமை' கவனம் எடுத்துக் கொள்ளவேண்டும்.

கூட்டமைப்பின் உட்கட்சிப் பூசல்கள் உலகு அறிந்ததுதான். என்றாலும், முன்பு எப்போதும் இல்லாமல், கூட்டமைப்பின் உறுப்புக் கட்சிகளும், அவற்றின் தலைவர்களும் பாராளுமன்றம் மற்றும் மாகாணசபை உறுப்பினர்களின் கருத்துகள் வடமாகாண அரசின் கருத்தாகவே எடுத்துக்கொள்ளப்படும். தற்போது, மத்திய அரசு அமைச்சர்கள் மற்றும் மத்தியில் ஆளும் கூட்டணியின் சுதந்திரக் கட்சி தலைமையின் கருத்துகள் மத்திய அரசின் கருத்தாகவே எண்ணப்படுகிறது. இதுவே, வடமாகாண அரசின் நிலையாகக் கருதப்படும் வாய்ப்புள்ளது.

கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக, இத்தகைய உட்கட்சி குழப்பங்களே, ஒருநாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் அதிகாரம் மற்றும் அரசியல் முக்கியத்துவத்தைக் கேள்விக்குறி ஆக்கிவிடும் நிலைமை கூடத்தோன்றலாம். அதனால் கூட்டமைப்பு பல்வேறு இழப்புகளைச் சந்திக்க நேரிடலாம். அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடை நிலைப் பாதிப்பு, போரில் அனைத்தையும் இழந்து, உயிரும் வாக்குரிமையும் மட்டுமே எஞ்சியுள்ள அப்பாவித் தமிழ் மக்களையே சென்றடையும். அவர்களுக்கு கொடுக்க உயிர் இல்லை என்றாலும், பின்னர் எடுத்துக்கொள்ள வாக்குரிமை இன்னமும் இருக்கும் என்ற அரசியல் உண்மையை கூட்டமைப்பின் உறுப்புக் கட்சிகளும் அவற்றின் தலைமைகளும் உணர்ந்து செயல்பட வேண்டும்.

## 'அதிகாரப் பகிர்வு', இருபாலாருக்குமே

கடந்த பல மாதங்களாக கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் உச்சிமாநாடு குறித்து கருத்துத் தெரிவிக்காத கூட்டமைப்பு திடீரென்று அதனை எதிர்த்து பல்வேறு கேள்விகளையும் அதற்கான பதில்களையும் எழுப்பியுள்ளது. ஒன்று, கூட்டமைப்பின் இந்த நிலையை அனைத்து உறுப்புக் கட்சிகளும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்று கருதினாலும், வடக்கு மாகாண அரசின் கருத்தும் அதுவேதானா என்பது குறித்து (பத்திரிகை அச்சேறும் வரையில்) தெளிவு இல்லை.

இலங்கை அரசியல் சட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சி செய்யும் ஒரு மாகாண அரசிற்கு இது போன்ற அதிகாரங்கள் கிடையாது என்பதே உண்மை. அந்த விதத்தில் வேண்டுமென்றால், 'அரசு வேறு, அரசியல் வேறு' என்ற நிலைப்பாட்டை கூட்டமைப்புத் தலைமை எடுக்கலாம். ஆனால், பொதுநலவாய மாநாடு குறித்த கேள்வியை முதலமைச்சர் விக்னேஸ்வரன் சந்திக்க நேரிட்டால், அவரது பதில் என்னவாக இருக்க முடியும்? கட்சியின் கருத்தை அவர் பிரதிபலித்தால், அது தனது ஆட்சிக்கு அவரே கெடு வைத்துக் கொள்ளும் நிலைமையை ஏற்படுத்தலாம். கட்சிக்கு மாறாக அவரது நிலை இருந்தால், அது பல்வேறு அரசியல் குழப்பங்களுக்கும் ஹேஷ்யங்களுக்கும் விதை விதைக்கும்.

நீதியரசர் விக்னேஸ்வரன் என்றல்ல, அவரது இடத்தில் வேறு யார் வட மாகாண முதலமைச்சராக இருந்தாலும் இத்தகைய பிரச்சினைகள் உருவாகவே செய்யும். அரசியலுக்கு அப்பாற்பட்ட விக்னேஸ்வரனைப் பொறுத்த வரையில், இத்தகைய பிரச்சினைகளை ஊதி பெரிதாக்க கூட்டமைப்பின் உள்ளேயே ஒரு கூட்டம் தயாராக இருக்கும் என்பதே உண்மை நிலை. இதுவே, 'அரசு பெரியதா, அல்லது அரசியல் கட்சி பெரியதா?' என்பது போன்ற விடை கிடைக்காத கேள்விகளை எழுப்பலாம். தற்போது, உட்கட்சி சிக்கல்களினால் தவிக்கும் கூட்டமைப்பில், உறுப்புக் கட்சிகள் பிரிந்து போவதற்கும், அவையே உடைந்து போவதற்கும் இது போன்ற பிரச்சினைகள் 'கொள்கை ரீதியான' காரண-காரணிகளை வழங்கலாம்.

'பொதுநலவாய மாநாடு' உட்பட்ட விடயங்கள், அரசியல் சட்டத்தின் அடிப்படையிலும் சரி, கூட்டமைப்பின் அரசியல் நிலைப்பாடுகளின் அடிப்படையிலும் சரி, மத்திய அரசு சம்பந்தப்பட்டது. அதில் மாகாண அரசிற்கு எந்த இடமும் இல்லை என்பதே உண்மை. இன்னும் சொல்லப்போனால், இது வரை, எந்தக் கால கட்டத்திலும் இத்தகைய அதிகாரம் மாகாண அரசிற்கு பகிர்ந்து அளிக்க வேண்டும் என்றும் கூட்டமைப்பு கோரவில்லை.

இந்தப் பின்னணியில், வடக்கு மாகாணத்தில் அரசு அமைத்த கையுடன் கூட்டமைப்பு மிகவும் கவனமாக கையாளப்பட வேண்டிய வெளியுறவுக் கொள்கை போன்ற விடயத்தில் எடுத்தோம்-கவிழ்த்தோம் என்ற வகையில் செயல்படுமேயானால், சிங்களக் கட்சிகள், மாகாணங்களுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்குவதற்கு மேலும், மேலும் தயக்கம் காட்டும் என்று எதிர்பார்க்கலாம். இதுவே, எதிர்பார்க்கப்படும் 'அதிகாரப் பகிர்வு' குறித்த இரு தரப்பு பேச்சுவார்த்தைகளிலும் அவசியமற்ற தாக்கங்களை ஏற்படுத்தலாம்.

அதைவிட முக்கியமாக, மத்திய அரசு மற்றும் மாகாண அரசுகளுக்கு இடையேயான அதிகாரப் பகிர்வு குறித்து தெளிவான முடிவுகளைக் கோரும் கூட்டமைப்பு, மத்திய அரசிற்கு மட்டுமே உரிய அதிகார வரம்பிற்குள் மூக்கை நுழைத்து, உள்நாட்டு அரசியலுக்கு சர்வதேச சாயம் பூசுவது, இனப்பிரச்சினை என்ற நிலைப்பாட்டில் மட்டும் வேண்டுமானால் நியாயப்படுத்தப்படலாம். ஆனால், அரசு, ஆட்சி என்று வந்து விட்டால், அவற்றிற்கான நியாய-தர்மங்களுக்கு உட்பட்டே செயலாற்ற வேண்டும்.

அந்த விதத்தில், அதிகாரப்பகிர்வு, மாகாண அரசுகளுக்கு மட்டுமல்ல, மத்திய அரசின் விடயத்தில் மாகாணங்களும் அவ்வாறே நடந்துகொள்ள வேண்டும் என்பதே நியதி. கூட்டமைப்பும் 'தனக்கு ஒரு நியாயம், எதிரணிக்கு ஒரு நியாயம்' என்ற நிலையை ஏற்படுத்தி விடக்கூடாது. அரசியல் மற்றும் இராஜீய வகையில், இது போன்ற பிரச்சினைகளில் இதுவரை சிங்கள அரசு மற்றும் அரசியல் தரப்பினரே இதுபோன்ற குற்றச்சாட்டுகளில் மாட்டிக்கொண்டு, வெளியேற வழி தெரியாமல் முழித்துள்ளனர்.

## நண்பர்களுக்கும் நெருக்கடி

அண்மையில் இலங்கை வந்த இந்தியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித், நவம்பரில் கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய உச்சி மாநாட்டில் தான் கலந்து கொள்ளப்போவதாக அறிவித்தார். இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மாநாட்டில் கலந்துகொள்வது குறித்து முடிவெடுத்து பின்னர் அறிவிக்க இருப்பதாகவும் அவர் கூறினார். பொதுநலவாய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சி மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளப்போவதை உறுதி செய்துள்ள அமைச்சர் குர்ஷித், பிரதமர் மன்மோகன் சிங் அதில் பங்குபெறுவதை மட்டுமே கேள்விக் குறியாக வைத்துச் சென்றார்.

இந்தப் பின்னணியில், பொதுநலவாய மாநாடு குறித்தும், அதில் இந்தியா பங்கு பெறுவது குறித்தும் கூட்டமைப்பு கருத்துக் கூறியிருப்பது, அரசியல் முதிர்ச்சியின்மையின் வெளிப்பாடு என்று கூடக் கருதுவதற்கு இடமிருக்கிறது. அதுவும், இந்தியா போன்ற அண்டை நாடு, எங்கோ அப்பால் உள்ள கனடா போன்ற நாட்டை பார்த்து படித்து தனது அண்டை நாட்டு கொள்கையை வகுத்துக் கொள்ளவேண்டும் என்று கூட்டமைப்பு கூறுவது, நட்பு நாடான இந்தியாவிற்கு அவசியமற்ற நெருக்கடியைக் கொடுப்பதாக மட்டுமே அமையும்.

தற்போது, பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக்கூடாது என்ற குரல், இந்தியாவில் தமிழ் நாட்டில் இருந்து மட்டும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. இலங்கை இனப்பிரச்சினையைச் சார்ந்து அந்தக் கோரிக்கைகள் இருந்தாலும், அது இந்தியாவின் உள் நாட்டுப் பிரச்சினை. அதே கோரிக்கையை கூட்டமைப்பு முன்வைக்குமேயானால், அதுவே நட்பு நாடான இந்தியாவின் உள்நாட்டுக் கொள்கை முடிவுகளில் தலையிடுவதாகவே இராஜதந்திர வழக்கப்படி கருதப்பட வேண்டும்.

கூட்டமைப்பைப் பொறுத்தவரையில், இந்தியா அவ்வாறு கருதிச் செயற்படாது என்பது வேறு விடயம். ஆனால், இப்போதே இதுபோன்ற விடயங்களில் கூட்டமைப்பு பொறுமையாகச் சிந்தித்துச் செயற்படப் பழகிக்கொள்ளவில்லை என்றால், உலக அரங்கில் கேலிப் பொருளாக மாறிவிடுவதை பின்னால் தவிர்க்க முடியாமலே போய்விடும். தற்போது கூட, கூட்டமைப்பின் உறுப்புக் கட்சியான 'டெலோ'-வைச் சார்ந்த சிவாஜிலிங்கம், இந்தியாவின் உள்நாட்டு அரசியலில் அநாவசியமாக மூக்கை நுழைத்தார் என்ற காரணத்திற்காக அந்த நாட்டினுள் நுழைய முடியாது என்ற அறிவிப்பு நடைமுறையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

நட்பு நாடான இந்தியாவிற்கு எதிராகச் செயற்பட்ட சிவாஜிலிங்கத்தை, கூட்டமைப்பு எவ்வாறு தனது வேட்பாளராக அறிவித்தது என்பது போன்ற இடக்கு-முடக்கான கேள்விகளை இந்திய அரசு நினைத்துக் கூடப்பார்க்கவில்லை என்பதே உண்மை. ஆனால், இது போன்ற நிலைமை நீடிக்க வேண்டுமானால், வடக்கு மாகாணத்தில் ஆட்சியைப் பிடித்துள்ள கூட்டமைப்பு, தனது சொல்லிலும், செயலிலும் தற்போது உள்ளதை விடவும் அதிக விவேகத்தைக் காட்டிச் செயற்பட வேண்டிவரும். அவ்வாறு செயற்படவும் வேண்டும்.

பொதுநலவாய உச்சிமகாநாடு, கூட்டமைப்பு சந்திக்கும் - சந்திக்க இருக்கும் பல்வேறு பிரச்சினைகளில் ஒன்று மட்டுமே என்றாலும், இதுபோன்ற விடயங்களில் இந்தியாவை, கனடாவைப் பார்த்து படித்துக் கொள்ளச் சொல்வதும், பிறிதொரு விடயத்தில் வேறொரு நாட்டை, மற்றொரு நாட்டின் இலங்கைக் கொள்கையை ஒட்டி செயல்பட எதிர்பார்ப்பதும், கூட்டமைப்பும் சரி, வட மாகாண அரசும் சரி, தங்களுக்கு என்று தனிப்பட்ட வெளிநாட்டுக் கொள்கையைக் கொண்டுள்ளது என்பது போன்ற மாயையை உருவாக்கும் நிலைமையை ஏற்படுத்தலாம். அதனால் வரும் பின்விளைவுகளை முன்வைத்து நோக்கும் போது, அதற்கான அவசியம் இல்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

பொதுநலவாய மகாநாடு ஆகட்டும், அல்லது இலங்கை இனப்பிரச்சினையின் பல்வேறு அலகுகள் ஆகட்டும், கனடா போன்ற நாடுகளின் உள்நாட்டு அரசியலில் புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களின் பங்களிப்பு அதிகமாக இருக்கிறது என்று சர்வதேச சமூகமே கருதுகிறது. இதனையொட்டி, புலம்பெயர்ந்தோர் குழுக்கள், இன்னமும் 'தனி நாடு' கோரிக்கையையும் அதற்கான எதிர்காலத் திட்டங்களையும் கைவிட்டுவிடவில்லை என்ற கருத்தும் இந்தியா போன்ற நாடுகளில் திடமாக இருக்கிறது.

குறிப்பாக, இந்தியாவில் இனப்பிரச்சினை குறித்த விடயங்களில், தமிழ் நாட்டு அரசியல் கட்சிகளுக்கு புலம்பெயர்ந்தோரே விடய-தானம் செய்து வருகிறார்கள் என்பது கண்கூடு. அவ்வாறு விடய-தானம் செய்வோரில் தங்களில் பலரும் இல்லை என்பதும் கூட்டமைப்புத் தலைவர்கள் அனைவரும் அறிந்து உணர்ந்த ஒன்றே. இந்தியாவோ, 'தனி நாடு' கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது மட்டுமல்ல, அதனால் உள்நாட்டில் தோன்றக்கூடியதாகக் கருத இடமிருக்கும் பிரச்சினைகள் குறித்து தொடர்ந்து கவலை கொண்டுள்ளது என்பதே உண்மை.

அந்த வகையில், பொதுநலவாய மகாநாடு குறித்து கனடா எடுத்துள்ள நிலையை இந்தியாவிற்கு கூட்டமைப்பு செயற்திட்டமாக முன்வைத்துள்ளது, அவசியமற்ற பல்வேறு கேள்விகளை அவசியமாக மாற்றி விடும் வாய்ப்பு உள்ளது. அதுவே, கூட்டமைப்பு தற்போது கோரும் 'அதிகாரப் பரவல்', இலங்கை 'தமிழ்த் தேசியவாதிகளின்' இடைக்காலத் திட்டமே. அதுவே, அடுத்த கட்டத்தில் 'தனி நாடு' கோரிக்கை மீண்டும் உருவெடுக்கும் என்ற இலங்கை அரசின் கவலையை உலக நாடுகளுக்கு பறைசாற்றும் விதமாக அமைந்துவிடும். இந்தியாவும் இத்தகைய எண்ண வோட்டத்தை மறுத்து விடமுடியாது. மறந்துவிடவும் முடியாது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உட்கட்சிப் பூசல்கள் உணர்த்தும் உண்மைகள்

தேர்தல் முடிந்து வட மாகாண அமைச்சரவை அமைப்பது குறித்த பிரச்சினையில் ஆளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் புரையோடிப்போன உட்கட்சிப் பூசல்கள் மீண்டும் புற்றீசல் போல் வெளிவரத்தொடங்கியுள்ளன. இலங்கையில் வாழும் தமிழர்களின் அரசியல் எதிர்காலத்தை வைத்து நோக்கும் போது, இது வரவேற்கத்தக்க நிகழ்வல்ல. அதேசமயம் எதிர்பார்க்காத விடயமும் அல்ல. அது போன்றே, அவை தவிர்க்க முடியாத விடயமும் அல்ல.

ஒரு விதத்தில், கூட்டமைப்பின் உட்கட்சி பூசல்கள் அதன் பிறப்போடு சம்பந்தப்பட்டது. முன்னர் 'தந்தை' செல்வா காலத்தில், தமிழ் ஐக்கிய விடுதலைக் கூட்டணி, காலத்தின் கட்டாயத்தால் ஏற்பட்ட உணர்ச்சிக் கூட்டணி. அதுவே, கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக, இன்று ஆனந்த சங்கரி என்ற தனி ஒரு தலைவருடன் மட்டுமே இணைத்துப் பேசப்படுகிறது.

கடந்த மாதம் நடைபெற்ற வடமாகாண சபைத் தேர்தலில், தற்போதைய கூட்டமைப்பின் ஓர் அங்கமாக களம் இறங்கிய 'சங்கரி அண்ணன்', கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 2000 வாக்குகள் மட்டுமே பெற்று, படுதோல்வி அடைந்தார். காரணம் எதுவாக இருந்தாலும், இது போன்றே, இனப்போருக்குப் பிந்தைய காலகட்டத்தில் நடைபெற்ற யாழ்ப்பாண நகர சபைத் தேர்தலில் போட்டியிட்டு, அவரால் சுமார் 400 வாக்குகள் மட்டுமே பெறமுடிந்தது குறிப்பிடத்தக்கது.

ஒரு வகையில், ஆனந்தசங்கரி சந்தித்த இந்த இரு தோல்விகளும், இனப்போர் காலகட்டத்தில் அவர் அரசு ஆதரவு நிலை எடுத்தமையால் மட்டுமே என்று கூறலாம். என்றாலும், 'தந்தை' செல்வாவினால் உருவாக்கப்பட்ட தமிழ் ஐக்கிய விடுதலைக்கூட்டணி, புதிய நூற்றாண்டின் தொடக்கத்திலேயே, விடுதலைப் புலிகள் இயக்கத்தால் செல்லாத காசாக மாற்றப்பட்டது என்ற உண்மையையும் மறந்துவிட முடியாது. அந்த உண்மையை மறைத்துவிடவும் முடியாது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் எண்ணப்படி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவானது, அதன் மேல் இருந்த மரியாதையால் அல்ல. மாறாக, உறுப்புக் கட்சிகளுக்கு அந்த அமைப்பின் மீது இருந்த பயத்தின் காரணமாக மட்டுமே, அரசியல் ரீதியாக ஒருங்கிணைந்து செயல்பட முடியாத நான்கு கட்சிகள் ஒரு குடையின் கீழ் செயற்பட எத்தனித்தனர். அது ஒன்றுபட முடியாத கூட்டணி என்பது உறுப்புக் கட்சிகள் அனைத்திற்கும் அன்றே தெரியும்.

கூட்டமைப்பில், விடுதலைப் புலிகள் அமைப்பினை எதிர்த்து செயற்பட்டு, அதனால் நீர்த்துப்போகப்பட்ட பிற தமிழ்ப் போராளிக்குழுக்கள் 'பல் பிடுங்கப்பட்ட பாம்பாகச் செயற்பட வேண்டியமை' காலத்தின் கட்






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

டாயம். அதிலும், ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற குழுக்கள், போராளி அடையாளத்தை விட்டுவிட்டு, மிதவாத அரசியலுக்குத் திரும்பிய அதேசமயம், மூன்று அல்லது நான்கு கட்சிகளாக உடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. அந்தப் பிரிவிற்கு கொள்கை முடிவுகள் (மட்டும்) காரணமல்ல. தனி நபர் ஆதிக்க மனப்போக்கே போராளிக் குழுக்கள் துண்டுதுண்டாகச் சின்னாபின்னமானதற்கு காரணமாகும்.

பின்னொரு காலத்தில், தமிழ்ச் சமூகத்தால் விடை காண முடியாத இந்த தனிநபர் துதியே, விடுதலைப் புலிகள் இயக்கமும் இல்லாமல் போனதற்கு ஒரு காரணமாக அமைந்தது. விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் முடிவுகளை தவறு என்று சுட்டிக்காட்டியவர்களைக் கொன்று குவித்தமையை இன்றுவரை எந்த 'தமிழ்த் தேசியவாதி'யும் கண்டிக்காதது வருந்தத்தக்கது. அன்றைய காலகட்டத்தில், அதுவே விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அவர்களைச் சார்ந்திருந்த ஒரே குற்றத்திற்காக தமிழ்ச் சமுதாயத்தையும் அழிவுப் பாதைக்கு இட்டுச்சென்றது.

அந்த விதத்தில், கூட்டமைப்பின் முக்கிய உறுப்புக் கட்சியான, இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் அன்றைய நாளைய 'தமிழ்த் தேசிய' வாதத்தை விடுதலைப் புலிகள் இயக்கம் உட்பட்ட அனைத்து தமிழர் அமைப்புகளும் ஏற்றுக்கொண்டிருந்தன என்பது உண்மை. அந்த விதத்தில், மிதவாத அரசியலை விட்டு, போராளித்துவ அணுகுமுறைக்கு விடுதலைப்புலிகள் இயக்கம், தமிழ்ச் சமூகத்தில் எதிர்ப்பேதும் இல்லாமல் தலைமை தாங்கிய காரணத்தினால் மட்டுமே, 'தமிழ்த் தேசிய'வாதிகள் இரண்டு அமைப்புகளையுமே தங்களது இரு கண்களாகப் பார்க்கத் தொடங்கியதும் துர்ப்பாக்கியமே.

அந்த விதத்தில், கூட்டமைப்பு உருவான காலகட்டத்தில் தமிழ் அரசுக் கட்சி அந்த அமைப்புடன் தன்னை இணைத்துக் கொண்டதற்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது இருந்த பயம் மட்டும் காரணமல்ல. யாழ் நகர புத்திஜீவிகள் மற்றும் அவர்களது புலம்பெயர்ந்த தமிழ் உறவினர்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்தை, 'தமிழ்த் தேசிய' இயக்கத்தின் காலாட்படையாக தங்கள் மனதில் வரிந்து கொண்டதும் முக்கிய காரணம்.

புத்திஜீவிகளை மட்டுமே அண்டி அரசியல் செய்து வந்த தமிழ் அரசுக்கட்சியால், அவர்கள் பேச்சுக்கு மறுபேச்சு பேசமுடியாத சூழ்நிலை ஏற்பட்டதும் ஒரு முக்கிய காரணம். அந்தக் காரணங்களுக்குப் பின், தமிழ் அரசுக் கட்சி மற்றும் தமிழ் ஐக்கிய விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் மிதவாத அரசியலை மதித்துச் செயற்படாத இலங்கை அரசின் போக்கும் ஒரு உந்துசக்தியாக இருந்தது மறக்கவோ மறுக்கவோ முடியாத உண்மை.

## முகப்பும் முகவரியும்

போர் முடிந்த காலகட்டத்தில், விடுதலைப் புலிகள் இயக்கம் இல்லாத காலத்தில், கூட்டமைப்பு சிதறுண்டிருக்க வேண்டும். அவ்வாறு நிகழாமல் போனதற்கு முக்கிய காரணம், அவர்களில் ஒவ்வொருவருக்கும் தமிழ்ச் சமூகத்தின் மீது இருந்த அபரிமிதமான பற்றும் கரிசனமும் (மட்டும்) காரணமில்லை. மாறாக, 'கூட்டமைப்பு' என்ற முகப்பும், முகவரியும் இல்லையென்றால் எங்கே தாங்கள் அரசியல் ரீதியாக காணாமல் போய்விடுவோமோ என்ற அச்சமே இன்றளவும் அந்தக் கட்சிகள் அனைத்தும் ஒருங்கிணைந்து செயற்படுவது போன்ற புறத்தோற்றத்தை உலகிற்குக்காட்ட வேண்டிய கட்டாயத்தை தொடர்ந்து ஏற்படுத்தி வருகிறது.

ஒரு வகையில், இந்த கவலை, தமிழரசுக் கட்சி தவிர்த்த பிற உறுப்புக் கட்சிகளுக்கு அதிகமாக உள்ளது. ஆனால், உண்மையிலேயே அவர்கள் தன்னிச்சையாகச் செயற்படுவார்களேயானால், அதன் பிற்காலப் பாதிப்பில் இருந்து, அந்தக் கட்சியும் தப்பப் போவதில்லை என்பதே அரசியல் பாலபாடத்தில் ஒரு அத்தியாயம். 'மத்திய அரசு' என்ற பொது எதிரியை எதிர்த்து மாகாண தேர்தல் காலத்தில் செயற்பட்ட கூட்டமைப்பு, தற்போது நாட்டின் தமிழர் அரசியலில் தனது அசைக்க முடியாத முன்னிலையை நிலைநிறுத்திக் கொண்டதன் மூலம், அரசியல் ரீதியாக அடுத்த கட்டத்திற்கான பயணத்தை தொடங்கிவிட்டது என்பதே எதார்த்தம்.

அத்தகைய பயணத்தில், கூட்டமைப்பு உறுப்புக்கட்சி வாரியாகப் பிரிந்து செல்வது சரித்திர ரீதியாக தவிர்க்க முடியாத விடயம். ஆனால், தமிழர்களின் நலன் கருதி தவிர்க்கப்பட வேண்டிய விடயமும் கூட. இந்தப் பிரிவினை தவிர்க்கப்படாவிட்டால், அடுத்த கட்டத்தில், தற்போது கூட்டமைப்பின் உட்கட்சி அரசியலில் தனித்துவமாகச் செயற்பட்டு, ஆளுமை செலுத்தும் தமிழ் அரசுக் கட்சியே கொள்கை-கோட்பாடு என்ற பெயரில் பின்னர் சிதறிப்போகலாம்.

அந்த 'கொள்கை ரீதியான' பிரிவுகளுக்கு எல்லாம், உண்மைக் காரணம், தனி மனித ஆளுமையும் ஆணவமும் தான். அதற்கு அப்பால் சென்று, வட மாகாண தமிழ்ச் சமூகம் மற்றும் அரசியலுக்கே உரித்தான அறிவுஜீவிகள் சார்ந்த 'பிரிவினை', மாவட்டம் மற்றும் ஜாதி அடிப்படையிலான வக்கிரங்கள் ஆகியவையும் கூட்டமைப்பு போன்ற தடாலடியாகப் பிறந்த ஓர் அரசியல் அமைப்பு சிதறுண்டு போகக் காரணமாகிவிடும்.

## 'கருணா பிளவு' கூறும் கதை

இத்தகைய பிரிவுகளும், பிரிவினைகளும் தவிர்க்கப்பட வேண்டும். ஆனால், அதனைச் செய்வது எப்படி? வட மாகாண அரசியல்வாதிகளும் சரி, யாழ் நகர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுஜீவிகளும் சரி, இந்த இரு சாராராலும் ஆட்டிப் படைக்கப்படும் புலம்பெயர்ந்த தமிழர்களும் சரி அல் லது அவர்கள் இரு சாராரையும் ஆட்டிப்படைக்கும் புலம்பெயர்ந்தோரும் சரி, தங்களது அண்மைக்கால சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தாலே அந்தக் கேள் விக்கு பாதி விடை கிடைத்த மாதிரிதான்.

இன்றளவும், கருணா தலைமையில் விடுதலைப் புலி கள் இயக்கம் பிளவுபட்டமைக்கு, அவரது தனி நபர் அபிலாஷைகளும், அன்றைய இலங்கை அரசு தரப்பி னரின் 'சதித் திட்டமுமே' காரணம் என்று வடக்கு மாகாண தமிழ்த் தரப்பு நம்பி வருகிறது - நம்ப விரும் புகிறது. ஆனால், சரித்திரம் மற்றும் 'கலாசார ரீதியாக' வடக்கு-கிழக்கு என்று இரு துருவமாக இருந்த தமிழர் தரப்பை தமிழ் மொழியின் பெயரால், தமிழ் அரசுக் கட் சியின் பெயரால், 'செயற்கையாக' இணைத்தது நிகழ் காலச் சரித்திரம்.

இத்தகைய செயற்கை இணைப்பு செயற்படாமல் போக வேண்டியமையும் காலத்தின் கட்டாயமே. அதற் கான முடிவை, அந்த முடிவால் வந்த 'பழியை' கருணா ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. அன்று கருணா இல்லாதிருந்தால், அவருடைய இடத்தில் ஒரு அரு ணாவோ, சுகுணாவோ ஏற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலை யாருமே கூறாமல், எவருமே முயற்சி எடுத் துக் கொள்ளாமல் உருவாகி இருக்கும் என்பதே உண்மை.

இன்னும் சொல்லப்போனால், கடந்த 1971ஆம் ஆண்டு பல்கலைக்கழகம் சேரவிரும்பும் மாணவர்க ளுக்காக, நாடு தழுவிய 'தரநிலைக்கட்டுப்பாடு' (standardization) முன்வைக்கப்பட்ட போது, தமிழர் களில் பாதிக்கப்பட்டவர்கள், இன்றைய யாழ். மாவட்ட மாணவர்கள் மட்டுமே. வட மாகாணத்தில் உள்ள மன் னார், முல்லைத்தீவு, வன்னி ஆகிய மாவட்ட மாணவர் கள் அதனால் பயனடைந்தார்கள் என்பதே உண்மை. கிழக்கு மாகாணத்திலும் ஒட்டு மொத்தமாக தமிழ் மாணவர்கள் பயனடைந்தார்கள். அவர்கள் இன்று அரச பணிகளிலும், வெளிநாட்டு வேலைவாய்ப்புகளி லும் வட மாகாணத்தவர்களுக்கு சரிசமமாகப் பங்கேற் கிறார்கள் என்பதும் உண்மை.

ஆனால், தமிழ்ச் சமுதாயத்தால் வரவேற்கப்பட வேண்டிய அந்தத் திட்டத்தை, இன்றளவும் வட மாகா ணத்தைச் சேர்ந்த தமிழ் அறிவுஜீவிகளும் அவர்கள் தலைமைத்துவம் வழங்கும் 'தமிழ்த் தேசியவாதி' களும் 'சிங்கள பேரினவாதத்தின்' ஒரு பகுதியாகவே உலகை நம்பச் செய்து வந்துள்ளார்கள். ஆனால், அண் மையில் இருக்கும் அப்பாவித் தமிழன் அதனை உணர்ந்து கொண்டுள்ளான் என்பதே உண்மை. ஆனால், அவன் அதனை உணர்ந்து கொண்டுள்ளான் என்பதை தமிழ் புத்திஜீவிகளும், 'தமிழ்த் தேசியவாதி' களும், ஏற்றுக்கொண்டு செயற்படுவதில்லை என்பதே எதிர்கால தமிழ் அரசியல் தலைமைத்துவம் எதிர் நோக்கும் முக்கிய பிரச்சினையாக மாறிவிடும் அபா யம் உள்ளது.

வட மாகாணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசு நடத்த இருக்கும் கூட்டமைப்புத் தலைமை, இன்றிலி ருந்து தங்கள் மக்களின் அபிலாஷைகளும், எதிர்பார்ப் புகளும், 'தங்களது அரசு' தங்களுக்கு என்ன செய்தது, என்னனென்ன செய்யத் தவறியது என்ற வகையி லேயே இருக்கும் என்ற சமூக-அரசியல் உண்மையை ஒட்டியே இருக்கும். 'எங்களது அரசே எங்களைக் கண்டு கொள்ளாத போது, சிங்கள அரசியல்வாதி களை மட்டும் எதற்கு குறை சொல்ல வேண்டும்?' என்ற நிலைப்பாட்டை, விரக்தியின் விளிம்பில் இருந்து மருகும் அந்த மக்கள் எடுக்கத் துவங்கினால், அதன் தேர்தல் விளைவுகளில் இருந்தாவது, அவர் களது ஆதரவு பெற்ற தமிழ் அரசியல் தலைமைகள் கூட தப்பிவிட முடியாது!


இதில்,யாழ். அறிவுஜீவிகளின் எடுப்பார் கைப்பிள் ளையாகச் செயற்பட்டு வரும் தமிழ் அரசுக் கட்சிக்கு 'தமிழ்த் தேசியம்' குறித்து தொடர்ந்தும் ஊடக விமர் சனம் செய்வோர் மற்றும் அது குறித்து உலகிற்கு உண ர்த்துவோர் ஆகியோரது ஆதரவு தொடர்ந்து இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. அது எதிர்பார்க்கப்பட வேண்டிய ஒரு விடயம் தான். வடக்கு மாகாணத்தில் உள்ள பிற, பிற்பட்ட மாவட்டங்களில் வேரூன்றி வந் துள்ள கூட்டமைப்பின் பிற உறுப்புக் கட்சிகள், இந்தப் பிரசார யுத்தத்தில் வெல்வதற்கு வழியில்லை என் பதும் உண்மை.

இனப்போரின் இடைப்பட்ட காலகட்டத்திலும் சரி, பின்னர் அது உச்சகட்ட நிலையில் இருந்த கடைசி மூன்று அல்லது நான்கு ஆண்டுகளிலும் சரி, போரின் நேரடித் தாக்கம் இந்த அறிவுஜீவிகள் தொடர்ந்தும் வசி த்து வந்த யாழ் நகரத்தையோ அல்லது அவர்களது புலம்பெயர்ந்த உறவு முறையினரின் வாழ்விடமான வெளிநாடுகளையோ நேரடியாகப் பாதிக்காதது குறிப் பிடத்தக்கது. அவர்களைப் பொறுத்தவரையில் இன்ன மும் 'தமிழ்த் தேசியம்' குறித்து 'திண்ணை பேச்சுக ளை' தொடர்ந்து பேசிய வண்ணம், தமிழ் அரசுக் கட்சி க்கு கொம்பு சீவி விட்டுக் கொண்டிருந்தால் போதும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







உள்நாட்டு அரசியல்



ஹரிம் பீரிஸ்

## சம்பந்தன் சுமந்திரன் விக்னேஸ்வரன்

# வலிமையான மிதவாத தலைமை

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைத் தீர்க்கமான முறையில் தோற்கடித்த ஒரே கட்சியென்றால் அது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பேயாகும். அந்தக் கூட்டமைப்பு கைப்பற்றிய வட மாகாண சபையே 1993 ஆம் ஆண்டு தென்மாகாண சபைத் தேர்தலில் பொது ஜனமுன்னணி பெற்ற வெற்றிக்குப் பிறகு (இந்த வெற்றியே ஒரு வருடத்துக்குப் பிறகு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின் முடிவுக்குக் கட்டியம் கூறியது) எதிர்க்கட்சியொன்றின் கட்டுப்பாட்டின் கீழ் வந்திருக்கக் கூடிய முதலாவது மாகாண சபையென்று சரித்திரமும் படைத்திருக்கிறது. இத்தகைய வெற்றியொன்றைக் கண்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முதலமைச்சரான முன்னாள் உச்ச நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை அக்டோபர் 7ஆம் திகதி அலரிமாளிகையில் பதவிப் பிரமா ணம் செய்யவைப்பதற்குத் தீர்மானித்ததன் மூலமாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அரசியல் பெருந்தன்மையாக நேசக்கரத்தை நீட்டியிருக்கிறது. இனரீதியாகத் துருவமயப்பட்டிருக்கும் இலங்கைச் சமூகத்திலும் அரசியல் வர்க்கத்திலும் இது மிகவும் குறிப்பிடத்தக்கதொரு அரசியல் சைகையாகும். வெற்றிக்கு மத்தியில் பெருந்தன்மையுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்தினால் ஒருதலைப்பட்சமாகக் காட்டப்பட்டிருக்கும் இச்சைகைக்கு ராஜபக்ஷ ஆட்சி பதிற் சைகையைக் காட்டியேயாக வேண்டும்.

போரின் முடிவுக்குப் பின்னரான காலகட்டத்தில் ராஜபக்ஷ நிருவாகம் போரின் விளைவுகளையோ அல்லது போருக்கான காரணிகளையோ போதுமான முறையில் கையாளவில்லை. அந்த நிருவாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ததெல்லாம், முற்றுமுழுதாக உட்கட்டமைப்பு வசதிகளின் மீது கவனத்தைக் குவித்து நிர்மாணப் பணிகளையேயாகும். மோதலில் பாதிக்கப்பட்டவர்கள் மீது கவனம் செலுத்தப்படவில்லை. அந்த உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியிலிருந்து பெறக்கூடியதாக இருக்கும் பொருளாதார பலாபலன்களும் (மீன்பிடி உரிமைகளில் இருந்து சுற்றுலாத்துறைத் திட்டங்கள் வரை) கூட, இராணுவத்தினால் அல்லது அரசாங்கத்துக்கு நெருக்கமானவர்களினால் அபகரிக்கப்பட்டிருக்கின்றன. வட மாகாணத்தில் வெறுமனே 17.5 சதவீதமான வாக்காளர்களே அரசாங்கத்தை ஆதரித்திருப்பதை தேர்தல் முடிவுகள் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது.

ராஜபக்ஷ நிருவாகம் உத்தேச 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் ஊடாக மாகாண சபைகளின் அதிகாரங்களை மேலும் பலவீனப்படுத்துவதற்கு அடாவடித்தனமாக முயற்சித்தது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதில் அக்கறை காட்டாத அரசாங்கம், இந்தியாவின் முன் முயற்சியுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் நடத்தி வந்த பேச்சுவார்த்தைகளையும் முறித்துக் கொண்டது. இந்தப் பின்புலத்திலேயே ஜனாதிபதி முன்னிலையில் விக்னேஸ்வரன் பதவிப் பிரமாணம் செய்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த தீர்மானத்தை நோக்க வேண்டும். அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட ஒரு அதிகாரிக்குரிய சகல விதிமுறைகளையும் மீறி வடக்கில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மேடைகளில் பிரசாரத்தில் ஈடுபட்ட ஆளுநர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சந்திரசிறி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொள்வதில்லை என்ற கோட்பாட்டு அடிப்படையிலான ஒரு நிலைப்பாட்டை கூட்டமைப்பு எடுத்திருந்தது. தேர்தல் முடிவுகள் வெளியான உடனடியாக சந்திரசிறி ஆளுநர் பதவியை இராஜினாமா செய்திருக்க வேண்டும். அதுவே கண்ணியமான செயலாக இருந்திருக்கும். இப்போது அவரின் நிலைமை சற்று சிக்கலானதாக மாறியிருக்கிறது. வட மாகாண சபையில் மூன்றில் இரண்டு பங்கிற்கும் அதிகமான பலத்தை கூட்டமைப்பு கொண்டிருக்கிறது. அந்த சபைக்கு கிடைத்திருக்கும் ஜனநாயக ரீதியான மக்கள் ஆணையைச் சீர்குலைப்பதற்கு ஆளுநர் நாட்டம் காட்டுவாரானால், அவருக்கு எதிராக அரசியல் குற்றப்பிரேரணையொன்றைக் கொண்டு வந்து நிறைவேற்ற முடியும். பிரதம நீதியரசர் திருமதி ஷிராணி பண்டாரநாயக்க

> வட மாகாண சபைத் தேர்தலில் பெற்ற மகத்தான வெற்றிக்கு மத்தியிலும் பெருந்தன்மையுடன் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைமைத்துவம் ஒரு தலைப்பட்சமாக நீட்டியிருக்கும் நேசக்கரத்திற்கு ராஜபக்ஷ ஆட்சி அதன் பதிற் சைகையைக் காட்டியாக வேண்டும்

மீது குற்றப் பிரேரணை கொண்டு வரப்பட்டு அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை ஜனநாயகத்தில் குற்றப் பிரேரணைக்கான அளவுகோல் மிகவும் தாழ்ந்த மட்டத்திலேயே இருக்கிறது.

அரசியலமைப்பின் 4 ஆவது அட்டவணையின் பிரகாரம் மக்களினால் தெரிந்தெடுக்கப்படும் பதவி நிலைக்குரிய ஒருவர் சமாதான நீதிவானின் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்தாலே போதும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன் முன்னிலையில் வடமாகாண சபை பதவிப் பிரமாணம் செய்ய வேண்டுமென்பதே கூட்டமைப்பினர் மத்தியில் பொதுவான அபிப்பிராயமாக இருந்தது. கூட்டமைப்பின் தேர்தல் வெற்றி அதற்கும் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் இருக்கும் விடுதலைப் புலிகள் ஆதரவு அமைப்புகள், தங்களைத் தாங்களாகவே கடும் போக்காளர்கள் என்று நியமித்துக் கொண்டவர்களுக்கும் இடையேயான உண்மையான வேறுபாட்டை வெளிக்காட்டியிருக்கிறது. ஒப்பீட்டளவில் கூடுதலான அளவுக்கு மிதவாதப் போக்குடைய கூட்டமைப்பு தேர்தலில் இலங்கைத் தமிழ் மக்களின் ஆணையைப் பெற்றிருக்கிறது. தமிழ் அரசியல் தலைமைத்துவத்தின் ஈர்ப்பு மையம் சந்தேகத்திற்கு இடமின்றிய வகையில் திருகோணமலையிலும் கொழும்பிலும் (சம்பந்தன், சுமந்திரன் என்று அர்த்தப்படுத்திக் கொள்ளுங்கள்) உள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்தின் கைகளில் தீர்க்கமான முறையில் வலுப்படுத்தப்பட்டிருக்கிறது. புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் கட்டுப்பாட்டின் கீழேயே கூட்டமைப்பு இருக்கிறது என்ற அரசாங்கத்தரப்பின் பிரபல்யமான புனைக்கருத்து தவறு என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பலவீனப்பட்டு, பிளவுபட்டுப் போயிருக்கிறது. பல தமிழ் அரசியல் தலைமைத்துவக் குரல்களில் கூட்டமைப்பும் ஒன்று. புலம்பெயர் தமிழர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் கூட்டமைப்பு நாளடைவில் ஈ.பி.டி.பி, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் போன்ற ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் உள்ள அரசாங்கத்தின் நேசக் கட்சிகளிடம் அதன் செல்வாக்கை இழந்து இறுதியில் இன்னொரு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அல்லது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்று வந்துவிடும் என்றவாறான ஒரு கதையைச் சொல்வதில் அரசாங்க ஆதரவு மற்றும் சிங்களத் தேசியவாத ஆதரவு ஊடகங்கள் ஒரு வித திருப்தியை அடைகின்றன போல் தெரிகிறது. இத்தகைய மாயைத்தனமான பிரசாரங்களையெல்லாம் தேர்தல் யதார்த்தங்கள் தவிடுபொடியாக்கிவிட்டன. முழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாணத்திலும் மக்களின் வாக்குகளில் சுமார் 80 சதவீதமான வாக்குகளைக் கைப்பற்றிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மாகாண சபையில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றிருக்கிறது. ஈ.பி.டி.பி.யின் தளங்கள் என்று கூறப்பட்டு வந்த தீவுப்பகுதிகளை உள்ளடக்கிய ஊர்காவற்துறை தொகுதியையும் கூட்டமைப்பு கைப்பற்றிருக்கிறது. கிடைத்த இரு போனஸ் ஆசனங்களுக்கும் முஸ்லிம் ஒருவரையும் பெண்மணி யொருவரையும் நியமித்ததன் மூலமாக முஸ்லிம்களின் நலன்களிலும் பெண்களின் நலன்களிலும் உள்ள அக்கறையையும் அது வெளிக்காட்டியிருக்கிறது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்குள் இருப்பதாகக் கூறப்படும் பிளவுகள் வழமையான தேர்தல் மற்றும் கூட்டணி அரசியலில் காணப்படக் கூடியவையே தவிர, வேறு ஒன்றுமில்லை. ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் இருக்கின்ற தகராறுகளுடன் ஒப்பிடும்போது கூட்டமைப்பின் தகராறுகள் ஒன்றும் பெரிதல்ல. மத்திய மாகாணசபைக்கு நடைபெற்ற தேர்தலில் ஆளும் கட்சியில் அதிகூடிய விருப்புவாக்குகளைப் பெற்ற பிரதமர் டி.எம்.ஜெயரத்னவின் மகனை அலட்சியம் செய்துவிட்டே முதலமைச்சர் பதவிக்கு சரத் ஏக்கநாயக்க நியமிக்கப்பட்டிருக்கிறார். அரசியலமைப்புக்கான உத்தேச 19ஆவது திருத்தம் தொடர்பில் அமைச்சரவைக்குள் கிளர்ச்சி மூண்டது. அநுராதபுரத்தில் காலஞ்சென்ற பேர்ட்டி பிரேமலால் திசாநாயக்காவின் ஆதரவாளர்களுக்கும் முதலமைச்சர் எஸ்.எம். ரஞ்சித்தின் ஆதரவாளர்களுக்கும் இடையே அரசியல் சண்டை தொடர்ந்து கொண்டிருக்கிறது. அதிகாரப்பரவலாக்கல் தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அங்கத்துவக் கட்சிகளிடையே கடுமையான கருத்துவேறுபாடுகள் நிலவுகின்றன. ஒரு புறத்தில் ஜாதிக ஹெல உறுமயவும் தேசிய சுதந்திர முன்னணியும் நிற்க, மறுபுறத்தில் கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, புதிய இடதுசாரி முன்னணி மற்றும் லிபரல் கட்சி ஆகியவை நிற்கின்றன.

**புலம் பெயர் தமிழர்கள் மத்தியில் உள்ள தீவிரவாத நிலைப்பாடு கொண்ட அரசியல் சமுதாயத்திற்கு எதிரான சிறந்த தடைச்சுவர் வலிமையான மிதவாத இலங்கைத் தமிழ் அரசியல் தலைமைத்துவமேயாகும். அத்தகையதொரு தலைமைத்துவத்தின் தோற்றத்தை சம்பந்தன், சுமந்திரன், விக்னேஸ்வரனில் காணக்கூடியதாக இருக்கிறது**

அண்மைக்காலத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் சிறந்த அரசியல் தலைமைத்துவத்தை வெளிக்காட்டியிருக்கின்றார். தமிழ் அரசியலில் பரந்தளவு விளைவுகளைக் கொண்டுவரக்கூடியதும் மிதவாதத்தன்மை கொண்டதுமான அரசியல் மாற்றங்களைக் கொண்டு வந்து அவர் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தைப் பலவீனப்படுத்தி தனது மிதவாதத் தலைமைத்துவத்தைப் பலப்படுத்தியிருக்கிறார். வடமாகாணத்தின் முதலாவது முதலமைச்சராக இலங்கையில் இருக்கக்கூடிய மாண்புமிக்க ஓய்வுபெற்ற நீதிபதியைக் கொண்டு வருவதற்கு துணிச்சலுடன் முயற்சியெடுத்ததன் மூலம் சம்பந்தன் தமிழ் அரசியல் சமுதாயம் முழுவதையுமே அதிர்ச்சிக்குள்ளாக்கினார். வடமாகாண தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு முதலமைச்சர் தனது பதவிப் பிரமாணத்தை ஜனாதிபதி ராஜபக்ஷ முன்னிலையில் அலரி மாளிகையில் செய்வதற்கு வழிவகுத்து அரசியல் நல்லிணக்கத்துக்கான பெரியதொரு விட்டுக்கொடுப்பைச் செய்தார். ஐக்கியப்பட்டதும் பிளவுபடாததுமான இலங்கை ஒன்றுமீது தனக்கிருக்கும் பற்றுறுதியை சம்பந்தன் பிரகாசமாக வெளிக்காட்டினார்.

புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் உள்ள தீவிரவாத நிலைப்பாடு கொண்ட தமிழ் அரசியல் சமுதாயத்துக்கு எதிரான சிறந்த தடைச்சுவர் வலிமையான மிதவாத இலங்கைத் தமிழ் அரசியல் தலைமைத்துவமேயாகும். அத்தகையதொரு தலைமைத்துவத்தின் தோற்றத்தை சம்பந்தன், சுமந்திரன் மற்றும் விக்னேஸ்வரனில் காணக்கூடியதாக இருக்கிறது. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு ராஜபக்ஷ ஆட்சி நல்லிணக்கத்தை நோக்கி முன்னேறிச் செல்லத் தயாராக வேண்டும். ■

---

*(09ஆம் பக்கத்தொடர்ச்சி)*

நடுத்தர வர்க்கத்தவர்களுக்குமானவையாக மட்டுப்படுத்தப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. தனியார் மருத்துவத்துறையில் படுமோசமான ஊழல் முறைகேடுகளும் தலைவிரித்தாடுகின்றன. சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கும் மருத்துவ நிபுணர்களுக்கும் பல்தேசிய மருந்து நிறுவனங்கள் கோடிக்கணக்கில் பணத்தைக் கொடுத்து தங்களது சந்தை வாய்ப்புக்களைப் போதுமானளவுக்கு உறுதி செய்துகொள்கின்றன. மருத்துவத்துறைக்கு நேர்ந்த கதி கல்வித்துறைக்கும் ஏற்படுமானால், இலங்கைச் சமுதாயம் சீரழிவுக்குள்ளாகும் அபாயம் இருக்கிறது.

இலங்கையில் எழுதப்படிக்கத்தெரிந்தவர்களின் வீதம் 90 ஆக இருக்கிறது. இது தெற்காசியாவிலேயே உயர்ந்த வீதமாகும். இதற்குப் பிரதான காரணம் கலாநிதி சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா அறிமுகப்படுத்திய இலவசக்கல்வி முறையேயாகும். அதற்கும் ஆபத்து வந்தால் இலங்கையின் நிலைமை....? ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக் கட்சி கூட்டமைப்பு எங்கே போகிறது? நிற்கிறது?

உள்நாட்டு அரசியல்

‘முதல் கோணல் முற்றிலும் கோணல்’ என்று ஒரு தமிழ்க் கருத்துண்டு. வடக்கு மாகாணசபை குறித்து சிந்திக்கும் போது, மேற்படி கருத்தே நினைவுக்கு வருகிறது. ஏனெனில், அந்தளவிற்கு குழப்பங்களினதும் உள் முரண்பாடுகளினதும் சாட்சியாக தற்போது வடக்குமாகாணசபை காட்சியளிக்கின்றது. இத்தகைய குழப்பங்களையும் முரண்பாடுகளையும் கடந்து செல்ல வேண்டிய நிலையில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் காணப்படுகின்றார். அவரால்

**தேர்தல் வெற்றிக்குப் பிறகு விக்னேஸ்வரன் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் முதலமைச்சராக காட்சியளிக்கவில்லை. அவர் தனித்து ஒரு கட்சியின் அடையாளத்தை சுமந்து திரிய வேண்டிய நிலையில் முடங்கியிருக்கிறார்.**

அது முடியுமா?

விடுதலைப் புலிகள் தமிழர் அரசியல் அரங்கிலிருந்து அகற்றப்பட்ட பின்னர், தமிழ் மக்களின் அரசியலைக் கையாளும் பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசமானது. கூட்டமைப்பு அதன் உருவாக்க நோக்கத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு பொறுப்பைக் கையேற்க நேர்ந்தது. இதனை கூட்டமைப்பின் அதிர்ஷ்டம் என்றும் சொல்லலாம். ஏனெனில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் என்பது, அதனை ஒரு தலைமைத்துவ தகுதிநிலைக்குக் கொண்டு செல்லும் நோக்கம் கொண்டதல்ல. மாறாக, விடுதலைப்புலிகளின் ஏகத் தலைமைத்துவத்தை ஏற்கச் செய்வதாகவே இருந்தது. அதாவது விடுதலைப்புலிகள், தமது இராணுவ வெற்றிகளால், கைவசப்படுத்திக் கொண்ட அரசியல் தலைமைத்துவத்தை, ஜனநாயக வெளிக்குள் நியாயப்படுத்தும் ஒரு உத்தியாகவே கூட்டமைப்பைக் கையாண்டனர் அல்லது பிரபாகரன் கையாண்டார். எனவே பயன்படுதல் என்பதைத் தவிர, கூட்டமைப்பிற்கு வேறு எந்த முக்கியத்துவமும் விடுதலைப் புலிகள் காலத்தில் இருந்திருக்கவில்லை. இதனால் அன்றைய கூட்டமைப்பில் ‘முரண்பாடு’ என்பதற்கான அவசியமும் இருந்திருக்கவில்லை. ஆனால், விடுதலைப் புலிகளின் வீழ்ச்சியைத் தொடர்ந்து கூட்டமைப்புக்கு ஒரு புதிய முகம் கிடைக்கிறது. அதாவது, அதுவரை விடுதலைப்புலிகளால் கையாளப்பட்டு வந்த கூட்டமைப்பு என்னும் பெறுமதியற்ற அமைப்பானது, ஈழத் தமிழர் அரசியலைக் கையாள வேண்டிய தகுதிநிலைக்கு சடுதியாக உயர்கிறது. இந்தப் பின்புலத்தில்தான் கூட்டமைப்பு முரண்பாட்டின் களமாகவும் மாறுகின்றது. கூட்டமைப்பைத் தொடர்ந்து துரத்திவரும் மேற்படி முரண்பாட்டை மூன்று கட்டங்களாக நோக்கலாம்.

முதலாவது கட்டம், கூட்டமைப்பு எவ்வாறானதொரு அரசியல் பண்புநிலையைத் தொடர்வது என்னும் கேள்வியில் தொடங்கியது. அதுவரை தாம் பின்பற்றிவந்த விடுதலைப்புலிகளின் சார்புநிலையைத் தொடர்ந்தும் கைக்கொள்ள முடியாதெனும் நிலைப்பாட்டை சம்பந்தன் அணியினர் எடுத்த போது கூட்டமைப்பில் உடைவு ஏற்பட்டது. அதுவரை கூட்டமைப்பில் ஒரு அங்கத்துவக்கட்சியாக இருந்துவந்த கஜேந்திர குமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மற்றும் விடுதலைப் புலிகளால் அரசியலுக்கு கொண்டுவரப்பட்ட செ.கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் போன்றவர்களும் கட்சியிலிருந்து வெளியேறினர். ‘தமிழ்த் தேசிய மக்கள்



யதீந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னணி' என்னும் புதிய அரசியல் அணி உருப்பெற்றது. தற்போது தங்களை தமிழரசுக் கட்சி ஒதுக்கிவருவதாகச் சத்தமிடும், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன், மேற்படி முரண்பாட்டின் போது சம்பந்தன் அணியுடனேயே கைகோர்த்திருந்தார். கஜேந்திரகுமாரின் வெளியேற்றத்துடன் கூட்டமைப்பானது, அரசியல் பண்புநிலையில், கடந்த காலத்தில் விடுதலைப் புலிகளால் பாதிக்கப்பட்ட கட்சிகளின் கூட்டாகவே காட்சியளித்தது. குறிப்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி (ஆரம்பத்தில் தமிழரசுக்கட்சி), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மற்றும் தமிழீழ விடுதலை இயக்கம் ஆகிய மூன்று கட்சிகளின் தலைவர்களும் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டவர்களாவர்.

> விக்னேஸ்வரன் தலைமையிலான வடமாகாண சபை கூட்டமைப்பை துரத்திக் கொண்டு வரும் உள் முரண்பாட்டின் மூன்றாவது கட்டமாகும். இந்த முரண்பாடுகளுடன் தொடர்புற்றிராத ஒருவர் விளக்கமும் தீர்வும் சொல்ல வேண்டிய நிலைமை தோன்றியிருப்பதுதான் விசித்திரமான விடயம்

எனவே விடுதலைப் புலிகளுக்குப் பின்னரான கூட்டமைப்பின் அரசியல் முன்னெடுப்பு என்பது, முற்றிலும் தங்களை ஒரு புலிநீக்கம் செய்வதாகவே அமைந்தது. இவ்வாறு புலிகளின் ஆதரவாளர்கள் முற்றிலுமாக அகற்றப்பட்ட சூழலில், விடுதலைப் புலிகளால் வழிநடத்தப்பட்ட கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்காத தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய இரண்டு கட்சிகளும் புதிதாக கூட்டமைப்பில் இணைந்து கொள்கின்றன. மேற்படி இரண்டு கட்சிகளின் இணைவுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது முற்றிலுமாக கடந்த காலங்களில் ஏதோவொரு வகையில் புலிகளால் பாதிக்கப்பட்டு, ஏதோவொரு வகையில் அரசாங்கங்களுடன் தொடர்பிலிருந்த கட்சிகளின் கூட்டாகவே மாறியது. இந்தப் பின்புலத்தில்தான் இரண்டாவது முரண்பாடு வெளிவருகிறது. அது கூட்டமைப்பை வழிநடத்தும் சாவியை யார் தொடர்ந்தும் வைத்திருப்பது என்பதில் துளிர்விட்டது. இந்த முரண்பாட்டுக் களத்தில் பலர் இருப்பது போன்று தோற்றமளித்தாலும், இது ஆழத்தில் சம்பந்தனுக்குப்பின்னரான கூட்டமைப்பின் தலைமைத்துவத்தை தன்வசப்படுத்திக் கொள்ள வேண்டுமென்னும் சுரேஷ் பிரேமச்சந்திரனின் விருப்புநிலைக்கும் அதனை ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது என்னும் தமிழரசுக் கட்சியின் காய்நகர்த்தல்களுக்கும் இடையிலான முரண்பாடாகும். ஆரம்பத்தில் இந்த முரண்பாடு, கூட்டமைப்பைப் பலப்படுத்த வேண்டும் என்னும் ஒரு கோஷமாக வெளிவந்தது. இதன்மூலம் ஏனைய கட்சிகளை ஓரணிப்படுத்தி தமிழரசுக் கட்சியை தனிமைப்படுத்த முடியுமென்பதே சுரேஷின் திட்டமாக இருந்தது. ஆனால் அது இன்றுவரை நிறைவு பெறவில்லை. ஏன்?

கூட்டமைப்பை ஒரு கட்சியாகப் பதிவு செய்ய வேண்டுமென்னும் சுரேஷின் விருப்பத்துடன் ஏனைய கட்சிகளான புளொட், டெலோ மற்றும் தமிழர் விடுதலைக்கூட்டணி ஆகிய கட்சிகளின் தலைமைக்கு உடன்பாடு இருப்பினும் கூட, சம்பந்தனுக்குப் பின்னரான தலைவராக சுரேஷ் பிரேமச்சந்திரனை ஏற்றுக்கொள்வதற்கு அவர்கள் தயாராக இல்லை. தமக்கிடையிலான முரண்பாடுகள் பற்றி அறிக்கைகளை பிரசவித்த அளவிற்கு, தமிழரசுக் கட்சிக்கு எதிராக, மேற்படி நான்கு கட்சிகளாலும் இதுவரை ஆக்கபூர்வமாக எதனையும் செய்ய முடியாமை க்கு இதுவே காரணமாகும். ஆனாலும், கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சியின் ஆதிக்கத்திற்கு ஒரு கடிவாளமிட வேண்டும் என்னும் தீராத ஆர்வம் ஏனைய கட்சிகளிடம் இருந்து கொண்டே இருக்கிறது.

இத்தகையதொரு பின்னணியில் தான், விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாக அரசியலில் பிரவேசித்திருக்கின்றார். விக்னேஸ்வரனின் அரசியல் பிரவேசம் சம்பந்தன், சுமந்திரன் ஆகிய இருவரைத் தவிர வேறு எவராலும் இலகுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதை இந்த இடத்தில் குறித்துக்கொள்ளலாம். தமிழரசுக் கட்சியின் பெரும்பான்மையினரது ஒரே தெரிவு ஆரம்பத்தில், அக் கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராஜாவாகவே இருந்தது. தமிழரசுக் கட்சியின் மாவட்டக் கிளைகளிலிருந்து அறிக்கைகள் வெளிவருமளவிற்கு, விக்னேஸ்வரன் பெரும்பாலானோரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக் கொள்ளப்படாத ஒருவரா கவே இருந்தார். இதனை தமிழரசுக் கட்சியினர் தன்னிச்சையாகச் செய்த னரா அல்லது மாவையின் வேண்டு கோளுக்கு இணங்கச் செய்தனரா என்பதற்குச் சான்றில்லை. இதிலுள்ள சுவாரஸ்யமான விடயம், தமிழரசுக் கட்சியினர் மாவைக்கு ஆதர வாக நின்ற போது அதுவரை அக்கட்சியு டன் பாம்பும் கீரியுமாக இருந்த சுரேஷ் பிரேமச்சந்திரனும் அதனை ஆதரித்து நின்றார். ஏனைய கட்சிக ளும் மாவை சேனாதிராஜாவிற்கு ஆதரவாகவே கையுயர்த்தி நின்றன. இதன் மூலம் அந்தச் சந்தர்ப்பத்தில் சம்பந்தன், சுமந்திரனைத் தவிர்த்து அனைவராலும் ஏகமனதாக முன் மொழியப்பட்ட ஒரு தலைவராக மாவை சேனாதிராஜாவே காணப்பட் டார். ஆனால், ஒரு கட்டத்துடன் மாவை இந்த ஓட்டப்பந்தயத்திலிரு ந்து விலகிக்கொண்டார். இதனை கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக் கும் சிரேஷ்ட தலைவர் ஒருவரது கூற்றில் சொல்வதானால், 'நாங்கள் எல்லோரும் மாவையுடன் இருந் தோம் ஆனால் மாவை மட்டும், மாவையோடு இருக்கவில்லை'. மாவை விலகிக் கொண்டபோது, விக் னேஸ்வரன் போட்டியின்றி அனைவ ரதும் தெரிவானார். ஆனால், இறுதி அர்த்தத்தில் கூட்டமைப்பின் அங்கத் துவக் கட்சிகள் அனைத்தினதும் ஒரு மித்த ஆதரவுடன்தான், அவர் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார் என லாம்.

விக்னேஸ்வரன் குறித்து கட்சிகள் என்னவகை முடிவைக் கொண்டிருந் தபோதிலும், அவரது பெயர் வெளித் தெரிந்த நாளிலிருந்து, தமிழ் ஊடகங் கள் அவருக்கு கொடுத்த முக்கியத் துவம் அதீதமானது. குறிப்பாக வடக் கில் விக்னேஸ்வரன் குறித்து ஒரு அலையை எழுப்புவதில் அனைத்து தமிழ் பெரும் பத்திரிகைகளும் முன் நின்றன. இதன் விளைவே வடக்கின் தேர்தல் வரலாற்றில் எவரும் பெற்றி ராத விருப்பு வாக்குகளை அவர் பெற முடிந்தது.

ஆரம்பத்திலிருந்தே தமிழ் அரசி யல் சூழலில், விக்னேஸ்வரன் புதிய தொரு அரசியல் கலாசாரத்திற்கு வித் திடுவார் என்னும் அபிப்பிராயங்கள் தாராளமாகவே உலவின. இதற்கு அவரது கடந்தகால கறைபடியாத நீதித்துறை வாழ்வும், தனிப்பட்ட வாழ்வியல் நேர்மையுமே காரண மாகும். அவர் முதலமைச்சர் வேட் பாளராக ஏகமனதாகத் தீர்மானிக்கப் பட்ட பின்னர், இந்துஸ்தான் ரைம்ஸ் சஞ்சிகைக்கு வழங்கிய நேர்காண லில், 'என்னளவில் அரசியல் அர்த்த முடைய ஒன்றல்ல' (Politics has no meaning for me) என்று குறிப்பிட்டி ருந்தார். ஒருவேளை, விக்னேஸ்வ ரன் உண்மையிலேயே அவ்வாறு கரு தியிருந்திருக்கலாம். ஆனால் அவர் அவ்வாறு கூறினாலும், அவர் முதல் வராக தெரிவுசெய்யப்பட்ட பின்னர், அவர் விரும்பியோ, விரும்பா மலோ, அரசியல் செய்ய வேண்டிய நிலைக்கு நகர்ந்திருக்கின்றார் என் பதே உண்மை. இனி விரும்பினாலும் விக்னேஸ்வரன், இந்த அரசியலிலி ருந்து தப்பிச் செல்ல முடியாது.

விக்னேஸ்வரன் முதலமைச்சராக தெரிவுசெய்யப்பட்ட பின்னர் இடம் பெற்ற, இரண்டு முக்கிய நிகழ்வுக ளின் போது அவர் கூட்டமைப்பின் முதல்வராக காட்சியளிக்கவில்லை. தனித்தே தெரிகின்றார் அல்லது தனித்து ஒரு கட்சி அடையாளத்தை சுமந்து திரிய வேண்டிய நிலைக்குள் முடங்கியிருக்கின்றார். அவர் முதல் வராக பதவிப்பிரமாணம் செய்து கொண்டபோது, கூட்டமைப்பின் ஏக மனதான ஆதரவைப் பெற முடிந்தி ருக்கவில்லை. வடமாகாணசபையின் முதலாவது நிகழ்வான உறுப்பினர் கள் பதவியேற்பின் போது, மூன்று கட்சிகளை பிரதிநிதித்துவம் செய்த ஒன்பது உறுப்பினர்கள் பங்குகொண் டிருக்கவில்லை. மேற்படி இரண்டு சம்பவங்களுக்கும் விக்னேஸ்வரன் பதிலளிக்க முற்படும் போதெல்லாம், அரசியல் அர்த்தமற்றது என்னும் அவரது கூற்றை அவரே பொய்ப் பிக்க நேரிடுகிறது.

நம்பிக்கையுடன் நோக்கப்பட்ட வடமாகாணசபை ஏன் ஆரம்பத்தி லேயே, கட்சி மோதல்களின் காட்சிய றையாகத் தெரிகிறது? ஆரம்பத்தில் எல்லோராலும் ஏகமனதாக ஆதரிக் கப்பட்ட விக்னேஸ்வரன், ஏன் தற் போது ஒரு ஒத்துழையாமை பிரச்சி னையை எதிர்கொண்டிருக்கின்றார்? உண்மையில் இது விக்னேஸ்வரனது பிரச்சினையல்ல. மாறாக, அவர் கூட் டமைப்பின் ஊடாக அரசியலில் பிர வேசித்திருப்பதுதான் பிரச்சினை ஆகும். ஏனெனில், முரண்பாடுகளின்

> **விக்னேஸ்வரன் காலத்தில் தமிழரசுக்கட்சியும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் நேர்கோட்டில் பயணிக்காமல் போகலாம். இரண்டும் எதை நோக்கி பயணிக்கின்றன என்பதை கண்டு கொள்வதே கடினமாகலாம். அத்தகையதொரு நிலையில் அவ்விரு அமைப்புக்களும் செல்லும் திசையை வேதனையுடன் உற்று நோக்கும் ஒருவராக விக்னேஸ்வரன் அரசியல் நாட்களை கடத்தி விட முடியாது**

ஆடுகளமாகக் கிடந்த கூட்டமைப் பின் ஊடாக விக்னேஸ்வரன் அரசிய லில் பிரவேசித்திருப்பதால், அந்த முரண்பாடுகளை காவித்திரிய வேண் டிய இக்கட்டான நிலைக்கு அவர் தற் போது ஆளாகியிருக்கின்றார். உத்தர வுகளைப் போட்ட ஒருவராக மட் டுமே இருந்தவரான விக்னேஸ்வர னுக்கு முன்னால் பலர் இப்போது உத் தரவுகளுடன் இருக்கின்றனர். ஏனெ னில், இது அர்த்தமற்ற அரசியல் அல்ல, பலருக்கு பலவகையான அர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்தங்களை வழங்கியிருக்கின்ற, வழங்கப் போகின்ற, அரசியல் ஆகும். விக்னேஸ்வரன் 'இது எனக்கு ஒரு பதவி மட்டுமே' என்று இலகுவாகச் சொல்லிச் செல்வது போன்று, கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் மற்றவர்களால், அவ்வாறு சொல்லிச் செல்ல முடியாது. ஏனெனில் அவர்களுக்கென்று கட்சியும் அக்கட்சியைச் சார்ந்து பலரும் உண்டு.

இந்தச் சூழலில், விக்னேஸ்வரன் முன்னாலுள்ள தெரிவுகள் என்னவாக இருக்க முடியும்? 'என்னளவில் அரசியல் அர்த்தமுடைய ஒன்றல்ல' என்று அவர் தொடர்ந்தும் சொல்லிக் கொண்டிருக்க முடியுமா?

விக்னேஸ்வரன் தலைமை தாங்கப் போகின்ற வடமாகாணசபை எதிர்காலத்தில் மூன்று அணிகளாகப் பிளவுறுவதற்கான சாத்தியங்களையே கட்டியம் கூறி நிற்கிறது. தமிழரசுக் கட்சி அணியினர், ஏனைய கட்சிகளான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் மற்றும் செல்வம் அடைக்கலநாதனை தலைவராக ஏற்றுக்கொள்ளாத டெலோ அணியினர் ஆகியோர் ஒரு அதிருப்தியாளர் குழுவாகத் தொழிற்படுவர். அதற்கான வாய்ப்பே தூக்கலாகக் காணப்படுகிறது. மூன்றாவது அணி புலிகளது அரசியலின் தொடர்ச்சியாக தங்களைக் காண்பிக்க முனையலாம். உறுப்பினர் பதவியேற்பு நிகழ்வின் போது, விடுதலைப் புலிகளால் வழிநடத்தப்பட்ட பொங்கு தமிழ் நிகழ்வுகளில் அணியப்படும் சிகப்பு-மஞ்சள் கலவையான சாறி ஒன்றை அனந்தி சசிதரன் அணிந்திருந்ததானது தற்செயலான ஒன்றல்ல. வடமாகாணசபையில் புலிகளுக்கான குரலும் இருக்கும் என்பதற்கான கட்டியம் கூறலே அது. ஏலவே விக்னேஸ்வரன் புலம்பெயர் புலி ஆதரவுத் தரப்பினரால் கடுமையாக எதிர்க்கப்பட்டு வருகின்ற பின்னணியில் வடமாகாணசபைக்குள்ளேயே, தங்களுக்கான ஆதரவுச் சக்திகளை அவர்கள் அணிதிரட்டக் கூடிய ஏதுநிலையே காணப்படுகின்றது. இவற்றை எல்லாம் வெற்றிகரமாக கடந்து சென்றால்தான் விக்னேஸ்வரன் தன்னுடைய புதிய பதவியை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்த முடியும். ஆனால் அவரால் இவற்றையெல்லாம் வெற்றிகரமாகக் கடந்துசெல்ல முடியுமா?

இந்தப் பின்புலத்தில் நோக்கினால், விக்னேஸ்வரன் தலைமையிலான வடக்கு மாகாணசபை என்பது கூட்டமைப்பை துரத்திவரும் உள்முரண்பாட்டின் மூன்றாவது கட்டமாகும். இதிலுள்ள வேறுபாடு என்னவென்றால், இந்த முரண்பாடுகளுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய அவசியமில்லாத, இந்த முரண்பாடுகளுடன் எந்தவகையிலும் தொடர்புற்றிராத ஒருவர், இந்த முரண்பாடுகளுக்கெல்லாம் விளக்கமும் தீர்வும் சொல்ல வேண்டிய நிலைமை தோன்றியிருப்பதுதான். மேற்படி நிலைமையை விக்னேஸ்வரன், ஒரு கட்சி அரசியல் வாதியாக எதிர்கொள்ளப் போகின்றாரா அல்லது, கூட்டமைப்பின் ஒரு அரசியல் தலைவராக எதிர்கொள்ளப்போகின்றாரா என்பதைப் பொறுத்தே, நிலைமைகளின் ஏற்றமும் இறக்கமும் ஏற்படும். ஏனெனில், விக்னேஸ்வரனிடம் மக்கள் ஒப்படைத்திருக்கும் பொறுப்பானது, அவர் இந்துஸ்தான் ரைம்ஸ்ஸுக்கு சொல்லியிருப்பது போன்று வெறும் ஒரு பதவியல்ல. இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் தலைமைத்துவம். யானை தன் பலம் அறியாது என்பது போல் விக்னேஸ்வரனும் ஒருவேளை தான் வரித்துக் கொண்டிருக்கும் பொறுப்பின் கனதி அறியாமல் இருக்கின்றாரா? வடக்கு மாகாணசபைத் தேர்தலில் கூட்டமைப்பு பெற்ற அமோக வெற்றியுடன், ஈழத் தமிழர் அரசியல் என்பதன் அடுத்த கட்டமானது, முற்றிலும் வடக்கு மாகாணசபையை மையப்படுத்திய ஒன்றாக மாறிவிட்டது. அதனைக் கையாளும் வரலாற்றுப் பொறுப்பு விக்னேஸ்வரனிடம். இந்தப் பின்னணியில் பார்த்தால், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு அடுத்த நிலைத் தலைவராக விக்னேஸ்வரனே காணப்படுகின்றார்.

இவற்றை அடியொற்றி மேலெழும் கேள்வி, மக்கள் விக்னேஸ்வரனிடம் ஒப்படைத்திருக்கும் வரலாற்றுப் பொறுப்பை விக்னேஸ்வரன் தமிழர் அரசியல் வரலாற்றில் தனக்கென ஒரு இடத்தைப் பதித்துக்கொள்வதற்கான வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்வாரா அல்லது, தமிழரசுக் கட்சி - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்னும் முரணுக்குள் சிக்கி, இறுதியில் தனது நீதித்துறை வாழ்வின் நற்பெயரையும் சீரழித்துக் கொள்வாரா? விக்னேஸ்வரன் மாகாணசபை உறுப்பினர்களுக்கான பதவியேற்பு நிகழ்வில் ஆற்றிய உரை அவர் மக்கள் நலன் மீது கொண்டிருக்கும் தீரா காதலுக்குச் சான்று பகர்கிறது. அவர் தனது அரசியல் வாழ்வில் 'மக்கள் நலன்' என்னும் ஒன்றைத்தவிர, வேறு எதற்கும் முன்னுரிமையளிக்கப் போவதில்லை என்பதை அவ்வுரை கோடிட்டுக்காட்டுகிறது. மக்கள் நலன் மட்டுமே முன்னுரிமையானால், தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்னும் கட்சிக் கவசங்கள் எதுவும் அவருக்கு தேவைப்படாது. ஏனெனில், முதலமைச்சர் விக்னேஸ்வரன் காலத்தில் ஒரு வேளை தமிழரசுக் கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒரேநேர் கோட்டில் பயணிக்காது போகலாம். இரண்டும் எதை நோக்கிப் பயணிக்கின்றன என்பதைக் கண்டுகொள்வதே கடினமாகலாம். அத்தகையதொரு நிலைமையில், அவ்விரு அமைப்புகளும் செல்லும் திசையை வேதனையுடன் உற்றுநோக்கும் ஒருவராக விக்னேஸ்வரன் தன் அரசியல் நாட்களை கழித்துவிட முடியாது. ஏனெனில் இது விக்னேஸ்வரன் காலம் - இனி அவர் அர்த்தமற்றது என்று சொல்லிய 'அரசியல்' அவருக்கான அர்த்தங்களை எழுதும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாநிதி ஜெஹான் பெரேரா



பொதுநலவரசு அமைப்பில் அங்கம் வகிக்கும் சகல நாடுகளுமே அவற்றின் அரசாங்க தலைவர்களை கொழும்பு உச்சி மகாநாட்டிற்கு அனுப்பி வைப்பதை உறுதி செய்வதே இலங்கை அரசாங்கம் எதிர் நோக்குகின்ற மிகப் பெரிய சவாலாகும்

# இலங்கை அரசும் இந்திய நெருக்குதலும்

உள்நாட்டு அரசியல்

இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் அண்மையில் இலங்கைக்கு மிகவும் தருணப் பொருத்தமான விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் நடத்திய பேச்சுவார்த்தை திருகோணமலை மாவட்டத்தில் சம்பூர் அனல் மின் நிலையத்துக்கான உடன்படிக்கையில் கைச்சாத்து, கொழும்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களுடனும் யாழ்ப்பாணத்தில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுடனும் நடத்திய சந்திப்பு ஆகியவை குர்ஷித்தின் விஜயத்தின் போதான முக்கிய நிகழ்வுகள். இவ்வருடத்தின் நடுப்பகுதியில் இவையெல்லாம் சாத்தியமாகக்கூடிய நிகழ்வுகளாக இருக்கவில்லை. அரசாங்கத்திற்குள் இருக்கும் கடும் போக்காளர்களுடன் தங்களை இணைத்துக்கொண்ட தேசியவாத பௌத்த குழுக்கள் மாகாணசபைகள் முறையை இல்லாதொழிக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்த நேரம் அது. மாகாண சபைகளுக்கு இருக்கும் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களையும் வடமாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் மீண்டும் இணைப்பதற்கு வசதியானதாக அமையக்கூடியதாக இருக்கும் ஏற்பாடுகளையும் அகற்றும் நோக்கில் அரசியலமைப்புக்கு 19ஆவது திருத்தத்தைக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நேரம் அது. இவ்வருடம் ஜூன் மாதமளவில் இந்தியாவுடனான இலங்கை உறவுகள் கசப் படைந்திருந்தன போலத் தோன்றியது. எதைச் செய்வது என்று இந்தியாவுக்கும் தெரியவில்லை. இலங்கையில் இடம்பெற்றுக் கொண்டிருந்த நிகழ்வுப் போக்குகள் தொடர்பில் தனது அதிருப்தியை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் பகிரங்கமாகவே வெளிப்படுத்தினார். இலங்கையின் அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தம் 1987 ஜூலை இந்திய- இலங்கை சமாதான உடன்படிக்கையின் தவிர்க்க முடியாத அங்கம் என்றும் அது ஒரு சர்வதேச உடன்படிக்கை என்பதால் ஒருதலைப்பட்சமாக மாற்றமுடியாது என்றும் இந்திய அரசாங்கத்தின் பேச்சாளர்களும் உறுதிபடத் தெரிவித்தனர். ஆனால், இறுதியில் வெற்றிகண்டது சட்ட ரீதியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குவாதங்கள் அல்ல, நிலைவரங்கள் வேண்டி நிற்பதற்கேற்ப விவகாரங்களை நுட்பமாகக் கையாளும் திறமையுடைய இந்திய இராஜதந்திரமேயாகும். அடுத்தமாதம் கொழும்பில் நடைபெறவிருக்கும் பொதுநலவரசு உச்சிமகாநாடே இந்திய இராஜதந்திரத்துக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுத்தது. உச்சிமகாநாட்டில் இந்தியாவைப் பங்கேற்கச் செய்ய வேண்டுமென்பதில் இலங்கை அரசாங்கம் கொண்டிருந்த ஆர்வமும் அக்கறையும் இந்தியாவின் விருப்பங்களுக்கு இசைவான முறையில் அரசாங்கத் தலைவர்களைச் செயற்பட நிர்ப்பந்தித்தது எனலாம்.

இலங்கையில் பொதுநலவரசு உச்சி மகாநாட்டை நடத்துவதற்கு வாய்ப்பைப் பெற்றுக்கொண்டமை வெளியுறவு விவகாரங்களைப் பொறுத்தவரை அரசாங்கம் கண்டிருக்கக்கூடிய வெற்றிகளில் உச்சமாக அமைந்தது. இந்த மகாநாட்டைச் சிறப்பான முறையில் நடத்துவதற்காக அரசாங்கம் அதனாலான சகல நடவடிக்கைகளையும் முழுமூச்சில் செய்து கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. கொழும்பு நகரின் தோற்றத்தையே மாற்றும் வகையில் திருத்த வேலைகளும் நிர்மானப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மகாநாட்டுக்காக வருகை தரவிருக்கும் வெளிநாடுகளின் தூதுக் குழுக்களுக்கு வசதிகளைச் செய்வதற்கான ஏற்பாடுகளுக்காக பாடசாலைகள் கூட மூடப்படுகின்றன. கொழும்பு நகரை அழகாக்கும் நடவடிக்கைகளின் விளைவாக பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. இவ்வாறு செலவு செய்வது நியாயமானதா, பெறுமதியானதா என்று கேள்வியும் கிளம்பவே செய்கிறது. உச்சிமகாநாட்டுக்காக வெளிநாடுகளில் இருந்து தூதுக் குழுக்கள் வருகை தருவதற்கு முன்னதாக புதுப்பிப்புப் பணிகள் பூர்த்தியடையுமா என்ற சந்தேகங்களும் கிளப்பப்படுகின்றன.

ஆனால், இந்த ஏற்பாடுகள் அல்ல, பொதுநலவரசு அமைப்பில் அங்கம் வகிக்கும் சகல நாடுகளுமே அவற்றின் அரசாங்கத்தலைவர்களை கொழும்பு மகாநாட்டுக்கு அனுப்பி வைப்பதை உறுதி செய்வதே இலங்கை அரசாங்கம் எதிர்நோக்குகின்ற மிகப்பெரிய சவாலாகும். கொழும்பில் உச்சி மகாநாடு நடத்தப்படுவதற்கு எதிராக வலிமையான எதிர்ப்பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இலங்கை அரசாங்கப் படைகளினால் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொதுநலவரசு அமைப்பில் உள்ள சில நாடுகளுக்கு இருக்கும் அக்கறைகளே உச்சிமகாநாட்டை நடத்துவதற்கான வாய்ப்புக் கோரி இலங்கை செய்த விண்ணப்பம் மீது பொதுநலவரசு தலைவர்கள் 2009ஆம் ஆண்டில் தீர்மானம் எடுப்பதைத் தாமதித்தன. ஆனால், 2013 உச்சிமகாநாட்டை கொழும்பில் நடத்துவதற்கு 2011 ஆம் ஆண்டில் பொதுநலவரசுத் தலைவர்கள் இணங்கிக் கொண்டார்கள். இத்தீர்மானத்தை மனித உரிமைகள் அமைப்புகள் ஆட்சேபித்தன.

2009 மேயில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த பிறகு இலங்கை அரசாங்கம் போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளினதும் புலம்பெயர் தமிழர்களினதும் நெருக்குதல்களுக்கு உள்ளாகியிருக்கிறது. ஆனால், பொதுநலவரசு உச்சி மகாநாட்டை நடத்துவதற்கு கொழும்பு பொருத்தமான இடமல்ல என்று பிரச்சினை கிளப்பப்பட்டபோது அந்த அமைப்பில் அங்கம் வகிக்கும் பல நாடுகள் அதை அலட்சியம் செய்துவிட்டன. கனடா மாத்திரமே அதன் பிரதமர் கொழும்பு உச்சி மகாநாட்டில் பங்கேற்கமாட்டார் என்று அறிவித்திருக்கிறது. ஆரம்பத்தில் சில அக்கறைகளைக் கிளப்பியபோதிலும், இந்த விடயத்தில் இந்தியா, (குறிப்பாக, வடமாகாண சபைத்தேர்தலை திட்டமிட்டபடி நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்ததையடுத்து) பெருமளவுக்கு மௌனத்தையே சாதித்தது. உச்சிமகாநாட்டில் பங்குபற்றக்கூடிய இந்தியத் தூதுக்குழுவின் மட்டம் குறித்து தெளிவாக எதையும் சொல்லாமல் இருந்துவந்தது இந்தியா. ஆனால், இறுதியில் மகாநாட்டில் பங்கேற்க மன்மோகன் சிங் முடிவெடுப்பார் என்ற நம்பிக்கை இன்னமும் இருக்கிறது.

> எதைச்செய்வதை இந்தியா விரும்பவில்லையோ அதை இலங்கை அரசாங்கம் செய்யவில்லை. மாகாண சபைகளின் அதிகாரங்களைக் குறைக்கவோ அல்லது மாகாண சபையை இல்லாதொழிக்கவோ அரசியலமைப்புக்கான 19ஆவது திருத்தத்தை அரசாங்கம் கொண்டுவந்து நிறைவேற்றவில்லை. எனவே உச்சி மகாநாட்டில் பங்கேற்பதை தவிர்ப்பதற்கோ தூதுக்குழுவின் மட்டத்தை தரம் குறைப்பதற்கோ இந்தியாவுக்கு காரணம் எதுவும் இல்லை.

தேர்தல் நடைபெற்று வடமாகாண சபையும் அமைக்கப்பட்டதன் பின்னர் இந்திய வெளியுறவு அமைச்சர் இலங்கைக்கு விஜயம் செய்தது மிகவும் குறிப்பாக கவனிக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும். எதைச் செய்வதை இந்தியா விரும்பவில்லையோ அதை இலங்கை அரசாங்கம் செய்யவில்லை. தனது தேசியவாத நேச அணிகள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டதைப் போன்று மாகாண சபைகளின் அதிகாரங்களைக் குறைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவோ அல்லது மாகாணசபை முறையை இல்லாதொழிக்கவோ அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தை அரசாங்கம் கொண்டுவந்து நிறைவேற்றவில்லை. எனவே, பொதுநலவரசு உச்சி மகாநாட்டில் பங்கேற்பதைத் தவிர்ப்பதற்கோ அல்லது கனடா செய்ததைப் போன்று மகாநாட்டில் பங்குபற்றக்கூடிய தூதுக்குழுவின் மட்டத்தை தரங்குறைப்பதற்கோ இந்தியாவுக்கு எந்தக் காரணத்தையும் இலங்கை அரசாங்கம் வழங்கவில்லை.கனடாவின் கவனம் மனித உரிமை மீறல்களிலும் போர்க்குற்றங்களிலும் குவிந்திருக்கின்ற அதேவேளை, இந்தியாவின் அக்கறை 13ஆவது திருத்தத்தின் மீதும் மாகாணசபை முறையைப் பேணிக்காப்பதன் மீதுமே இருக்கிறது. இந்தியாவுக்கு அளித்த வாக்குறுதியை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றியிருக்கிறது. அதனால், நவம்பர் உச்சிமகாநாட்டில் இந்தியப் பிரதமர் பங்கேற்கக் கூடிய சாத்தியங்கள் இருக்கின்றன எனலாம்.

உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பிறகு இனநெருக்கடியுடன் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் இடம்பெற்றிருக்கக்கூடிய நிகழ்வுப் போக்குகளில் வடமாகாண சபைத் தேர்தல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். வடமாகாணசபை நிறுவப்பட்டமை நீதியான அரசியல் தீர்வொன்றை நோக்கிய திசையில் மிகவும் சிறந்த சாத்தியமான முன்னேற்றகரமான ஒரு நடவடிக்கையாகும். இதன் மூலமாக, ஏனைய மாகாணங்களில் உள்ள மக்கள் அனுபவிக்கின்ற (பரவலாக்கப்பட்ட) அதிகாரங்களை வடமாகாண மக்களும் அனுபவிக்கக் கூடியதாக இருக்கும். தமிழ் மக்கள் மீது காட்டப்பட்ட பாரபட்சமே இனநெருக்கடிக்கான அடிப்படைக் காரணிகளில் பிரதானமான இடத்தைப் பிடிக்கிறது. நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள மக்கள் அனுபவிக்கின்ற அதிகாரங்களை வடபகுதி மக்கள் எந்தளவுக்கு அனுபவிக்கக்கூடியதாக இருக்கிறதோ அந்தளவுக்கு பாரபட்சமும் குறைவானதாக இருக்கும். பரவலாக்கப்பட்ட அதிகாரங்களையும் வளங்களையும் அதிகரிப்பதற்கு ஏனைய எட்டு மாகாணங்களுடனும் வடமாகாணமும் இணைந்து கொள்வதற்கான வாய்ப்பை இது ஏற்படுத்திக் கொடுக்கும். ஏனைய மாகாணங்களும் கூட கூடுதல் அதிகாரங்களையும் வளங்களையும் பெறுவதற்கு விரும்பும்.

இப்போது வடமாகாண சபை நிறுவப்பட்டுவிட்டது. 'குழந்தைப் பருவத்திலேயே' அந்த மாகாண சபை இலங்கை அரசாங்கத்தினால் மலினப்படுத்தப்படாதிருப்பதை உறுதிசெய்வதே தற்போதுள்ள சவாலாகும். உச்சி மகாநாட்டில் கலந்து கொள்ள இந்தியப் பிரதமர் வருவதை உறுதி செய்ய வேண்டுமென்பதில் இலங்கை அரசாங்கத்துக்கு இருக்கும் ஆர்வமும் அக்கறையும் 13ஆவது திருத்தத்தின் பிரகாரம் வடமாகாண சபைக்கு மேலும் அதிகாரங்களை வழங்குவதில் நாட்டம் காட்டுவதற்கு இலங்கை அரசாங்கத்தை தூண்டக் கூடும். இதைவிடக் குறைவான எதுவுமே இந்திய அரசாங்கத்துக்கு அதிருப்தியையே ஏற்படுத்தும்;

*(36ஆம் பக்கம் பார்க்க)*

**GET சமகாலம் DELIVERED TO YOUR HOME**

3 months 600/-

6 months 1200/-

1 Year 2,400/-

Please complete the form given below, along with your Cheque/Money Order written in favour of 'Express Newspapers (Ceylon) (Pvt) Limited' and send it to our Head Office at No185,Grandpass Road, Colombo 14,Sri Lanka.
Tel:+94-11-7322700 / 7738046 Fax:+94-11-7767700

*For more details, please contact :*
Overseas & Local Subscriptions
**S.Surainie** - E-mail : subscription@kalaikesari.lk
Tel:+94 11 7322783

Subscription rates (inclusive postage) and delivery within Colombo.

ORDER FORM :

சமகாலம்

**Manager Subscriptions**
**Samakalam**
**No. 185, Grandpass Road, Colombo - 14,**
**Sri Lanka.**
**Tel : +94-11-7322783 / +94-11-7322741**
**Fax : +94-11-4614371**

FOLD HERE

**SUBSCRIBER INFORMATION :**

Title :..................... Last Name :..........................................

First Name :.....................................................................

Organization :..................................................................

Address :..........................................................................

.......................................................................................

Phone :.............................. Mobile :...................................

Fax :...................................... E-mail :..................................

Payment : Amount Rs..........................

☐ Cash ☐ Cheque

Payable to : **Express Newspapers (Cey.) (Pvt) Ltd.**

Bank :.................................. Cheque No :............................

Signature :.............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

# குற்றுயிராகிக்கிடக்கும் அதிகாரப் பகிர்வு



எம்.ஏ.சுமந்திரன்
எம்.பி.

## உயர் நீதிமன்றம் உணர்த்தும் உண்மை

அரசாங்கம் வட மாகாண சபைக்கு பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்கப்போவதில்லை என்பதை வெளிப்படையாகவே கூறிக்கொண்டிருந்த வேளையில் காணி அதிகாரம் தொடர்பில் உயர் நீதிமன்றம் தீர்ப்பை வழங்கியிருக்கிறது. பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றையும் அரசாங்கம் நியமித்திருக்கிறது. இத்தீர்ப்பு அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தை இலகுவாக்கி அதன் சுமையை குறைப்பதாகவே நோக்கப்படும்

வடமாகாண சபைக்கான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் நடைபெற்று இரண்டு நாட்கள் மட்டுமே கழிந்த நிலையில், சென்ற வாரம் உயர் நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வெளியிட்டிருக்கிறது. இது மாகாணசபைகளுக்கு பகிர்வு செய்யப்பட்ட காணி அதிகாரம் பற்றிய தீர்ப்பாகும். இத்தீர்ப்பு வந்திருக்கும் சமயம் எது என்பது முக்கியம். இன்று இந்தத் தீர்ப்பு இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் யாவரது கவனத்திற்கும் உரியதாகி விட்டது. இத்தீர்ப்பு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, வடமாகாண சபையை பெரும்பான்மைப்பலத்துடன் கைப்பற்றியிருக்கும் கட்சி என்ற முறையில் இதற்கு என்ன சொல்லப் போகிறது. எவ்வாறு எதிர்வினையாற்றப்போகிறது என்ற எதிர்பார்ப்பைத் தோற்றுவித்துள்ளது. அவ்வகையில் முழுக்கவனமும் தவிர்க்க முடியாதபடி த.தே.கூ. மீது திரும்பியுள்ளது.

இத்தீர்ப்பின் அரசியல் பின்விளைவுகள் எவை என்பது பற்றி நான் கருத்துரைப்பதற்கு முன்னர் இத்தீர்ப்பின் சட்ட விளைவுகள் யாவை என்பது பற்றிக் கூறுவது பொருத்தம் எனக் கருதுகிறேன். இத்தீர்ப்பில் மூன்று வெவ்வேறு அபிப்பிராயங்களை மூன்று நீதிபதிகள் பதிவு செய்த பின்னர் மூவரும் ஒரே முடிவுக்கு வந்துள்ளனர். இந்த முடிவுதான் என்ன? காணியின் உடைமையை மீளப் பெறுதல் சட்டத்தின் (recovery and possession act) கீழ் வெளியகற்றல் கட்டளையை விடுக்கும் அதிகாரம் மாகாண சபைக்கு இல்லை. அந்த அதிகாரம் மத்திய அரசுக்குத்தான் உண்டு என்பதே உயர் நீதிமன்றின் முன்வைக்கப்பட்ட கேள்வி. உயர்நீதிமன்றம் இம்மனுவைப் பரிசீலித்து மேன்முறையீட்டு நடவடிக்கை தொடரலாம் எனக் கட்டளையிட்ட போது சட்டம் தொடர்பான இருவினாக்களை பரிசீலிப்பதற்கு விரும்பியது. இவ்விரு வினாக்களும் எவையென முதலில் பார்ப்போம்.

1. மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தின் (High court) நியாயாதிக்கம் பற்றிய அரசியல் யாப்பு ஏற்பாடுகள், அதிகாரப் பகிர்வு தொடர்பான அரசியல் யாப்பு ஏற்பாடுகளில் இருந்து வேறானவை. ஆகையால் மாகாணமேல் நீதின்றத்தின் முன்னால் உள்ள கேள்வி எதுவோ அதுவல்லாத எந்தவொரு விடயம் பற்றியும் நீதிமன்றம் கூறும் முடிவு புறக்கூற்று (Obiter dictum) என்று கருதப்படுமே அல்லாது நீதிமன்றத்தின் முடிவுக்கான அடிப்படை நியாயம் (Ratio decided) ஆகாது. 2. இரண்டாவதாக, மூன்று தீர்ப்புகளும் ஒரே முடிவுக்கு வருகின்ற போதும் நீதிபதிகள் ஒவ்வொருவரும் ஒன்றில் இருந்து ஒன்று வேறுபட்டதான வாதங்களின் பயனாக அந்த முடிவுக்கு வந்துள்ளனர். உதாரணமாக, வாசுதேவநாணயக்கார எதிர் என். சொக்சி வழக்கில் காணிச் சொத்துரிமை மசோதா (Land ownership bill) தொடர்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமன்றம் கூறிய சட்டவிளக்கத்தை வெளிப்படையாகவே நிராகரிக்கும் முறையில் ஒரு நீதிபதி கருத்துரைக்கின்றார். மேற்குறித்த மசோதாவில் ஜனாதிபதியின் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ஏனெனில் ஜனாதிபதி அரசாங்கக் காணியை 'மாகாணசபையின் ஆலோசனைப் படியே பராதீனப்படுத்தவோ வேறு வகையில் மாற்றவோ முடியும் என்று 13 ஆவது திருத்தம் கூறியிருந்தது. ஒரு நீதிபதி இதனை நிராகரிக்கும் போது இன்னொருவர் அம்மசோதா தொடர்பான தீர்ப்பில் இருந்து மேற்கோள்காட்டி தனது உடன்பாட்டைத் தெரிவிக்கிறார். ஆகையால், அரசாங்கக் காணியை பகிர்ந்தளிப்பதில் தற்போதுள்ள சட்டநிலையாது என்பதை இத்தீர்ப்பு மாற்றவில்லை எனலாம். ஏனெனில், நீதிமன்றத்தில் முற்தீர்ப்பு விதிப்படி (Rule of precedenat) நோக்கும் போது ஓர் உண்மை தெரியவரும். பந்தஹாமி எதிர்சேனநாயக்க வழக்கில் நீதிமன்றம் இதுபற்றி எடுத்துரைத்தது. மூன்று நீதிபதிகள் கொண்ட மன்று முந்திய தீர்ப்பொன்றில் ஏகமனதாக தீர்த்திருந்த ஒரு விதியைப் பின்பற்றும் முடிவை இன்னொரு மூன்று பேர் கொண்ட நீதிபதிகள் மன்று ஏற்றுக்கொள்ளுமேயானால் அவ்விதி ஏற்புடையதாகும். ஆனால், மூன்று நீதிபதிகளும் ஒருமித்த கருத்திற்கு வரமுடியாதவர்களாகி கருத்துபேதத்தைத் தெரிவிக்குமிடத்து குறித்த விதி பற்றி உயர் நீதிமன்றத்தின் நிறைமன்று (Culler beach) அதனை முடிவு செய்ய வேண்டும். மேலே எடுத்துக்காட்டிய காணி உடைமைச் சட்ட மசோதா தொடர்பான தீர்ப்பிலும் வாசுதேவ நாணயக்கார வழக்கிலும் மூன்று பேர் கொண்ட நீதிபதிகள் மன்றே தீர்ப்பை வழங்கியது. ஆதலால் இன்னொரு மூன்று பேர் கொண்ட மன்றின் தீர்ப்பு முன்னைய விதியை மாற்றியதாகக் கொள்ள முடியாது. அண்மையில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பானது காணியைப் பராதீனப்படுத்தல் தொடர்பான தற்போதைய சட்டநிலையை மாற்றியுள்ளதாகவும் கூற முடியாது. காணி தொடர்பான இந்தப்பிரச்சினை மிக முக்கியமானதொன்று. ஏனெனில், அடுத்தடுத்து பதவிக்கு வந்த இலங்கையின் அரசாங்கங்கள் தென்பகுதியின் சிங்களவர்களுக்கு இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணிகளை வழங்கி குடியேற்றும் திட்டத்தை தொடர்ந்து செயற்படுத்தி வந்துள்ளன. இதன்மூலம் இந்தப் பகுதிகளின் சனத்தொகைக் கட்டமைப்பை மாற்றுவதை நோக்காகக் கொண்டு அரசாங்கங்கள் செயற்பட்டன. தற்போது ராஜபக்ஷ அரசாங்கத்தினால் இத்திட்டம் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் இத்தீர்ப்பின் அரசியல் பின்விளைவுகள் தெட்டத் தெளிவானவை. 13 ஆவது அரசியல் யாப்புத் திருத்தம் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான சர்வதேச உடன்படிக்கையின் பயனாகக் கொண்டுவரப்பட்டது. அத்திருத்தம் மாகாணசபைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அதிகாரங்களை வழங்கியது. இந்த யாப்புத்திருத்தம் அரசியல்வாதிகள், சிவில் உத்தியோகத்தர்கள், வழக்குரைஞர்கள், நீதிபதிகள் ஆகியோராலும் சர்வதேச சமூகத்தினாலும் மாகாணசபைகளுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளித்த சட்டமாகவே கருதப்பட்டுவந்துள்ளது. காணியதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன என்பதில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லை. இதனைக் காணி அமைச்சும் காணி அபிவிருத்தித் திணைக்களமும் காலத்திற்குக் காலம் வெளியிட்ட சுற்று நிருபங்களே சான்றாதாரமாக அமைகின்றன. இந்தக் கருத்து மேன்முறையீட்டு நீதிமன்றம், உயர்நீதிமன்றம் என்ற இரண்டினாலும் வழங்கப்பட்ட தீர்ப்புகளாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இப்போது திடீரென காணி அதிகாரங்கள் ஒரு போதும் பகிரப்பட்டிருக்கவில்லை. நீதிமன்றம் அறிவிக்கின்றது. 25 வருடங்களாக எவ்விதமாக 13 ஆவது திருத்தம் விளங்கிக் கொள்ளப்பட்டதோ அது தவறானது என்று இப்போது சொல்கிறது. மத்திய அரசு தனது நல்லெண்ணத்தின் படி மாகாண சபைக்குக் கொடுத்துள்ள அரசாங்கக் காணிகளை நிர்வகிப்பது தான் மாகாணசபைகளின் வேலையே தவிர அவற்றுக்குக் காணி அதிகாரங்கள் கிடையாது என்று கூறப்படுகிறது.

இத்தீர்ப்பு என்ன சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்டிருக்கிறது என்பது முக்கியமானது. வடக்கு மாகாண சபையின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் முடிந்து இரு நாட்களுக்குப் பின் இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. வடமாகாண மக்கள் சுய ஆட்சிக்கும் அதிகாரப்பகிர்வுக்குமான தமது விருப்பத்தை இதன்மூலம் வெளிப்படுத்தியுள்ளார்கள். ஆனால் மாகாணசபை இயங்கத் தொடங்கு முன்னரே இத்தீர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதனையிட்டு பல கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. அரசாங்கம் வடக்கு மாகாணசபைக்கு பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்கப்போவதில்லை என்பதை வெளிப்படையாகவே கூறிக் கொண்டிருந்த வேளையில் இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அரசாங்கம் பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை நியமித்துள்ளது. இக்குழுவில் உள்ளவர்கள் பெரும்பான்மையினர் அர்த்த புஷ்டியுள்ள அதிகாரப் பகிர்வுக்கு எதிரானவர்கள். இத்தெரிவுக்குழுவின் பணி அதிகாரப் பகிர்வை மேலும் பலவீனப்படுத்துவதாகவே இருக்கும். உயர் நீதிமன்றத்தின் இத்தீர்ப்பு அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தை இலகுவாக்கி அதன் சுமையைக் குறைப்பதாகவே நோக்கப்படும். அரசாங்கம் உயர்நீதிமன்றத்தின் இத்தீர்ப்பின் பின்னால் மறைந்து நின்று கொண்டு தன் காரியத்தை நிறைவேற்ற முடியும். அரசாங்கம் எடுத்துள்ள நிலைப்பாடு நியாயமற்றது என்பதை நாம் முகத்திற்கு நேரே சொல்லவேண்டும். விரிந்தளவிலான அதிகாரப்பகிர்வைச் செய்வோம் என்று இந்தியாவிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் கொடுத்த வாக்குறுதியை அரசாங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பாற்ற வேண்டும்.

கடந்த வாரம் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு மத்திய அரசு மாகாண அரசாங்கத்தின் அதிகாரங்களில் தலையிடுவதற்கு எதிரான அர்த்தமுள்ள கட்டுப்பாடுகள் எதுவும் 13 ஆவது திருத்தத்தில் இல்லை என்பதைத் தெளிவாக நிரூபித்துள்ளன. இது அரசியல் யாப்புத் திருத்தத்தின் முறைபாடுகளை வெளிப்படுத்தியுள்ளது. அரசாங்கம் நினைத்தபடி பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களில் கைவைப்பதும், துஷ்பிரயோகம் செய்வதும் சாத்தியம் என்பதை இத்தீர்ப்பு நிரூபித்துள்ளது. அத்தோடு ஒற்றையாட்சி அரசு முறைமையின் உள்ளார்ந்த பலவீனம் ஒன்றையும் இத்தீர்ப்பு சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் நிரூபித்துள்ளது. அதாவது, எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒரு தலைப்பட்சமாக அரசாங்கம் பகிர்ந்தளித்த அதிகாரங்களை மீளப் பெற்றுக் கொள்ளலாம் என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. அரசாங்கம் கடந்த நான்கு வருடங்களாக அதிகாரப்பகிர்வு குறித்த இந்தப் பலவீனமான அரசியல் யாப்பு ஏற்பாடுகளையே அமுல் செய்வதற்கு விருப்பமின்றி உள்ளது. அதிகாரங்களை மையப்படுத்தும் அரசாங்கத்தின் சிந்தனைப் போக்கிற்கும்,அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு பற்றிச் சிந்திப்பதற்கு அதற்குள்ள இயலாமையையும் இது எடுத்துக்காட்டுகிறது. அரசாங்கத்திற்கு நெருக்குதல் கொடுத்தால்தான் அது ஏதாவது செய்ய முன்வரும் என்பதையே இது காட்டுகிறது.

இப்பொழுது அரசாங்கத்திற்கு மேலும் மேலும் அழுத்தம் கொடுக்கும் தேவை எழுந்துள்ளது. அதிகாரப் பகிர்வு தேவையானது என்று கூறுபவர்களில் சிலர் பதின்மூன்றாவது சட்டத்திருத்தம் போதுமானது என்று கூறிவருகின்றனர். உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு அவர்களைச் சிந்திக்க வைக்க வேண்டும். பதின்மூன்றாவது யாப்புத் திருத்தத்தின் வரையறை எல்லைகள் மாறிக்கொண்டிருக்கின்றன. இந்த நிச்சயமின்மை இருக்கும் போது பதின்மூன்றாவது யாப்புத் திருத்தத்தின் வரையறைக்குள் நின்று அதிகாரப் பகிர்வை ஆதரிப்பது எப்படி? மத்தியப்படுத்தல் போக்கின் மீது கட்டுப்படுத்தல்களும் சமநிலைகளும் (chelas and balances) எவையும் செயற்படாத நிலையில், நிர்வாகத்துறையோ, சட்டத்துறையோ, நீதித்துறையோ மத்தியப்படுத்தலைத் தடுத்து நிறுத்த முடியாத நிலையில், முன்னர் பகிர்ந்தளிக்கப்பட்டவை என்று கூறப்பட்ட அதிகாரங்களை பகிர்ந்தளிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. சிங்கள சமூகத்தின் தீவிர இனவாதச் சக்திகளின் தூண்டுதலினால் 2006 ஆம் ஆண்டில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் ஒன்றிணைப்பிற்கு எதிராக உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்திய - இலங்கை உடன்படிக்கையில் வடக்கு, கிழக்கு இணைப்பு மிக முக்கியமானதொரு அம்சமாகும். திட்டமிட்டுச் செய்யப்படும் குடியேற்றம், அதன் விளைவான சனத்தொகைக் கட்டமைப்பு மாற்றம் என்ற பின்னணியில் தமிழர்களின் சுய ஆட்சியைப் பாதுகாப்பதற்கான ஒரு ஏற்பாடாக இது உடன்படிக்கையில் சேர்க்கப்பட்டது. வடக்குக் கிழக்கு இணைப்பு எவ்வாறு நீக்கப்பட்டதோ அதே பாணியில் இப்போது காணி தொடர்பான அதிகாரப் பகிர்வு என்ற விடயத்தையும் நீக்கி பதின்மூன்றாவது திருத்தத்தை வெறும் சக்கையாக மாற்றும் முயற்சி நடக்கிறது. அதன் மூலம் வடக்குக் கிழக்கில் தடையற்ற முறையில் சனத்தொகைக்கட்டமைப்பு மாற்றம் கொண்டு வரப்படுகிறது. அண்மைய வழக்கில் உயர் நீதிமன்றத்தில் ஆஜரான கோமின் தயாசிறி பகிரங்கமாக வெற்றிப் பெருமிதத்துடன் ஒரு கருத்தைக் கூறினார். அதிகாரப்பகிர்வு என்று சொல்லி ஒரு சட்டத்தைக் காட்டி அன்று ஜே.ஆர்.ஜயவர்தன ரஜீவ் காந்தியை ஏமாற்றினார். அவர் அங்கீகரித்த சட்டம் அன்று அதிகாரப் பகிர்வு என்று கூறியதை இன்று எதிர் மாறாக விளக்கம் கொடுப்பதற்கு உதவுகிறது என்றார் தயாசிறி. சுருக்கமாகச் சொன்னால் பதின்மூன்றாவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கு இந்தியா எடுத்த முயற்சிகளும் அதற்கு அப்பாலும் சென்று அதிகாரப்பகிர்வைச் செயற்படுத்துவோம் என்பதும் சூழ்ச்சியாலும், காணிகளை பகற்கொள்ளை அடிப்பதன் மூலமாகவும் அர்த்தமற்றவையாகி விட்டன.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒன்றைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. அதிகாரப் பகிர்வு தற்போதுள்ள அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் கீழ் குற்றுயிராகிக் கிடக்கிறது. அதை உயிர்ப்பிக்கவோ அர்த்தமுள்ளதாகவும், நிரந்தரமானதாகவும் ஒரு அதிகாரப்பகிர்வை ஒற்றையாட்சி முறையின் கீழ் கொண்டு வருவதோ சாத்தியமற்றதாக உள்ளது. சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதோ நீதித்துறையைச் சுதந்திரமாகச் செயற்படவைப்பதோ கூடச்சாத்தியமற்றதாகவே உள்ளது. இந்திய- இலங்கை உடன்பாட்டின்படி வழங்கப்பட்ட சிறுபான்மை உரிமைகளின் பாதுகாப்பு ஏற்பாடுகள் நீதிமன்றத் தீர்ப்புகள் மூலம் தகர்க்கப்படுகின்றன. இதைத் தடுத்து நிறுத்துவதாயின் புதிய அரசியல் யாப்பு ஒழுங்கு ஒன்றைக் கொண்டு வரவேண்டும், நிரந்தரமான அரசியல் தீர்வு வேண்டும். அறுபது வருடங்களுக்கும் மேலாக தமிழ் மிதவாத அரசியல் தலைவர்கள் இதனையே கூறி வந்திருக்கிறார்கள். அப்போது இலங்கையில் உள்ளோரும் இலங்கைக்கு வெளியே உள்ளோரும் நாம் சொன்னதை நம்பவில்லை என்றால் இப்போது அவர்கள் நாம் சொன்னது சரியே என்று நம்பும் நிலை ஏற்பட்டுவிட்டது.

இக்கட்டுரையாசிரியர் எம்.ஏ.சுமந்திரன் (பி.எஸ்.சி, எல்.எல்.எம்) தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினராவார். மூத்த சட்டத்தரணியும் அரசியல் யாப்பு மற்றும் பொதுச்சட்டம் பற்றிய நிபுணரும் ஆவார். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சர்வதேச அரசியல்

# இது பொதுநலவரசின் முடிவின் தொடக்கமா?



தனஞ்சயன்
ஸ்ரீஸ்கந்தராஜா

**காம்பியா விலகிச்சென்றமையும் இலங்கையில் உச்சி மகாநாட்டை நடத்துவது குறித்து மூண்டிருந்த விவாதமும் பொது நலவரசின் நிறுவனங்கள் எந்த அளவுக்கு பலவீனமானவையாக மாறி விட்டன என்பதை அம்பலப்படுத்துகின்றன. அரசியல் ரீதியில் உணர்ச்சிபூர்வமான பிரச்சினைகளிலிருந்து பொதுநலவரசு செயலகம் நழுவிச் செல்வதாக குற்றஞ்சாட்டப்படுகிறது**



பொதுநலவரசு அமைப்பிலிருந்து மேற்கு ஆபிரிக்க நாடான காம்பியா இம்மாத ஆரம்பத்தில் விலகியது. இந்த அமைப்பை ஒரு 'நவகாலனித்துவ' நிறுவனம் என்று அந்த நாட்டின் ஜனாதிபதி யஹ்யா ஜமே வர்ணித்திருக்கிறார். விலகலுக்கு வேறு காரணம் கூறப்படவில்லை. ஆனால், இத்தீர்மானம் ஜனாதிபதி ஜமேக்கும் ஐக்கிய இராச்சியத்துக்கும் (U-K) இடையேயான கசப்பான உறவுகளுடன் சந்தப்பட்டதாக இருக்கக்கூடும். தனது அரசியல் எதிரணியை பிரிட்டன் ஆதரிக்கின்றது என்று ஜமே குற்றஞ்சாட்டியிருக்கிறார். காம்பியாவின் மனித உரிமைகள் நிலைவரங்களை இவ்வருடம் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சு கடுமையாகக் கண்டனம் செய்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

சாம்ராச்சியத்திலிருந்து வளர்ந்து பிறகு தன்னை பயன்மதிப்பும் பண்பு விழுமியங்களும் உடைய ஒரு கழகமாக புத்துருவாக்கிக் கொண்ட (ஜவஹர்லால் நேருவின் வார்த்தைகளில் கூறுவதானால் உலகிற்கு தொடுகைச் சிகிச்சை செய்த ஒரு அமைப்பு) பொதுநலவரசு மீது தவிர்க்க முடியாத வகையில் கவனம் குவிகிறது.

1949ஆம் ஆண்டு நவீன பொது நலவரசு உருவாக்கப்பட்டதற்குப் பிறகு சகல முன்னாள் பிரிட்டிஷ் காலனி நாடுகளும் மொசாம்பிக், ருவாண்டா போன்ற வேறு சில நாடுகளும் இணைந்துகொள்ளத் தீர்மானித்தன. சுதந்திரமானதும் சமத்துவமானதுமான இந்த அமைப்பு ஜனநாயகத்தையும் சர்வதேச புரிந்துணர்வையும் பலவீனமான நாடுகளின் நலன்களையும் மேம்படுத்தியிருக்கிறது. இருந்தாலும், சர்வதேச அமைப்புகள் பல்கிப் பெருகியிருக்கும் இன்றைய சூழ்நிலையில் பொதுநலவரசு அதன் வகிபாகம் குறித்து ஒரு இருப்பு நெருக்கடிக்குள் அகப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறய பட்ஜெட்டுடனும் (பிரிட்டனின் சர்வதேச அபிவிருத்தி திணைக்களத்தின் செலவினத்தில் ஒரு சதவீதத்திற்கும் குறைவானது) சொற்ப வளங்களுடனும் பொதுநலவரசு அமைப்பு பயனுறுதியுடைய செயற்திட்டங்களை முன்னெடுக்க முடியாமல் இருக்கிறது. பதிலாக, சிறப்பாகச் செயற்படுமாறு அரசாங்கங்களை வலியுறுத்திக் கேட்பதிலேயே ஈடுபட்டுக் கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. காம்பியாவின் தீர்மானம் ஒரு காலத்தில் தலை சிறந்த நிறுவனமாக இருந்த பொதுநலவரசின் முடிவின் தொடக்கத்துக்கு சமிக்ஞை காட்டுவதாக இருக்கிறது.

ஒரு சில உறுப்பு நாடுகள் மாத்திரமே, பிரதானமாக பிரிட்டனும் ஓரிரு அபிவிருத்தியடைந்த நாடுகளுமே ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் மேம்படுத்துவதில் துடிப்பான ஒரு பங்கை பொதுநலவரசு அமைப்பு ஆற்றவேண்டுமென்று விரும்புகின்றன. அதிகப் பெரும்பான்மையான உறுப்பு நாடுகள் பொதுநலவரசு அங்குமிங்கும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கிக் கொண்டும் அவ்வப்போது உச்சிமகாநாட்டை நடத்திக்கொண்டு ஒரு அடக்க ஒடுக்கமான அமைப்பாக இருப்பதையே விரும்புகின்றன.

அடுத்தமாதம் உச்சிமகாநாட்டை இலங்கையில் நடத்துவது தொடர்பாக மூண்டிருந்த விவாதம் பொதுநலவரசு அமைப்புக்குள் இருக்கக்கூடிய பிளவை பிரகாசமாக வெளிக்காட்டியது. இலங்கை அரசாங்கம் மனித உரிமைகள் நிலைவரத்தை மேம்படுத்துவதற்கு கூடுதலான நடவடிக்கைகளை எடுக்காத பட்சத்தில், போர்க்குற்றங்கள் தொடர்பாக முன்வைக்கப்பட்டிருக்கக்கூடிய முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளாத பட்சத்தில், உச்சிமகாநாட்டில் பங்கேற்கப் போவதில்லை என்று கூறுகின்ற சொற்ப நாடுகள் குழுவில் கனடா மிகவும் வெளிப்படையாகப் பேசுகிறது. ஆனால், ஏனைய பெரும்பாலான நாடுகள் (இவற்றில் சில நாடுகள் அவற்றின் குறைபாடுகள் மீது பொதுநலவரசு அமைப்பு கவனத்தைச் செலுத்துமென்று அஞ்சுகின்றன) உச்சி மகாநாட்டை இலங்கை நடத்துவதை தீவிரமாக ஆதரிக்கின்றன என்பது கவனிக்கத்தக்கது. அதே வேளை, உச்சிமகாநாட்டுக்குப் பிறகு பொதுநலவரசு அமைப்பின் தலைமைப்பதவியைப் பொறுப்பேற்கப் போவது குறித்து இலங்கை அரசாங்கம் மகிழ்ச்சியில் இருக்கிறது.

காம்பியா விலகிச் சென்றமையும் இலங்கை உச்சிமகாநாடு குறித்து மூண்டிருக்கும் தகராறும் பொதுநலவரசின் நிறுவனங்கள் எந்தளவுக்கு பலவீனமானவையாக மாறிவிட்டன என்பதை வெளிக்காட்டுகின்றன.

அரசியல் ரீதியில் உணர்ச்சிபூர்வமான பிரச்சினைகளில் இருந்து பொதுநலவரசு செயலகம் நழுவிச் செல்வதாக குற்றஞ்சாட்டப்படுகிறது. வெளிப்படையாகப் பேசுவதற்கு அது தயங்குவதை பொதுநலவரசு அமைப்பு செல்வாக்கில்லாத ஒரு நிலைக்குச் சென்று கொண்டிருப்பதாகவே அர்த்தப்படுத்த வேண்டியிருக்கிறது. பொதுநலவரசு என்ன செய்கிறது என்பதை மக்களில் மூன்றில் ஒருபகுதியினராலேயே அடையாளம் காணக்கூடியதாக இருப்பதை 2009ஆம் ஆண்டு 7 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பொன்றின் மூலம் அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

தனவந்த உறுப்புநாடுகள் மத்தியிலும் வறிய உறுப்பு நாடுகள் மத்தியிலும் அதிருப்தி வளர்ந்துகொண்டிருக்கிறது. பொதுநலவரசின் உத்தியோகபூர்வ நிறுவனங்களுக்கான நிதியில் மூன்றில் இரண்டு பங்கை வழங்குகின்ற அவுஸ்திரேலியா, பிரிட்டன் மற்றும் கனடா போன்ற பெரிய உதவி வழங்கும் நாடுகள் அரசியல் செயற்பாடுகளின் போதாமை குறித்து விசனமடைந்திருக்கின்றன. ஒப்பீட்டளவில் மிகவும் சொற்பமான நேரடிப் பயன்களைத் தருகிற ஒரு கழகத்துக்கு நிதியுதவியைச் செய்வதற்கு சிறிய உதவி வழங்கும் நாடுகளும் தயக்கம் காட்டுகின்றன. பொதுநலவரசு பவுண்டேசனின் (Commonwealth Foundation) தலைவராக நான் பதவிவகித்த போது கணிசமான நிலுவைப் பணத்தைப் பெறுவதற்காகவும் ஆதரவை வாபஸ் பெறாதிருக்குமாறு வலியுறுத்துவதற்காகவும் உறுப்பு நாடுகளைத் துரத்தித்திரிவதில் எனது பெருமளவு நேரத்தைச் செலவிட்டேன்.

பொதுநலவரசில் உறுப்புரிமையைப் பெற்றிருப்பதால் தற்போது பெரிதாக பயன் ஏதுமில்லை என்பதே யதார்த்த நிலையாகும். கடந்த காலத்தில் நைஜீரியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு எதிரான பொதுநலவரசின் தடைகளின் விளைவாக அந்நாடுகளின் தலைவர்கள் கவலைப்பட வேண்டியிருந்தது. அதற்குப் பிறகு சிம்பாப்வே வாபஸ்பெற்றுக்கொண்டது. உறுப்புரிமையில் இருந்து இடைநிறுத்தப்பட்டமைக்காக பிஜி அரசாங்கம் வருத்தப்படுவதாகத் தெரியவில்லை.

இதன் காரணத்தினால்தான், மேலும் கூடுதலான நாடுகள் 'கப்பலில் இருந்து வெளியே குதித்து விடக் கூடாதே என்பதற்காக' (செயலகத்தை நிருவகிக்கும்) அனுபவமிக்க இராஜதந்திரிகள் நிதானமாக செயற்படுவதில் அக்கறை காட்டுகிறார்கள்.

ஆனால், இத்தகைய போக்கு நீண்டகால நோக்கில் எதிர்விளைவுகளைக் கொண்டுவரும். பொதுமக்களினதும் உதவி வழங்கும் நாடுகளின் ஆதரவும் சுருங்கும்.

பொதுநலவரசு அமைப்பு செழித்தோங்குவதற்கு ஒரேவழி, அது முன்னர் கொண்டிருந்த தார்மீக அதிகாரத்தை மீண்டும் முனைப்புறுத்திச் செயற்படுவதேயாகும். இதன் விளைவாக மேலும் கூடுதலான நாடுகள் பொதுநலவரசிலிருந்து விலகிச் செல்லவும் கூடும். ஒரு பெரிய கழகத்தை வைத்துக்கொண்டு மௌனமாக இருப்பதை விட சிறியதும் பயனுறுதியுடையதுமான ஒரு சிறு கழகம் சிறப்பானது. ■


***லண்டன் கார்டியன்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னையே ஆள முடியாமல் திண
# உலகின் மீது தொடர்ந்து அதிகாரம்

ஊடகவியலாளர் லியுசாங் (Liu chang) எழுதிய செய்தி விமர்சனம் சீன அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ செய்தி நிறுவனமான ஷின்குவாவின் இணையத்தளத்தில் 2013 அக்டோபர் 13 ஆம் நாள் பிரசுரமாகியது. இச்செய்தி விமர்சனம் ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் அலுவலகங்களை மூடுதல், கடன் உச்சவரம்பு அங்கீகாரம் என்ற பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவர முன்னர் எழுதப்பட்டது. நெருக்கடி நிலை தணிந்தபோதும் வாஷிங்டனில் அதன் அதிர்வுகள் இன்றும் தொடர்கின்றன. இப்பின்னணியில் லியுசாங்கின் விமர்சனம் ஐக்கிய அமெரிக்காவின் நெருக்கடியைச் சீனா என்ன கோணத்தில் பார்க்கிறது என்பதைப் புரிந்து கொள்ள உதவுகிறது.

**சர்வதேச அரசியல்**




லியுசாங்

ஐக்கிய அமெரிக்காவின் அரசியல்வாதிகளும் அந்த நாட்டின் இருபெரும் அரசியல் கட்சிகளும் சிக்கிக்கொண்டுள்ள நெருக்கடி உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. ஜனாதிபதி மாளிகைக்கும் சட்டசபைக்கும் (காங்கிரஸ்) இடையே சமரசம் செய்து உறுதிநிலையையும் வழமை நிலையையும் மீளக் கொண்டுவர முயற்சிகள் துரிதகதியில் மேற்கொள்ளப்படுகின்றன. முக்கிய புள்ளிகள் வெள்ளை மாளிகைக்கும், கப்பிட்டல் ஹில்லிற்கும் (காங்கிரஸ் அமைந்திருக்கும் இடம்) இடையே மாறிமாறி ஓடித் திரிகிறார்கள். இதைக்கண்டு உலகம் குழம்பிப் போய் இருக்கிறது. அமெரிக்காவின் பிடியில் இருந்து விடுபட்ட உலகம் ஒன்றின் தோற்றத்தின் அவசியம் (De-Americanised world) பற்றி இப்போது பிறதேசங் கள் சிந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இரண்டாம் உலக யுத்தத்தின் இரத்தக் களரியின் பின்னர் உலகின் மிகப் பலம் வாய்ந்த வல்லரசாக தன்னை நிலைநிறுத்திய அமெரிக்கா போருக்குப் பிந்திய உலக ஒழுங்கு ஒன்றை உருவாக்கியது. உலக சாம்ராஜ்ஜியம் ஒன்றை உருவாக்கி அதன் அதிபதியாக தன்னை ஆக்கிக் கொண்டது. யுத்தத்தின் அழிவில் இருந்து ஐரோப்பாவை மீட்டெடுத்த அமெரிக்கா, உலகின் எப்பாகத்திலாவது தனது நட்பு நாடென்று சொல்ல முடியாத அரசுகள் இருந்தால் அந்நாடுகளின் அரசாங்கங்களை மாற்றும் கைங்கரியத்தில் ஈடுபட்டது. பொருளாதாரத்திலும், இராணுவப் பலத்திலும் தனக்கு இணையான நாடு எதுவும் கிடையாது என்ற துணிச்சலில் அமெரிக்கா பிறநாடுகளின் விவகாரங்களில் தலையிட்டது. கடல் கடந்த தூர இடங்களிலும் அது தன் மூக்கை நுழைத்தது. உலகின் எந்த மூலையானாலும் அங்கே தனது தேசிய நலனைக் காப்பாற்றும் தேவை இருக்கிறது என்று நியாயம் கற்பிக்கத் தொடங்கியது. இவ்வாறான தலையீடுகள் அதற்குப் பழக்கப்பட்டுப் போன விடயமாயிற்று. அத்தோடு உலகின் முன்னால் தான் நியாயத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றும் அமெரிக்காவிற்கு செலுத்த முடியுமா?





அமெரிக்காவின் பிடியிலிருந்து விடுபட்ட உலகம் ஒன்றை உருவாக்குவதற்கு சில முக்கியமான விடயங்களைச் செய்தாகவேண்டும். இதன் தொடக்கப்பணி நாடுகள் யாவும் சேர்ந்து அடிப்படையான சர்வதேச சட்ட தத்துவங்களை வகுத்துக்கொள்ள வேண்டும். அமெரிக்க டொலருக்கு பதிலீடாக சர்வதேச ஒதுக்கு நாணயம் ஒன்றை தெரிந்தெடுத்தல் வேண்டும்

பக்கம் நிற்பதான பாசாங்கையும் மேற்கொண்டது. இந்தப் போர்வையின் பின்னால் சிறைக்கைதிகளைச் சித்திரவதை செய்தல், விமானத்தாக்குதல் மூலம் அப்பாவிப் பொதுமக்களைக் கொல்லுதல், உலகத் தலைவர்களின் செயற்பாடுகளை உளவு பார்த்தல் போன்ற அடாவடி வேலைகளைச் செய்து வருகிறது. இதைத்தான் அமெரிக்காவின் அமைதி (லத்தீன் மொழி தொடரான PAX AMERICANA) என்று சொல்கிறது. அமெரிக்காவின் அமைதி உலகின் பிறபாகங்களில் வன்முறைகளையும் கொந்தளிப்பையும் குறைப்பதற்கோ, அங்கு வறியோருக்கும், இடம்பெயர்ந்த அகதிகளுக்கும் உதவுவதற்கோ, நீடித்த நிரந்தர அமைதியைக் கொண்டுவரவோ துணைசெய்யாத தத்துவமாக உள்ளது.

ஒரு முன்னணி வல்லரசு என்ற முறையிலும் பொறுப்பு மிகுந்த நாடு என்ற வகையிலும் தனது கடமைகளை கௌரவத்தோடு ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக வாஷிங்டன் நிர்வாகம் தனது சுயநல நோக்கங்களுக்காக உலகின் மிகப்பெரிய அரசு என்ற அந்தஸ்தை துஷ்பிரயோகம் செய்கிறது. நிதி தொடர்பான ஆபத்துகளை வெளி உலகிற்குச் சுமத்தி பிராந்திய மட்டத்தில் கொந்தளிப்பையும், நாடுகளுக்கிடையிலான பிணக்குகளையும் ஏற்படுத்தியுள்ளது. வெளிப்படையான பொய்களைச் சொல்லிக் கொண்டு அநாவசியமான யுத்தங்களை நடத்துகிறது. இதன் விளைவாக உலகம் பொருளாதாரப் பேரழிவில் இருந்து தன்னை மீட்பதற்கு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க நாட்டின் ஆளும் உயர் குழாத்தின் கொலைவெறிக்கு இரையாகும் ஈராக்கில் குண்டுவீச்சும், கொலைகளும் நாளாந்தம் நிகழ்கின்றன. இந்த நாட்டைத் தான் சர்வாதிகார ஆட்சியில் இருந்து மீட்டதாக அமெரிக்கா கூறிக்கொண்டது. ஐக்கிய அமெரிக்காவின் மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்தையும், கடன் உச்சவரம்பை அதிகரித்தலையும் அங்கீகரிக்கும் வேலையில் அண்மையில் முடக்கம் ஏற்பட்டுள்ளது. இம் முடக்கத்தால் உலக நாடுகளின் டொலர் சொத்துகள் பேராபத்துக்கு உள்ளாகி உள்ளன. இதனால் உலகம் பெரும் கவலையில் ஆழ்ந்துள்ளது. இவ்விதம் உலக நாடுகளின் தலைவிதியைத் தீர்மானிப்பதை கபடத்தனமான தேசம் ஒன்றிடம் கையளித்திருக்கும் ஆபத்தான நிலை தொடர வேண்டுமா? இதற்கு ஒரு முடிவைக் கொண்டுவருவதும் புதிய உலக ஒழுங்கு ஒன்றைத் தாபிப்பதும் மிகவும் அவசியமான பணியாகும். இப் புதிய உலக ஒழுங்கில் நாடுகள் ஒவ்வொன்றும், சிறியது-பெரியது, பொருளாதாரப் பலம்மிக்கது - வறியது என்ற பேதம் இன்றி சமத்துவமான நிலையில் வைக்கப்படுவதும், அவற்றின் நலன்கள் மதிக்கப்படுவதும், பாதுகாக்கப்படுவதும் சாத்தியமாகும்.

இதற்கான அடித்தளத்தை நாம் இடவேண்டும். அமெரிக்காவின் பிடியில் இருந்து விடுபட்ட உலகம் ஒன்றை உருவாக்குவதற்குச் சில முக்கியமான விடயங்களைச் செய்தாக வேண்டும். இதன் தொடக்கப் பணி நாடுகள் யாவும் சேர்ந்து அடிப்படையான சர்வதேச சட்ட தத்துவங்களை வகுத்துக் கொள்ள வேண்டும். இறைமைக்கு மதிப்பளித்தல், உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு






செய்யாதிருத்தல் போன்ற விடயங்கள் இத்தத்துவங்களில் உட்படுத்தப்படவேண்டும். உலகின் கொந்தளிப்பு மையங்களின் பிரச்சினைகளைக் கையாள்வதில் ஐக்கிய நாடுகள் சபைக்குள்ள அதிகாரத்தை மதித்து நடத்தல் வேண்டும். இதன் அர்த்தம் யாதெனில், ஐ.நா.சபையின் பணிப்புரை இல்லாமல் எந்த நாடும் இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்க முடியாது என்பதே ஆகும்.

இதனை விட உலகநிதி முறைமையிலும் சீர்திருத்தம் செய்தல் வேண்டும். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் புதிதாக மேற்கிளம்பும் சந்தைப் பொருளாதார நாடுகளுக்கும் சர்வதேச நிதிநிறுவனங்களின் நடவடிக்கைகள் மீது கட்டுப்பாட்டை வைத்திருக்கக்கூடிய அதிகாரம் இருத்தல் வேண்டும். உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்ற இரண்டும் இத்தகைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டும். அவ்வாறு செய்யுமிடத்துத்தான் உலக நிதிநிறுவனங்களான இவ்விரண்டும் மாற்றமுற்ற பொருளாதார அரசியல் நிதர்சனத்தைத் தம் நடவடிக்கைகளில் பிரதிபலிப்பனவாய் இருத்தல் முடியும்.

செயல்வலுமிக்க சீர்திருத்தத் திட்டத்தை நாம் செயற்படுத்துவதனால் சர்வதேச ஒதுக்கு நாணயம் (Reserve Currency) ஒன்றை அமெரிக்க டொலருக்குப் பதிலீடாகத் தெரிந்து எடுத்தல் வேண்டும். இவ்வாறு டொலரை பதிலீடு செய்தால் தான் அமெரிக்காவிற்குள் எழும் நெருக்கடிகள், கொந்தளிப்புகள் வெளியே உள்ள நாடுகள் மீது தாக்கம் புரிவதைத் தடுத்து நிறுத்த முடியும்.

இத்தகைய மாற்றங்களைக் கோருவது அமெரிக்காவை புறத்தே ஒதுக்கி வைப்பதற்காகத்தான் என்று பொருள் கொள்ளக்கூடாது. அது நடைமுறைச் சாத்தியமில்லாத விடயமும் ஆகும். அமெரிக்கா உலக விவகாரங்களில் இனிமேலாவது ஆக்கபூர்வமான வகிபாகத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சீர்திருத்தங்களைக் கோருகிறோம். இதனைத் தொடங்குவதற்கான சிறந்த வழி தீங்குதரும் இம்முடக்கலை முடிவுக்குக் கொண்டுவருவதுதான். ■

---

*(28ஆம் பக்கத்தொடர்ச்சி)*

பொதுநலவரசு உச்சிமகாநாட்டை இலங்கை வெற்றிகரமாக நடத்துவதை உறுதி செய்வதில் தனக்கிருக்கக்கூடிய கடப்பாட்டை இந்தியா அலட்சியம் செய்யக்கூடிய சூழ்நிலையையே உருவாக்கக்கூடும். எவ்வாறெனினும் உச்சி மகாநாட்டில் அதன் பங்கேற்பு தொடர்பில் இறுதி நேரத்தில் இந்திய அரசாங்கம் அதன் தீர்மானத்தை அறிவிக்கும். அத்தகைய தொரு தீர்மானம் இலங்கை அரசாங்கம் மீது மிக நீண்டகாலத்துக்கு செல்வாக்கைக் கொண்டிருக்கக்கூடிய அந்தஸ்தை இந்தியாவுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் என்பதிற் சந்தேகமில்லை. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்



புராதனி ஏழூர்நாயகம்

# சுயாட்சிக்கான போராட்டத்தில் தமிழரின் மாறிவரும் தந்திரோபாயங்கள்

போரின் முடிவுக்குப் பின்னர் தோன்றியிருக்கின்றன புதிய சூழ்நிலைகளின் கீழ் தமிழ் மக்கள் தமக்கு கிடைக்கின்ற வாய்ப்புகளை முறையாகப் பயன்படுத்தி உரிமைகளை வென்றெடுக்கும் களங்களை உருவாக்கி வருகின்றனர். நடந்து முடிந்த வட மாகாண சபைத்தேர்தல் அத்தகைய களங்களில் ஒன்றே

ஒரு அரசின் அதிகாரங்களை அடிப்படையில் மூன்று பிரிவுகளாகப் பிரிக்க முடியும். சட்டவாக்க, நிறைவேற்று மற்றும் நீதித்துறை அதிகாரங்களே அவை. இத்தகைய மூன்று அதிகாரங்களையும் உள்ளடக்கிய ஒரு அரசு, ஒற்றையாட்சியாகவோ அல்லது சமஷ்டி ஆட்சி முறையாகவோ இருக்கும். ஒற்றையாட்சி அரசுகள் பாராளுமன்ற முறைமைகளாகவிருக்கலாம் அல்லது ஜனாதிபதி முறைமைகளாகவிருக்கலாம் அல்லது இவ்விரண்டும் இணைந்ததாகவுமிருக்கலாம். ஒற்றையாட்சி அரசின் கீழ் சட்டவாக்கம், நிறைவேற்றுத்துறை மற்றும் நீதிப் பரிபாலனம் என்பவற்றுக்கிடையே அதிகாரப் பிரிவினையும் (Separation of Powers) இருக்கலாம். மறுபுறம் சமஷ்டி ஆட்சியின் கீழ் மேற்குறிப்பிட்ட மூன்று அதிகாரங்களையும் மத்திய அரசுக்கும் பிராந்திய அலகுகளுக்கும் பகிர்வதற்கான ஏற்பாடுகள் அரசியலமைப்பு ரீதியாக அங்கீகரிக்கப்பட்டிருப்பதுடன் அத்தகைய அதிகாரப் பகிர்வு, பிராந்திய சுயாட்சி மூலமாகவும் மத்திய அரசின் தீர்மானமெடுக்கும் செயற்பாடுகளில் பிராந்திய நிறுவனங்கள் பங்குபற்றுவதனூடாகவும் இடம்பெறுகின்றது.

ஒரு அரசின் அரச நிர்வாகத்தை முறையாகவும் குழப்பமின்றியும் அமுல்படுத்துவதற்காக அதன் அனைத்து அதிகாரங்களும் மத்திய அரசின் கீழ் மையப்படுத்தப்பட்டிருப்பின் அவ்வரசின் ஆட்சி முறைமை திருப்திகரமானதாக இருக்குமென்று கூறமுடியாது. ஒரு சிறந்த ஜனநாயக ஆட்சிமுறையொன்றைக் கொண்டு நடத்துவதாயின் அரசின் அதிகாரங்கள் மத்திய அரசுக்கும் பிராந்திய நிறுவனங்களுக்குமிடையே பகிரப்பட்டிருத்தல் வேண்டும். அத்தகைய அதிகாரங்கள் எவ்வாறு பகிரப்பட வேண்டும் என்பது பற்றி அரசும் அரசாங்கத்தின் கீழ் வாழும் மக்களுமே தீர்மானிக்கவேண்டும். ஒற்றையாட்சி முறையின் கீழ் மத்திய அரசாங்கமானது தனது கொள்கைகள், சட்டவிதிகளை தனக்கு அடுத்துள்ள கீழ்நிலை நிறுவனங்களின் பிரதிநிதிகளூடாக அடிமட்டத்திலுள்ள நிறுவனங்கள் வரை கொண்டு சென்று அமுலாக்கும். ஆக, அடிமட்டத்திலுள்ள அத்தகைய நிறுவனங்கள் தனக்கென்ற கொள்கைகளையோ அல்லது உப விதிகளையோ (By Laws) அமுலாக்க முடியாது. மாறாக அந்நிறுவனங்கள் பாராளுமன்றத்திற்கோ அல்லது அரசாங்கத்திற்கோ பொறுப்புக்கூறவேண்டிய நிலையில் இருக்கும். இத்தகைய முறைமையினை அதிகாரப் பரவலாக்கம் (Decentralization of Powers) என்பர்.

மறுபுறம், அதிகாரப் பகிர்வின் (Devolution of Powers) கீழ் தமக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக முழுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரம் அடிமட்டத்திலுள்ள நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கும். அது தொடர்பாக பாராளுமன்றமோ அல்லது மத்திய அரசாங்கமோ தலையீடு செய்யமுடியாது. சட்டவாக்கத் துறை அல்லது நிறைவேற்றுத்துறை அல்லது இவ்விரண்டும் ஒன்றிணைந்ததாக அதிகாரங்கள் பகிரப்பட்டிருக்கும். அந்நிறுவனங்கள் தமக்கான உப விதிகளை இயற்றும் அதிகாரங்களைக் கொண்டிருப்பதோடு வரையறுக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரங்களை அமுலாக்குவதற்கு உரித்துடையன.

இத்தகைய அதிகாரப் பகிர்வு மற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றும் அதிகாரப் பரவலாக்கம் என்ற எண்ணக்கருக்களின் (Concepts) அடிப்படையில் இலங்கை அரசியல மைப்பை எடுத்து நோக்கினால், இலங்கை ஒற்றையாட்சி முறையைப் பின்பற்றும் நாடாகும். இதனை இலங் கைச் சனநாயக சோசலிசக் குடியரசி ன் அரசியலமைப்பு (1978) உறுப் புரை 2 தெட்டத் தெளிவாகக் கூறு கின்றது. இலங்கை சுதந்திரமடைந்த காலப்பகுதியிலிருந்து தொடர்ந்த தமிழ் - சிங்களப் போராட்டங்களும் தமிழர்களின் நியாயமான கோரிக்கை கள், அபிலாசைகளைத் தொடர்ந்து புறக்கணித்து வந்த சிங்கள அரச தலைமைகளுமே தமிழர்கள் பிரி வினையைக் கோரி நிற்கும் அளவி ற்கு இட்டுச்சென்றது. தமிழர்கள் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும், தமிழர்களுக்கென ஒரு தாயகப் பிரதேசம் உண்டு என்பதை அங்கீகரிக்க வேண்டும், அத்துடன் இவ்விடயங்களை உறுதி செய்யக் கூடிய சுயாட்சி முறை அமைய வேண்டும் என்ற விடயங்களே 2002 இன் இடைக்கால தன்னாட்சி அதி காரசபை யோசனைகளிலும் செல் வாக்குப் பெற்றிருந்தன.

சிங்கள அரச தலைவர்களுள் முதன் முதலில் எஸ். டபிள்யு. ஆர். டீ.பண்டாரநாயக்க அவர்களே சமஷ்டி அரசொன்றின் தேவைப்பாடு பற்றிய கருத்துகளை முன்வைத்தார். பல இனங்கள் வாழும் ஒரு நாட்டில் ஏற்படும் பன்மைத்துவப் பிரச்சினை களுக்கு தீர்வு காண்கையில் பயன்ப டுத்தப்படும் மிகப் பொருத்தமான மாற்றீடாக அதிகாரப் பகிர்வை அவர் கருதினார். 1926ஆம் ஆண்டு முதல் 1947ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிகளில் அதிகாரப் பகிர்வு பற்றிய யோசனைகள் முன்வைக்கப்பட்டி ருப்பினும் அது சிங்களப் பேரினவா தத்தின் முன் அடங்கிப்போயின. இதே நிலைமை தான் 1957 - 1969 காலப்பகுதிகளில் உத்தேச யோசனை கள் உடன்படிக்கைகள் மூலம் மாவட்ட சபைகளை அமைப்பதிலும் தொடர்ந்தது. 1980இன் 35ஆவது இலக்கச் சட்டத்தின் கீழ் மாவட்ட சபைகள் உருவாக்கப்பட்டிருப்பி னும், அவை வினைத்திறன் குன்றிய வையாகவே காணப்பட்டன.

1987 ஆம் ஆண்டில் அப்போ தைய இலங்கையின் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கும், இந்தி யப் பிரதமர் ராஜீவ்காந்திக்கும் இடை யில் ஏற்பட்ட இந்திய-இலங்கை சமா தான ஒப்பந்தத்தில் மாகாண சபைகள் பற்றிய யோசனைகள் முன்வைக்கப் பட்டதுடன் இலங்கை அரசியலமைப் பிற்கான 13 ஆவது திருத்தத்தினூடா கவும், மாகாண சபை சட்டத்தினூடா கவும் 1987இல் மாகாண சபை முறைமை இலங்கையில் அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டது. இம்மா காண சபை முறைமையே, இலங்கை அரசியல் நிர்வாகத்தில் ஒரு மாற்றத் தைக் கொண்டுவரவும் இனப் பிரச்சி னைக்குத் தீர்வாக அதிகாரப் பகிர் வினை பரிந்துரைக்கவும் பொருத்த மானதொரு அடித்தளமாகக் கருதப் பட்டது.

உண்மையிலேயே இந்த 13ஆவது திருத்தச் சட்டத்தினூடாக அறிமுகப்ப டுத்தப்பட்ட மாகாண சபை முறை தமிழர்களின் அரசியல் அபிலாசைக ளைப் பூர்த்தி செய்ததா? தமிழர்கள் எதிர்பார்த்தது அதிகாரப் பகிர்வு அல் லது சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வையே. அவ்வாறெனில் மாகாண சபை முறை அதிகாரப் பகிர்விற்கா அல்லது அதிகாரப்பரவலாக்கத் திற்கா வழிவகுத்தது என்ற வினாவெ ழுமென்றால், அது அதிகாரப் பகிர் வினை நோக்கியதான தீர்வாகவே அறிமுகம் செய்யப்பட்டது. ஆயின், ஒற்றை யாட்சி முறையைக் கொண்ட அரசொன்றில் அதிகாரப் பகிர்விற் கான சாத்தியங்கள் எவ்வாறு எழும்? அரசியலமைப்பினூடாக ஒற்றை யாட்சி முறையை அங்கீகரித்துள்ள இலங்கை அரசு, மத்தியில் அனைத்து அதிகாரங்களையும் வைத்துக் கொண்டு எவ்வாறு அதிகாரப் பகிர் வினை மாகாண சபைகளிடம் கைய ளிக்க முடியும்? மாறாக அதிகாரப் பரவலாக்கத்தினையே மேற்கொள்ள முடியும்.

சமஷ்டி முறை அல்லது அதிகாரத் தைப்பகிர்ந்து கொள்வதற்கான செயற்பாட்டின் போது அது அரசியல மைப்பின் மூலமே உறுதி செய்யப் பட வேண்டும். அவ்வாறு உறுதி செய்யப்படும் போது இரு சாராரும் கலந்துரையாடி இணக்கப்பாடுக ளைக் காணவேண்டும்.

அரசியலமைப்பு ரீதியாக உடன் பட்ட ஓர் விடயத்தை அரசு தான் தோன்றித்தனமாக இல்லாதொழிக் கவோ அல்லது மீளப்பெறவோ முடி யாது. இவ்வாறான முக்கிய சமஷ்டி எண்ணக்கருகளுக்கு முரணானதாக உருவாக்கப்பட்டதே 13ஆவது திருத்தம்.

உதாரணமாக, உறுப்புரை 154 ஒள பிரிவின் கீழ் ஆளுநரிடமிருந்து அறிக்கையொன்று கிடைக்கப்பெற்ற தன் மீது அல்லது வேறு வகையாக மாகாணத்தின் நிருவாகத்தினை அர சியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்கக் கொண்டு நடத்த முடியாத நிலைமை ஒன்று எழுந்துள்ளது என ஜனாதிபதி திருப்தியடைவாராயின், பிரகடனமொன்றின் மூலம் அம்மா காண நிருவாகத்தின் எல்லாப் பணிக ளையும் அல்லது அவற்றுள் எதனை யும் ஜனாதிபதியே ஏற்றுக்கொள்ள லாம் அல்லது மாகாண சபையின் தத் துவங்கள் பாராளுமன்றத்தின் அதி காரத்தினால் அல்லது அதிகாரத்தின் கீழ் பிரயோகிக்கப்படற்பாலனவாதல் வேண்டும் என வெளிப்படுத்தலாம். ஆக, இவ்வுறுப்புரையின் கீழ் வழங் கப்பட்ட அதிகாரங்களை மீளப் பெறும் தத்துவம் ஜனாதிபதிக்கு இருப்பதுடன், தமிழர்களின் சுயாட்சி க்கான சந்தர்ப்பம் எதனையும் அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. முன்னைய பந்தியில் குறிப்பிட்டுள்ள எண்ணக்க ருக்களின் பிரகாரம், அரசொன்று தனது அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்ட பின்னர் அவற்றை மீளப் பெற்றுக்கொள்ள முடியாது. ஆனால் மேற்கூறிய உறுப்புரை (154-ஒள) அத்தகைய எண்ணக்கருவிற்கு முரணானதாகவே உள்ளது. தவிர, முதலமைச்சரையும், அமைச்சரவை யையும் நியமிக்கும் ஆளுநர் (Govenor) கூட ஜனாதிபதி விரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பும் காலம்வரை பதவியிலிருப்பார். மாகாணசபையைக் கூட்டவும், கலைக்கவும் மத்திய அரசாங்கமே (ஜனாதிபதி) அதிகாரமுடையது.


இவ்வாறு சிங்களப் பேரினவாத அரசாங்கங்களினால் தமிழர்களின் நியாயமான, அடிப்படை அரசியல் அபிலாசைகள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வந்ததன் காரணமாகத் தமிழர்கள் தமது அரசியல் உரிமைகளை இன்னொரு தளத்திற்கு மாற்றத் தலைப்பட்டனர். அதிகாரப் பரவலாக்கம், அதிகாரப் பகிர்வு அல்லது சமஷ்டி என்ற எண்ணக்கருக்களிலிருந்து விடுபட்ட அவர்கள், அண்மைக்காலமாக சுயாட்சியை (Autonomy) நோக்கியதாக தமது அரசியல் கோரிக்கைகளை வெளிப்படுத்தி வருவதைக் காணலாம். சுயாட்சியானது, ஏனைய பிராந்தியங்கள் அல்லது நிறுவனங்களுக்கு வழங்கப்படாத சுயாட்சியோடு தொடர்புடைய விசேட அதிகாரங்களைக் குறித்த ஒரு பிராந்தியம் அல்லது நிறுவனத்திற்கு வழங்கும் செயன்முறையைக் குறிப்பதுடன், தனக்கென்று ஒரு தனித்துவமான அடையாளத்தைக் கோரும் இனமோ அல்லது குழுவோ தனக்கு விசேட கரிசனையுள்ள விடயங்களில் நேரடிக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கவும் வழிவகுக்கின்றது. அதிகாரப் பகிர்வு தொடர்பில், சுயாட்சியானது சமஷ்டியிலிருந்து சற்று விலகி ஒரு நெகிழ்ச்சியான தன்மையை உருவாக்குகின்றது. சமஷ்டியை, சமச்சீரான மற்றும் சமச்சீரற்ற சமஷ்டியென இருவகைப்படுத்தலாம். சமச்சீரான சமஷ்டியின் கீழ் ஒரே விதமான அதிகாரங்கள் மத்திய அரசிடமிருந்து பிராந்திய நிறுவனங்களுக்கு சம அளவில் பகிரப்பட்டிருக்கும் அதே வேளை, அப்பிராந்திய நிறுவனங்கள் அனைத்தும் மத்திய அரசுடன் ஒரே விதமான உறவுகளைக் கொண்டிருக்கும். மறுபுறம், சமச்சீரற்ற சமஷ்டியின் கீழ், மத்திய அரசானது அதிகாரங்களைக் கோரி நிற்கும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பிராந்திய அல்லது நிறுவனங்களின் கோரிக்கைகள், வரலாறுகள், அடையாளங்கள் தனித்துவமானவை என்பதை ஏற்றுக்கொண்டு அத்தகைய பிராந்தியங்களுக்கு விசேட அதிகாரங்களை வழங்கும். இச் சமச்சீரற்ற சமஷ்டி சில அம்சங்களில் சுயாட்சி என்ற எண்ணக்கருவுடன் ஒத்திசைவான தன்மையைக் கொண்டிருப்பதைக் காணலாம்.

இந்தோனேஷியாவின் ஆச்சே (Ache) பிரதேசத்தில் சுதந்திர ஆச்சே இயக்கத்திற்கும் (Gerakan Aceh Merdeka) இந்தோனேஷிய அரச படைகளுக்கும் இடையில் இடம்பெற்று வந்த 29 வருடகால உள்நாட்டு யுத்தம், 2005இல் இருதரப்பும் பேச்சு வார்த்தைக்கு இணங்கியதன் விளைவாக முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. சமாதானப் பேச்சு வார்த்தை பின்லாந்து நாட்டை தலைமையகமாகக் கொண்ட அரசசார்பற்ற நிறுவனத்தினால் (Crisis Management Initiative) முன்னெடுக்கப்பட்டு 2006 ஆகஸ்ட் 15 இல் சமாதான உடன்படிக்கையின் (The Helsinki MOU) மீது இரு தரப்பும் கைச்சாத்திட்டன. இந்த உடன்படிக்கை ஆச்சே பிரதேசம் விசேட சுயாட்சியைப் பெற்றுக் கொள்ளவும், சுதந்திர ஆச்சே இயக்கத்தின் ஆயுதக் களைவினையடுத்து அரச படைகள் அப்பிரதேசத்திலிருந்து வெளியேறவும் வழியமைத்தது. அதைத் தொடர்ந்து 2006 டிசெம்பர் 15 இல் உள்ளூர்த் தேர்தலும் இடம்பெற்றது. இந்தோனேஷிய நாட்டினுள் ஆச்சே ஒரு மாகாணமாகக் கருதப்படாது விசேட பிரதேசமாக (Special Territory) சுயாட்சியுடைய பிரதேசமாக அங்கீகரிக்கப்பட்டு, அதன் நிர்வாக அமைப்பு முறையானது ஆச்சேக்கு கூடியளவு சுயாட்சி அதிகாரங்களை மத்திய அரசிடமிருந்து வழங்கத்தக்க வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டலுவல்கள், வெளியகப் பாதுகாப்பு, தேசியப் பாதுகாப்பு, நாணய மற்றும் இறைவரி விடயங்கள், நீதியும் மதச் சுதந்திரமும் ஆச்சே சம்பந்தப்பட்ட சர்வதேச உடன்படிக்கைகள் அல்லது சட்டவாக்க சபையின் செயற்பாடுகள் அல்லது அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்த ஏதாவது தீர்மானங்கள் ஆச்சே பிராந்திய சட்டசபையின் கலந்தாலோசனைகளோடு மேற்கொள்ளப்படுகின்றது.

உண்மையில் சிங்கள அரசுகளின் அடக்குமுறைகளிலிருந்து விடுபட்டு தம்மைத் தாமே ஆளும் சுயாட்சிக்கான வேட்கை வடக்குக் கிழக்கு தமிழர்களிடையே தான் எழுந்தது. சிங்கள அதிகாரப் பீடங்களின் கீழ், சிங்கள மக்கள் அத்தகைய சுயாட்சியை நாடிச்செல்ல வேண்டிய தேவைப்பாடு எதுவும் எழவில்லை. ஆரம்ப காலங்களில், தமிழர்கள் பிரதேசவாரியாகத் தம்மை தனித்துவப்படுத்தி வடக்கு, கிழக்கு இணைந்ததான ஒரு மாகாண/பிராந்திய அலகினுள் தமக்கான அரசியல் தீர்வுத் திட்டங்களை முன்வைத்தனர். ஆயினும், தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வந்த அவர்களது அரசியலபிலாசைகளும், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டு அவர்களது பூர்வீக நிலங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் முன்னெடுக்கப்பட்டு பிரதேச ரீதியிலான அவர்களது தனித்துவத்தை சிதைத்து வருவதும் அவர்களது அரசியல் உரிமைக்கான போராட்டங்களை பலவீனமடையச் செய்யவில்லை. மாறாக, தமக்குக் கிடைக்கின்ற வாய்ப்புகளைச் சரியாகப் பயன்படுத்தி தமது உரிமைகளை வென்றெடுக்கும் களங்களை உருவாக்கி வருகின்றனர். நடந்து முடிந்த வட மாகாண சபைத் தேர்தல் அத்தகைய களங்களிலொன்றே. ஆச்சே பிரதேச மக்கள் கடந்து வந்த அதே அரசியல் பிரச்சினைகளைத் தான் ஈழத்தமிழர்களும் கடந்து வந்திருக்கின்றனர். இன, மொழி, கலாசார மற்றும் பிரதேச ரீதியில் தமக்கான தனித்துவத்தைக் கொண்டுள்ள ஈழத் தமிழர்களும் சுயாட்சிக்கு உரித்துடையவர்கள் என அங்கீகரிக்கப்படும் வரை அதற்கான கோரிக்கைகளும் வலுப்பெற்றவண்ணம் இருக்கும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு மகாநாடும் மன்மோகன் சிங்கும்



விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டதும் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் ராஜபக்ஷ அரசாங்கம் முன்னோக்கி நகரும் என்று இந்தியப் பிரதமர் நம்பியிருந்தார். ஆனால் இப்போது தமிழர்களுக்கு அரசியல் அதிகாரங்களை வழங்குவதில் இலங்கை ஜனாதிபதிக்கு அக்கறை இல்லை என்ற அபிப்பிராயத்தையே அவர் கொண்டிருக்கிறார் போல் தெரிகிறது

இலங்கையுடனான உறவுகள் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் மன்மோகன்சிங் அரசாங்கம் மீண்டும் ஒரு திரிசங்கு நிலையில் இருக்கிறது. இலங்கைக்கு எதிராக வாக்களிக்குமாறு ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் உள்ள தனது பிரதிநிதிக்கு இருதடவைகள் அறிவுறுத்திய இந்தியப் பிரதமர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு இன்னொரு தாக்கத்தைக் கொடுப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்தமாத நடுப்பகுதியில் கொழும்பில் நடைபெறவிருக்கும் பொதுநலவரசு நாடுகளின் உச்சி மகாநாட்டில் மன்மோகன்சிங் கலந்துகொள்ளக்கூடிய சாத்தியமில்லை.

கொள்கை அடிப்படையில் நோக்கும்போது மன்மோகன் சிங் இந்த உச்சிமகாநாட்டில் பங்கேற்பதற்கு விரும்பியிருக்கக்கூடும். இந்தியாவின் சகல அயல்நாடுகளுடனும் நல்லுறவுகளைப்பேணுவதில் நம்பிக்கை கொண்டவர் அவர். விசேடமாக, இந்தியாவுடன் வரலாற்று ரீதியான தொடர்புகளைக் கொண்ட இலங்கையுடனான உறவுகளுக்கு மன்மோகன்சிங் முக்கியத்துவம் கொடுப்பவர். ஆனால், தனது கூட்டரசாங்கத்தைச் சமாளிப்பதில் உள்ள பிரச்சினைகள் மற்றும் உள்நாட்டுப் பிரச்சினைகளின் விளைவாகத் தோன்றுகின்ற அரசியல் நெருக்குதல்கள் அல்லது கட்டாயங்கள் அவரது இந்த விருப்பத்தைப் பாதித்துவந்திருக்கின்றன.






எம்.பி.வித்தியாதரன்


இலங்கை விவகாரத்தைப் பொறுத்தவரை, தமிழர்களின் நியாயபூர்வமான பிரச்சினைகளை இலங்கை அரசாங்கம் கையாளுகின்ற முறை தொடர்பில் மன்மோகன்சிங் குழப்பமடைந்திருப்பதாகக் கூறப்படுகிறது. தனது கூட்டரசாங்கத்தின் பங்காளியான திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.கருணாநிதி (அப்போது அவர் தமிழ்நாடு முதலமைச்சர்) மற்றும் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் கடுமையாக எதிர்ப்பை வெளிக்காட்டியபோதிலும் கூட, விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக் கட்டத்தில் ராஜபக்ஷவை சிங் ஆதரித்து நின்றார். விடுதலைப் புலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் தோற்கடிக்கப்பட்டதும் தமிழர்களின் நியாயபூர்வமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதிலும் அவர்களுக்கு எதிரான பாரபட்சங்களுக்கு முடிவைக் காண்பதிலும் ராஜபக்ஷ அரசாங்கம் முன்னோக்கி நகரும் என்று இந்தியப் பிரதமர் நம்பியிருந்தார்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக எதுவுமே அவ்வாறு நடைபெறவில்லை. தமிழர்கள் தொடர்ந்தும் பாரபட்சத்துக்குள்ளாக்கப்படுவது தொடர்பிலும் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கான அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் ஆமைவேகத்தில் நகர்வது தொடர்பிலும் சிங் கடுமையாகக் குழப்பமடைந்தார். அதனால் அவர் அரவணைப்பதும் அதட்டுவதுமான கொள்கையொன்றைக் கடைப்பிடிக்க வேண்டியிருந்தது. இதன் விளைவே ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இருதடவைகள் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களை ஆதரித்து இந்தியா அளித்த வாக்குகளாகும்.

தமிழர் பிரச்சினையை அவதானமாகவும் அக்கறையுடனும் கையாளப் போவதாக இலங்கை பல தடவைகள் உறுதியளித்திருந்தது. இவ்வருடம் செப்டெம்பரில் வடமாகாண சபைக்கான தேர்தலை நடத்துவதாக ஜனாதிபதி ராஜபக்ஷ கடந்த வருடம் உறுதியளித்தார். அந்த உறுதி மொழியை அவர் காப்பாற்றினார். ஆனால், இப்போது புதியதொரு பிரச்சினை கிளம்பியிருக்கிறது. வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பிரமிக்கத்தக்க வெற்றியைப் பெற்று, தமிழ் மக்கள் மத்தியில் எதிர்பார்ப்புகள் அதிகரித்திருக்கக் காணப்படும் நிலையில், ஜனாதிபதி ராஜபக்ஷ மாவட்ட அமைச்சர்களை நியமிப்பதற்கு இப்போது திட்டமிடுகிறார். ஜனாதிபதியின் சகோதரர் பசில் ராஜபக்ஷவுக்கு பதிலளிக்கக் கடமைப்பட்டவர்களாக இந்த உத்தேச மாவட்ட அமைச்சர்கள் இருப்பார்கள் என்று கூறப்படுகிறது. தேர்தல் முடிவுகளைச் சீர்குலைப்பதற்கு அல்லது மலினப்படுத்துவதற்கான ஒரு முயற்சியாகவே இது நோக்கப்படுகிறது.



**மாவட்ட அமைச்சர்களை நியமிக்கும் இலங்கை அரசின் திட்டம் குறித்து கொழும்பில் கடும் ஆட்சேபனை தெரிவிக்குமாறு மன்மோகன் சிங் தனது வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித்திடம் அறிவுறுத்தியதாகக் கூறப்படுகிறது. மாவட்ட அமைச்சர்கள் நியமனம் மாகாண முதலமைச்சரின் அதிகாரங்களை மலினப்படுத்திவிடும் என்று இலங்கை அரசாங்கத் தலைவர்களிடம் நேரடியாகக் கூறியிருக்கிறார் குர்ஷித்**

மாவட்ட அமைச்சர்கள் நியமிக்கப்பட்டால், அது வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் அரசாங்கம் கொண்டிருக்கக்கூடிய கொஞ்ச நஞ்ச அதிகாரங்களையும் பறித்தெடுத்துவிடும் என்று இந்திய அரசாங்க அதிகாரிகள் கூறுகிறார்கள். மற்றும்படியும் கூட, வட மாகாண அரசாங்கத்துக்கு காணி, பொலிஸ் தொடர்பில் அதிகாரங்கள் இருக்கப் போவதில்லை. ஆக, என்ன அதிகாரங்கள் மிஞ்சியிருக்கப் போகின்றன? இந்திய வெளியுறவு அமைச்சு சிரேஷ்ட அதிகாரியொருவர் கிளப்பிய கேள்வி இது.

மாவட்ட அமைச்சர்களை நியமிப்பதற்கு ஜனாதிபதி ராஜபக்ஷ யோசிப்பது குறித்து மன்மோகன் சிங்கும் குழப்பமடைந்திருக்கிறார். தமிழர்களுக்கு அரசியல் அதிகாரங்களை வழங்குவதில் இலங்கை ஜனாதிபதிக்கு அக்கறையில்லை என்ற அபிப்பிராயத்தையே இந்தியப் பிரதமர் இப்போது கொண்டிருக்கிறார் போலத் தோன்றுகிறது. ராஜபக்ஷ தொடர்பில் மென்மையான போக்கைக் கடைப்பிடிப்பவராகவே மன்மோகன் சிங்கை தமிழகக்கட்சிகள் குற்றஞ்சாட்டி வந்திருக்கின்றன. ஆனால், இலங்கை அரசாங்கத்தின் போக்கு அவரின் நிலைப்பாட்டைக் கடுமையாக்கியிருக்கிறது போலத் தெரிகிறது.

கொழும்பு உச்சி மகாநாட்டைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்ற நெருக்குதல்களை இதுவரை மன்மோகன் சிங் எதிர்த்துவந்திருக்கிறார். ஆனால், தேர்தல் முடிவுகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலினப்படுத்தும் நோக்கில் இலங்கை ஜனாதிபதி எடுக்க உத்தேசிக்கும் நடவடிக்கைகளைக் கண்டும் காணாதது போல் இனிமேலும் இருக்கப்போவதில்லை என்ற கடுமையானதொரு செய்தியை கொழும்புக்கு அனுப்ப வேண்டியது அவசியமானதாகும் என்ற அபிப்பிராயத்தை பிரதமர் இப்போது ஏற்றுக்கொள்கிறார் போலத் தெரிகிறது.

அண்மையில் கொழும்புக்கு விஜயம் செய்த தனது வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித்திடம் மாவட்ட அமைச்சர்களை நியமிக்கும் திட்டம் குறித்து கடும் ஆட்சேபனை தெரிவிக்குமாறு மன்மோகன் சிங் அறிவுறுத்தியதாகக் கூறப்படுகிறது. மாவட்ட அமைச்சர்கள் நியமனம் மாகாண முதலமைச்சரின் அதிகாரங்களை மலினப்படுத்திவிடும் என்பதைச்சுட்டிக்காட்டுமாறு குர்ஷித்திடம் கேட்கப்பட்டதாகத் தெரிகிறது. இந்த விவகாரத்தில் மன்மோகன் சிங்கிற்கு இருக்கக்கூடிய ஐயுறவுகளை இலங்கை அதிகாரிகளுக்கு குர்ஷித் தெரியப்படுத்தியிருந்தார். இதுவிடயத்தில் இலங்கை அரசாங்கத்தின் போக்கு வேறு மாற்று வழிகள் குறித்து மன்மோகன் சிங் சிந்திக்கக்கூடிய நிர்ப்பந்தங்களை உருவாக்கும் என்று இலங்கை அதிகாரிகளிடம் குர்ஷித் வெளிப்படையாகவே கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சகல மாவட்டங்களையும் மேம்படுத்துவதற்கு அபிவிருத்தி நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தவே நடவடிக்கை எடுக்கப்படுவதாக ஜனாதிபதியும் வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸும் அதிகாரிகளும் குர்ஷித்திடம் விளக்கம் அளித்திருக்கிறார்கள். ஆனால், இந்தியா இதை நம்பியதாக இல்லை. பிரதமரோ, வெளியுறவு அமைச்சு அதிகாரிகளோ இதை நம்பவில்லை.

கூடங்குளம் அணு ஆலை மற்றும் வர்த்தகச் சலுகைகள் போன்ற வேறு பல விவகாரங்களும் கூட இருநாடுகளுக்கும் இடையே சர்ச்சைகளுக்குரியவையாக இருக்கின்றன. கூடங்குளம் ஆலையில் விபத்து ஏற்படும் பட்சத்தில் இலங்கைக்கு அதனால் பாதிப்புகள் ஏற்படுமென்று கொழும்புத் தரப்பில் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. இந்த விவகாரங்கள் எல்லாம் குறித்து அமைச்சர்கள் மட்டத்தில் தீவிர பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற போதிலும், எதிர்பார்க்கப்பட்ட திசையில் நகர்வுகள் இடம்பெற்றதாகத் தெரியவில்லை.

**கொழும்பு பொதுநலவரசு உச்சி மகாநாட்டை மன்மோகன் சிங் தவிர்ப்பார் என்று தமிழ் நாட்டைச் சேர்ந்த காங்கிரஸ் தலைவர்கள் கூறுகிறார்கள். பொருத்தமான நேரத்தில் பிரதமர் ஒரு தீர்மானத்தை எடுப்பார் என்று பிரதமரின் அலுவலகம் கூறுகிறது. இம்மாத இறுதியில் அல்லது அடுத்த மாத முற்பகுதியில் அந்தத் தீர்மானம் அறிவிக்கப்படலாம்**

இத்தகைய பின்புலத்தில் பொதுநலவரசு உச்சிமகாநாட்டில் கலந்து கொள்ளாமல் இருப்பது குறித்து மன்மோகன்சிங் சிந்திப்பதாகக் கூறப்படுகிறது. உச்சி மகாநாட்டுக்கு வருமாறு மன்மோகன் சிங்கிற்கு ராஜபக்ஷ விசேட அழைப்பை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதுவிடயத்தில் இந்திய அரசாங்கத்தின் முன்னால் இரு தெரிவுகளே இருக்கின்றன. ஒன்று, கொழும்பு மகாநாட்டுக்கு துணை ஜனாதிபதி ஹமிட் அன்சாரி தலைமையில் தூதுக் குழுவை அனுப்புவது. மற்றது இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்துமாறு வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித்தைக் கேட்டுக் கொள்வது. 2011 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற பொதுநலவரசு உச்சிமகாநாட்டில் பங்கேற்ற இந்தியத் தூதுக்குழுவுக்கு அன்சாரியே தலைமை தாங்கிச் சென்றிருந்தார்.

கொழும்பு உச்சிமகாநாட்டை மன்மோகன் சிங் தவிர்ப்பார் என்று மத்திய அமைச்சர்களாக இருக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த காங்கிரஸ் தலைவர்கள் கூறுகிறார்கள். ஆனால், பிரதமரும் வெளியுறவு அமைச்சும் இன்னமும் தீர்மானமொன்றை எடுக்கவில்லை. நிலைவரங்களை அவதானித்துக்கொண்டிருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள். பொருத்தமான நேரத்தில் பிரதமர் ஒரு தீர்மானத்தை எடுப்பார் என்று பிரதமரின் அலுவலகம் கூறுகிறது. இம்மாத இறுதியில் அல்லது அடுத்த மாத முற்பகுதியில் அந்தத் தீர்மானம் குறித்து அறிவிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உச்சிமகாநாட்டில் தனது பங்கேற்பு குறித்து உறுதிப்படுத்த மாத்திரமே குர்ஷித் முன்வருகிறார். 'வெளியுறவு அமைச்சர் என்ற வகையில் நான் நிச்சயமாக கொழும்பு உச்சிமகாநாட்டில் பங்குபற்றுவேன்' என்று அவர் பிரதமரின் திட்டம் குறித்துக் கேட்கப்பட்டபோது செய்தியாளர்கள் மத்தியில் கூறினார். பிரதமர் குறித்து எந்த ஊகத்தையும் தெரிவிக்க குர்ஷித் விரும்பவில்லை. உச்சி மகாநாட்டைத் தவிர்ப்பது குறித்துச் சிந்திப்பதில் பிரதமர் அக்கறையாக இருக்கிறார் என்பதையே இது காட்டுகிறது. அத்துடன், தி.மு.க.விடமிருந்தும் தமிழ்நாடு மாநில காங்கிரஸிடமிருந்தும் நெருக்குதல்கள் அதிகரித்த வண்ணமேயிருக்கின்றன. அடுத்த வருடம் பொதுத் தேர்தலைச் சந்திக்க வேண்டியவராக சிங் இருக்கிறார். கொழும்பு மகாநாட்டில் கலந்து கொண்டால், தமிழ்நாட்டில் காங்கிரஸுக்கு பாரதூரமான பாதிப்பு ஏற்படும் என்பதிற் சந்தேகமில்லை.

நெருக்குவாரங்கள் அதிகரித்துக் கொண்டிருந்த நிலையில், அக்டோபர் 14 ஆம் திகதி தி.மு.க.வின் பாராளுமன்றக் குழுவின் தலைவர் ரி.ஆர்.பாலு டில்லியில் பிரதமர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்மோகன் சிங்கைச் சந்தித்து அரை மணித்தியாலத்துக்கும் அதிகமான நேரம் பேச்சு நடத்தியிருந்தார். 'கொழும்பு மகாநாட்டை இந்தியா பகிஷ்கரிக்கவேண்டும் என்பதே எமது கோரிக்கை. எமது கட்சியினதும் தமிழ் நாட்டில் பல்வேறு பிரிவினரதும் நிலைப்பாட்டையும் உணர்வுகளையும் பாலு பிரதமருக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார். பிரதமரிடமிருந்து வந்த பிரதிபலிப்பு எமக்கு நம்பிக்கையைக் கொடுத்திருக்கிறது' என்று இன்னொரு தி.மு.க. தலைவர் சொன்னார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு மன்மோகன் சிங் அண்மையில் எழுதிய கடிதமொன்றில் உச்சி மகாநாட்டில் தனது பங்குபற்றல் குறித்து மீள்சிந்தனை செய்வதாக பிரதமர் சூசகமாகத் தெரிவித்திருந்தார். தமிழ் நாட்டு மக்கள் மற்றும் தி.மு.க.வின் உணர்வுகள் உட்பட சகல காரணிகளையும் ஆராய்ந்து இந்த விவகாரத்தில் தீர்மானம் எடுக்கப்படும் என்று கடிதத்தில் மன்மோகன்சிங் கூறியிருந்தார்.

தி.மு.க. உட்பட தமிழ்நாடுக் கட்சிகளிடமிருந்து வந்த நெருக்குதல்களைத் தொடர்ந்து ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்ததை நினைவுகூர்ந்த தி.மு.க. தலைவர் 'லோக்சபா தேர்தல்கள் நெருங்குவதால், எத்தகைய தீர்மானத்தை எடுக்க வேண்டுமென்பதில் காங்கிரஸ்காரர்கள் மிகுந்த எச்சரிக்கையாக இருப்பார்கள். ஜி.கே. வாசன் போன்ற காங்கிரஸ் தலைவர்கள் தமிழ் நாட்டின் மனநிலையைப் பிரதிபலித்திருக்கிறார்கள்' என்று குறிப்பிட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரத்தைக் காரணம் காட்டி கொழும்பு மகாநாட்டைத் தவிர்ப்பதற்கு கனடிய பிரதமர் ஸ்ரீபன் ஹார்பர் தீர்மானித்த பிறகு இந்தியாவும் மகாநாட்டில் பங்கேற்கக்கூடாது என்ற வலியுறுத்தல்கள் தமிழ் நாட்டில் தீவிரமடையத் தொடங்கியிருப்பதை அவதானிக்க முடிகிறது.

ஆனால், இந்தியா நிச்சயமாக மகாநாட்டைப் பகிஷ்கரிக்கப்போவதில்லை. பிரதமர் மன்மோகன்சிங் கலந்து கொள்வதா இல்லையா என்பது மாத்திரமே கேள்வி. இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தி துணை ஜனாதிபதி அன்சாரி மகாநாட்டில் கலந்துகொள்வதென்றால் கூட, இந்தியாவின் நோக்கம் எதுவும் நிறைவேறிவிடப் போவதில்லை. ஏனென்றால், இராஜதந்திர நடைமுறைகளின் பிரகாரம் துணை ஜனாதிபதி பிரதமரைவிடவும் மேலானவர் என்ற ஒரு கருத்தும் முன்வைக்கப்படுகிறது. இலங்கைக்கு ஒரு உறுதியான செய்தியை இந்தியா கொடுப்பதானால், அதற்கு மகாநாட்டில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய தூதுக் குழுவின் தலைமையை ஒரு அமைச்சர் மட்டத்துக்கு குறைக்க வேண்டும் என்று இவர்கள் வாதிடுகிறார்கள்.


லண்டனில் ஏப்ரில் 26ஆம் திகதி நடைபெற்ற பொதுநலவரசின் அமைச்சர்கள் மட்ட செயற்பாட்டுக் குழுவின் கூட்டத்தில் இலங்கையின் சார்பில் இந்தியா செய்த தலையீடே கொழும்பில் உச்சிமகாநாடு நடத்தப்படுவதற்கு வழிவகுத்தது என்பது இங்கு கவனிக்கத்தக்கது. ராஜபக்ஷவினதும் சிங்கினதும் அதிகாரிகளுக்கிடையே நடைபெற்ற இரகசிய பேச்சுவார்த்தைகளையடுத்தே ஏப்ரில் 26 லண்டன் கூட்டத்தில் இந்தியா தலையீட்டைச் செய்தது என்று தெரிவிக்கப்பட்டது.

பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு இன்னமும் கூட காலம் இருக்கிறது. ராஜபக்ஷ சற்று விட்டுக்கொடுத்து சலுகைகளைக் காட்ட முன்வருவாரா? கொழும்பு உச்சி மகாநாட்டில் இந்தியப் பிரதமர் பங்கேற்க வேண்டுமென்பதன் உண்மையான அக்கறை ராஜபக்ஷவுக்கு இருக்குமானால், அது சாத்தியமாகும். உண்மையில், பொதுநலவரசு அமைப்பில் உறுதியான நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்பதை கவனிக்கத் தவறக் கூடாது.

### ஐந்து மாநிலங்களில் தேர்தல் ஜுரம்

ஐந்து மாநிலங்களின் சட்டசபைகளுக்கான தேர்தல்களுக்கு இந்திய தேர்தல் ஆணைக்குழு திகதிகளை அறிவித்திருக்கிறது. இதையடுத்து வடக்கிலிருந்து வடகிழக்கு வரை தேர்தல் ஜுரம் பரவ ஆரம்பித்திருக்கிறது. டில்லி, இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், சதிஷ்கார், மற்றும் மிசோரம் ஆகியவையே நவம்பர் நடுப்பகுதியிலும் டிசம்பர் முற்பகுதி


ஷீலா தீக்ஷித்


அரவிந்த் கெஜ்ரிவால்

**ஆரம்பத்தில் பொருத்தமற்ற ஒரு அரசியல் கட்சியாகக் கருதப்பட்ட கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சி இப்போது டில்லியில் காங்கிரஸுக்கும் பாரதிய ஜனதாவுக்கும் பெரியதொரு சவாலாக மாறியிருக்கிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலும் தேர்தல்கள் நடைபெறவிருக்கும் மாநிலங்களாகும். தேர்தல் முடிவுகள் டிசம்பர் 8ஆம் திகதி அறிவிக்கப்படும்.

தொலைக்காட்சி அலைவரிசைகளும் பத்திரிகைகளும் பல்வேறு கருத்துக்கணிப்புகளையும் மதிப்பீடுகளையும் வெளியிட ஆரம்பித்துவிட்டன. டில்லி, இராஜஸ்தான் மற்றும் மிசோரம் மாநிலங்களில் தற்போது ஆட்சியில் இருக்கும் காங்கிரஸ்கட்சி நெருக்கடியை எதிர்நோக்கியிருப்பதாகவே அநேகமாக சகல கணிப்புகளும் காண்பிக்கின்றன. டில்லியில் ஊழல் குற்றச்சாட்டுகளினாலும் இராஜஸ்தானில் பாலியல் குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளினாலும் காங்கிரஸ் பெரும் நெருக்குவாரங்களுக்குள்ளாகியிருக்கிறது. ஊழலுக்கு எதிரான அண்ணா ஹசாரேயின் இயக்கத்தின் போது பெரும் ஆர்ப்பாட்டங்களைக் கண்ட டில்லியில் கடந்த டிசம்பர் 16, மருத்துவ மாணவி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டதையடுத்தும் பாரிய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

இந்தியாவின் தேசியத் தலைநகரில் பரவலாகக் காணப்படுகின்ற அரசாங்க விரோத உணர்வைப் பயன்படுத்தி டில்லி மாநிலத்தில் பாரதிய ஜனதா எளிதாக தேர்தலில் வெற்றி பெற்றுவிடுமென்றே ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்டது. ஆனால், வீட்டுக்கு வீடான பிரசாரங்கள் சூடுபிடிக்க ஆரம்பித்ததையடுத்து (அரசியலில் புதிய அளவுகோல்களை உருவாக்கும்) அரவிந்த் கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சி (பொதுமகனின் கட்சி) யின் செல்வாக்கு விரைவாக அதிகரித்துக்கொண்டுவருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. ஆரம்பத்தில் பொருத்தமற்ற ஒரு அரசியல் கட்சியாகக் கருதப்பட்ட ஆம் ஆத்மி கட்சி இப்போது காங்கிரஸுக்கும் பாரதிய ஜனதாவுக்கும் பெரியதொரு சவாலாக மாறியிருக்கிறது. அண்மையில் டில்லியில் பிரமாண்டமான பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய நரேந்திர மோடியின் பாரதிய ஜனதாவுக்கு கெஜ்ரிவால் கடுமையான போட்டியை ஏற்படுத்தியிருக்கிறார். மோடியின் பங்கேற்புடன் மேலும் இரு பொதுக் கூட்டங்களை நடத்த பாரதிய ஜனதா திட்டமிட்டிருக்கிறது. பாரதிய ஜனதாக் கட்சியின் டில்லி மாநிலத் தலைவர் விஜய் கோயேலுக்கும் முன்னாள் மாநில அமைச்சர் டாக்டர் ஹர்ஷ் வர்தனுக்கும் இடையேயான போட்டா போட்டியால் பெரும் உட்பூசலுக்கு உள்ளாகியிருக்கும் பாரதிய ஜனதாவுக்கு டில்லியில் மோடியால் பெருமளவு வாக்குகளைப் பெற்றுக் கொடுக்கக் கூடியதாக இருக்குமா?

தன்னுடன் ஒரு தொகுதியில் போட்டியிட முன்வருமாறு முதலமைச்சர் ஷீலா தீக்ஷித்துக்கு சவால் விடுத்த கெஜ்ரிவால், டில்லி மாநிலத்தின் முதலமைச்சராக மோடி வரப்போவதில்லையென்பதால் அவரால் தங்களுக்குப் பெரிதாக உதவ முடியாது என்பது மக்களுக்குத் தெரியும் என்று கூறுகிறார். ஊழல்தனமான முதலமைச்சர் ஷீலா தீக்ஷித்தை தோற்கடிக்க வேண்டுமென்று கூறும் கெஜ்ரிவால் டில்லி மாநிலத்தில் பல உள்ளூராட்சி மன்றங்களை நிருவகிக்கும் பாரதிய ஜனதாவும் அதேயளவுக்கு ஊழல்தனமானது என்று குற்றஞ்சாட்டுகிறார்.

கெஜ்ரிவாலின் கட்சிக்கு கூடுதல் பட்சம் 8 ஆசனங்களே கிடைக்குமென்று ஒரு மாதத்துக்கு முன்னர் தெரிவித்த கருத்துக் கணிப்புகள், இப்போது 70ஆசனங்கள் கொண்ட சட்டசபையில் அக்கட்சிக்கு குறைந்தது 18 ஆசனங்கள் கிடைக்குமென்று தெரிவித்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. 28 ஆசனங்களைப் பெற்று கூடுதலான ஆசனங்களைக் கொண்ட தனிக்கட்சியாக பாரதிய ஜனதா வரும் என்றும் காங்கிரஸ் கட்சிக்கு 22 ஆசனங்கள் கிடைக்கும் என்றும் பிந்திய கருத்துக்கணிப்புகளின் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. ஆம் ஆத்மி கட்சியின் வாக்கு வீதம் 26 ஆக உயர்ந்திருப்பதாகவும் இந்த வீதம் காங்கிரஸைவிடவும் ஒன்று குறைவாகவும் பாரதிய ஜனதாவை விடவும் 8குறைவாகவும் உள்ளது என்றும் தெரியவந்திருக்கிறது. தேர்தலுக்கு இன்னும் ஒரு மாதமேயிருக்கும் நிலையில், இந்த வாக்குவீத நிலைவரங்கள் காங்கிரஸும் பாரதிய ஜனதாவும் உண்மையில் கவலைப்படவேண்டியவையாகும். நடத்தப்பட்டிருக்கக்கூடிய சகல கருத்துக் கணிப்புகளிலும் மிகவும் செல்வாக்கு மிக்க முதலமைச்சர் வேட்பாளராக கெஜ்ரிவாலுக்கே கூடுதல் வாக்குகள் கிடைத்திருக்கின்றன.

இவையெல்லாம் மாநில சட்டசபைகளுக்கான தேர்தல்களாக இருக்கின்றபோதிலும், அடுத்த வருடத்தைய பொதுத்தேர்தலுக்கு முன்னதான ஒரு அரையிறுதி ஆட்டமாகக் கருதப்படுகின்றன. தேர்தலுக்கான திகதிகள் அறிவிக்கப்படுவதற்கு முன்னதாகவே தீவிர பிரசாரங்கள் ஆரம்பமானதைக் காணக்கூடியதாக இருந்தது. மத்தியப் பிரதேசத்திலும் சதிஷ்காரிலும் தனது ஆட்சியைத் தக்கவைப்பதில் அக்கறை கொண்டுள்ள பாரதிய ஜனதா, காங்கிரஸிடமிருந்து இராஜஸ்தானைக் கைப்பற்றுவதிலும் குறியாகவுள்ளது. அதேவேளை, ஆம் ஆத்மி கட்சியின் தோற்றம் தேசியத் தலைநகரில் 70ஆசனங்களுக்கு மும்முனைப் போட்டியைத் தோற்றுவித்திருக்கிறது. மத்தியப் பிரதேசமும் சதீஷ்காரும் கடந்த 10 வருடங்களாக பாரதீய ஜனதாவின் ஆட்சியின் கீழ் இருந்துவருகின்ற அதேவேளை, டில்லி மாநிலத்தை காங்கிரஸ் கட்சி கடந்த 15 வருடங்களாக ஆட்சி செய்து வருகிறது. 5 வருடங்களுக்கு முன்னர் இராஜஸ்தானை பாரதிய ஜனதாவிடமிருந்து காங்கிரஸ் கைப்பற்றியது.

சதீஷ்காரைத் தவிர, ஏனைய மாநிலங்களில் தனியொருநாளில் வாக்களிப்பு இடம்பெறும். சதீஷ்காரில் மாவோவாத கெரில்லாக்களின் போராட்டங்களினால் பாதிக்கப்பட்டிருக்கும் மாவட்டங்களில் பாதுகாப்புக் காரணங்களின் நிமித்தம் வாக்களிப்பு இரு கட்டங்களாக நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெருக்கடிக்குள் முன்னாள் இராணுவத்தளபதி

தனது பிறந்த திகதி தொடர்பாக மூண்ட தகராறையடுத்து பதவி நீடிப்பு மறுக்கப்பட்டது முதல் அரசாங்கத்துடன் மோதலில் ஈடுபட்டு வரும் இந்தியாவின் முன்னாள் இராணுவத்தளபதி ஜெனரல் வீ.கே.சிங் தன்னையறியாமலேயே நெருக்கடி நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கிறார். குறிப்பிட்ட சில விவகாரங்களின் அடிப்படையில் தனித்தனியாக அண்ணா ஹசாரேயுடனும் நரேந்திர மோடியுடனும் சேர்ந்து அரசாங்க எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்கியிருக்கும் சிங் இராணுவத் தளபதியாக பதவியில் இருந்த போது அமைத்த தொழில்நுட்ப உதவிப்பிரிவு (Technical Support Division) என்ற உளவுப் பிரிவு தொடர்பிலான இராணுவ அறிக்கையொன்றை அரசாங்கம் வெளிப்படுத்தியிருக்கிறது.



**தேசிய நலனை அடிப்படையாகக் கொண்டு ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் அமைதியை உறுதிப்படுத்த அரசியல்வாதிகள், அமைச்சர்கள் உட்பட பல்வேறு தரப்பினருக்கு இராணுவம் நிதி வழங்கி வந்திருக்கிறது என்று முன்னாள் இராணுவத் தளபதி கூறியிருப்பதால் பெரும் சர்ச்சை மூண்டிருக்கிறது**

ஜம்மு காஷ்மீர் முதலமைச்சர் ஒமர் அப்துல்லாவின் அமைச்சரவையைக் கவிழ்ப்பதற்காக அமைச்சர் ஒருவருக்கு பணம் கொடுத்து உளவு பார்த்ததாக அந்த தொழில்நுட்ப உதவிப் பிரிவு மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. இக்குற்றச்சாட்டுக்கு பதிலளிக்குமுகமாக தொலைக்காட்சி அலைவரிசையொன்றில் தோன்றிய ஜெனரல் சிங் தேசிய நலனை அடிப்படையாகக்கொண்டு மாநிலத்தில் அமைதியையும் உறுதிப்பாட்டையும் பேணுவதற்காக இராணுவம் அரசியல்வாதிகள் மற்றும் பல அமைச்சர்கள் உட்பட பல்வேறு தரப்புகளுக்கு நிதிவழங்கி வந்திருக்கிறது என்று குறிப்பிட்டார். இது பல வருடங்களாக இடம்பெற்று வந்திருக்கிறதென்றும் இராணுவத்தின் விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் போன்று ஒமர் அப்துல்லா அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு அல்ல, மாநிலத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்காகவே அமைச்சர் ஒருவருக்கு பணம் கொடுக்கப்பட்டது என்றும் சிங் கூறியிருக்கிறார். தற்போதைய இராணுவத் தளபதி ஜெனரல் பிக்ரம் ஜித் சிங்கிற்கும் வி.கே.சிங்கிற்கும் இடையே முன்னர் தகராறு இருந்ததே இத்தகைய அறிக்கையொன்று வெளிப்படுத்தப்பட்டதற்கான ஒரு காரணம் என்றும் பேசப்படுகிறது.

தொலைக்காட்சியில் சிங் தெரிவித்த கருத்துகள் ஜம்மு- காஷ்மீரில் அரசியல்வாதிகளை ஆத்திரப்பட வைத்திருக்கின்றன. தங்களது நம்பகத்தன்மைக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டிருப்பதால் உண்மையை வெளிக்கொண்டுவருவதற்காக ஜெனரல் சிங்கை விசாரணைக்குட்படுத்த வேண்டுமென்று சகல அரசியல்வாதிகளும் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். முன்னாள் இராணுவத் தளபதியை அழைத்து விசாரிக்க வேண்டுமென்று ஜம்மு- காஷ்மீர் சட்டசபையில் விவாதத்துக்குப் பிறகு தீர்மானமொன்றும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இத்தீர்மானத்தை ஆளும் தேசிய மகாநாட்டுக் கட்சியினதும் எதிர்க்கட்சிகளினதும் சகல உறுப்பினர்களும் ஆதரித்திருக்கிறார்கள். ஆனால், அதிர்ஷ்டவசமாக தீர்மானத்தில் காலவரையறை எதுவும் குறிப்பிடப்படவில்லை. இச்சம்பவம் அரசாங்கத்துக்கு பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தியிருப்பதுடன், அதன் கொள்கைகளையும் அம்பலப்படுத்தியிருக்கிறது. தகவல்கள் உண்மையாக இருந்திருந்திருந்தாலும் கூட, அவற்றை ஜெனரல் சிங் வெளியிட்டிருக்கக்கூடாது. ஏனென்றால் தேசிய பாதுகாப்புக்கு அது குந்தகத்தை ஏற்படுத்துகிறது என்று சிலர் வாதிடுகிறார்கள். ஆனால், வேறு சிலரோ தன்னால் அமைக்கப்பட்ட பிரிவொன்று கோடிக்கணக்கான ரூபாய்களை துஷ்பிரயோகம் செய்திருக்கிறதென்று கூறும் அறிக்கை அம்பலப்படுத்தப்பட்டதால் தனது நேர்மையைத் தெளிவுபடுத்த வேண்டிய நிர்ப்பந்தம் சிங்கிற்கு ஏற்பட்டது என்று வாதாடுகிறார்கள்.

இராணுவத்தின் விசாரணை அறிக்கை ஏன் வெளிப்படுத்தப்பட்டது? அரசாங்கத்தைப் பொறுத்தவரை இது சரியானதொரு தந்திரோபாயமா? அரசியல் நாட்டைப் பாதிக்கிறது. அது அரசாங்கத்தின் தந்திரோபாயங்களையும் அம்பலப்படுத்துகிறது. இது நாட்டுக்கு எந்தவகையிலும் நல்லதேயில்லை. இந்த விவகாரம் விவேகமான முறையில் கையாளப்படாவிட்டால், ஜம்மு-காஷ்மீர் சட்டசபைக்கு ஜெனரல் சிங்கை அழைத்து நடத்தப்படக்கூடிய விசாரணை இராணுவத்தினதும் நாட்டினதும் மதிப்புக்கு சீர்செய்ய முடியாத சேதத்தை ஏற்படுத்திவிடும். ஜம்மு- காஷ்மீர் தொடர்பிலான அரசாங்கத்தின் தந்திரோபாயங்களுக்கும் பெரும் பின்னடைவைக் கொண்டுவந்து விடும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘குளுகுளு’ ஏற்காடு தொகுதி இடைத்தேர்தல்

# அனல்பறக்கும் பிரசாரத்திற்கு தயாராகும் கட்சிகள்







ஏற்காடு சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தல் அரசியல் கட்சிகளை ‘பிரசாரத் தீ’யில் இறக்கி விட்டுள்ளது. ‘குளுகுளு’ சீசனுக்காக ஏற்காடு மலைப் பக்கம் சாரை சாரையாகப் புறப்பட்டுப் போவோரை இன்று அனல் பறக்கும் தேர்தல் பிரசாரத்திற்காகக் குவிய வைத்திருக்கிறது. ஜூலை மாதம் 18ஆம் திகதி அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் பெருமாள் உடல் நலக்குறைவு காரணமாக மறைந்தார். அதனால் இங்கு வருகின்ற டிசம்பர் மாதம் 4-ஆம் திகதி இடைத்தேர்தல் நடத்த தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு 2011ஆம் வருடம் பொறுப்பேற்ற பிறகு நடைபெறும் நான்காவது இடைத் தேர்தல்!

அந்த வகையில் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு நடைபெறும் இந்த நான்காவது இடைத் தேர்தலுக்கான ஏற்காடு சட்டமன்றத் தொகுதி மேற்கு தமிழக மாவட்டமான சேலம் மாவட்டத்தில் இருக்கிறது. சுமார் 2.15 இலட்சம் வாக்காளர்கள் உள்ள தொகுதி இது. தமிழகத்தில் உள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளவை 44 தொகுதிகள். மலைவாழ் மக்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகுதிகள் இரண்டு. அதில் ஏற்காடும் ஒரு தொகுதி. இங்கு அ.தி.மு.க. சார்பில் போட்டி

தங்களுக்குள் மாத்திரமே போட்டி என்ற மனோநிலையில் தி.மு.க.வும் அ.தி.மு.க.வும். அவ்விரு கட்சிகளுக்கும் மாற்று என்றால் அது தனது கட்சியே என்ற நிலைப்பாட்டில் விஜயகாந்த் செல்லவிரும்புவதால் ஏற்காடு தொகுதியில் தனித்துப் போட்டியிட வேண்டிய கட்டாயம் அவருக்கு






முத்தையா காசிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ம.தி.மு.க. தான் பெரும் சிக்கலில் இருக்கிறது. அ.தி.மு.க.வையும் ஆதரிக்க முடியாது. தி.மு.க.வையும் ஆதரிக்க முடியாது என்ற நிலையில் அது இருக்கிறது. பாரதிய ஜனதாவுடன் கூட்டணி அமையும் என்று கட்சி நிருவாகிகளிடம் வைகோ தொடர்ந்து கூறி வருகிறார். ஏற்காட்டில் ஒரு வேட்பாளர் நிற்க வைத்து பாரதிய ஜனதாவின் ஆதரவையோ விஜயகாந்தின் ஆதரவையோ கோருவதற்கு அங்கு வைகோவுக்கு அடிப்படை ஆதரவு இல்லை**

யிட்டு அவ்வப்போது வெற்றி பெற்று வந்தவர் பெருமாள். தொகுதியில் நன்கு பிரபல்யமானவர். 1977க்குப் பிறகு அ.தி.மு.க. இதுவரை ஆறு முறை இத்தொகுதியில் வெற்றி பெற்றிருக்கிறது. ஒரு முறை அதன் கூட்டணிக் கட்சியான காங்கிரஸ் ஜெயித்தது. ஆறு முறை வெற்றியில் பெருமாள் ஐந்து முறை வேட்பாளராக நிறுத்தப்பட்டு வெற்றி வாகை சூடியிருக்கிறார். அதில் கடந்த 2011 சட்டமன்றத்தேர்தலில்தான் 1,04,221 வாக்குகள் பெற்று அசாத்தியமான வெற்றியைப் பெற்றார். இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் அ.தி.மு.க. இரு கூறுகளாகப் பிளவுபட்டு (ஜெயலலிதா அணி, ஜானகி அணி) 1989 சட்டமன்றத் தேர்தலின் போது கூட பெருமாள் இந்தத் தொகுதியில் ஜெயித்துக் காட்டினார். அப்படியொரு 'அ.தி.மு.க. மோகம்' உள்ள தொகுதி ஏற்காடு.

அப்படி உறுதியாக இருக்கும் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளரை இதுவரை அ.தி.மு.க. அறிவிக்கவில்லை. அதற்கான முஸ்தீபுகளில் அக்கட்சி ஈடுபட்டிருக்கிறது. விரைவில் அக்கட்சியும் வேட்பாளரை அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த தேர்தலில் அ.தி.மு.க. வேட்பாளர் அள்ளிய ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகளில் தே.மு.தி.க. இத்தொகுதியில் முன்பு எடுத்த 21000 வாக்குகளை (2009 பாராளுமன்றத் தேர்தலின் போது எடுத்த வாக்குகள்) கழித்துவிட்டால், சுமார் 83,000 வாக்குகள் அ.தி.மு.க.வின் பாக்கெட்டில் இருக்கின்றன. பொதுவாக அ.தி.மு.க. விற்கு இந்தத் தொகுதியில் 44,000 வாக்குகள் 'அடிப்படை வாக்கு வங்கியாக' இருந்தாலும், 2011 நிலைவரப்படி அக்கட்சிக்கு சுமார் 83000 வாக்குகள் கிடைத்திருப்பது கூர்ந்து கவனிக்கத்தக்கது. இந்த இரு வருட ஆட்சியில் அ.தி.மு.க.விற்கு மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள 'இமேஜ்' பிரச்சினை இந்த வாக்கு வங்கியைக் குறைக்கலாம். ஆனால், இடைத்தேர்தல்களில் அது பெரிதும் எதிரொலிப்பதில்லை என்பதால் அந்த வாக்கு வங்கியை அக்கட்சி தக்க வைத்துக் கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் நிரம்பவே இருக்கின்றன. ஒரேயொரு பலவீனம் அக்கட்சிக்கு இங்கு இருக்கிறது என்றால் அது ஐந்து முறை வெற்றி பெற்று, தொகுதியில் படுபேமஸாக இருந்த பெருமாள் இன்று அக்கட்சியிடம் இல்லை என்பது தான்! அது தவிர 2-ஜி அலைக்கற்றை ஊழல் பிரசாரம் போன்றவற்றால் சென்ற தேர்தலில் அ.தி.மு.க. பக்கம் 'சுண்டி' இழுக்கப்பட்ட இளம் வாக்காளர்கள் இன்றைய தினம் எந்த அளவிற்கு அ.தி.மு.க.வுடனேயே நிற்கப் போகிறார்கள் என்பதும் இன்னொரு மைனஸ் பொயின்ட்!

இந்தத் தொகுதியில் 1977க்குப் பிறகு (தி.மு.க.விலிருந்து அ.தி.மு.க. பிரிந்த பிறகு நடைபெற்ற முதல் சட்டமன்றத் தேர்தல்) நடைபெற்ற 11 தேர்தல்களில் இரண்டே முறைதான் தி.மு.க. இங்கு வெற்றி பெற்றிருக்கிறது. ஒரு முறை 1996 சட்டமன்றத் தேர்தலின் போது வி.பெருமாள் தி.மு.க.வின் வேட்பாளராகப் போட்டியிட்டு 38964 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அப்போது காங்கிரஸிலிருந்து பிரிந்து வந்த தமிழ் மாநில காங்கிரஸ் தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றிருந்தது. அதன்பிறகு 2006 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.



வின் சார்பில் தமிழ்ச் செல்வன் என்பவர் வெற்றி பெற்றார். அவர் பெற்ற வாக்குகள் 48581 வாக்குகள் மட்டுமே. இந்த இரு முறையுமே 8394 வாக்குகள் மற்றும் 3607 வாக்குகள் வித்தியாசத்தில் மட்டுமே இங்கே தி.மு.க. வெற்றி பெற்றது. ஆனால் முதல் முறையாக 2011 சட்டமன்றத் தேர்தலின் போது இங்கு தி.மு.க 66,639 வாக்குகளைப் பெற்றது. தோல்வியடைந்தாலும் இந்தத் முறை தான் அதிக வாக்குகளைப் பெற்றது அக்கட்சி. தி.மு.க.வுடன் கூட்டணியாக இருந்த காங்கிரஸ் கட்சிக்கு இந்தத் தொகுதியில் உள்ள வாக்கு வங்கி சுமார் 10000 இருக்கும். ஏனென்றால், அக்கட்சி மோசமான நிலைமையில் இருந்து கொண்டு தேர்தலைச் சந்தித்த 1998ஆம் வருடமே 8663 வாக்குகளை இந்தத் தொகுதியில் பெற்றது குறிப்பிடத்தக்கது. இதைக் கூட்டிக் கழித்துப் பார்த்தால் கூட தி.மு.க.விற்கு இந்தத் தொகுதியில் 50000 முதல் 55000 வாக்குகள் 'அடிப்படை வாக்கு வங்கியாக' இருக்கும் என்றே எதிர்பார்க்கலாம். இது முந்தைய காலங்களில் உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி.மு.க.வின் பலத்தை விட கூடுதலான வாக்கு வங்கி என்பதையும் மறந்து விட முடியாது.

இதை மனதில் வைத்தும், அ.தி.மு.க.விற்கு மாற்று தி.மு.க. தான் என்பதை நிலைநாட்டவும் முன் கூட்டியே வேட்பாளரை அறிவித்துள்ளது. தி.மு.க. அக்கட்சியின் வேட்பாளராக மாறன் என்பவர் களமிறக்கப்பட்டு, முதல் ஊழியர்கள் கூட்டத்தையும் நடத்தி முடித்து விட்டார் தி.மு.க. பொருளாளர் ஸ்டாலின். 'தேர்தல் நியாயமாக நடந்தால் தி.மு.க. 25000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறும்' என்று வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில் அறிவித்தும் விட்டார் ஸ்டாலின். அக் கட்சியின் சார்பில் தேர்தல் பொறுப்பாளர்களும் நியமிக்கப்பட்டு விட்டார்கள். முந்திக் கொண்டு வேட்பாளரை அறிவித்ததோடு இல்லாமல் அனைத்துக் கட்சிகளுக்கும் ஆதரவு கேட்டு கடிதமும் எழுதியிருக்கிறார் கலைஞர் கருணாநிதி. அ.தி.மு.க. விற்கும், ம.தி.மு.க.விற்கும் மட்டுமே அவர் கடிதம் எழுதவில்லை. அனைத்துக் கட்சிகளுக்கும் கடிதம் எழுதியதில் ஒரு பின்னணி இருக்கிறது. ஏனென்றால், காங்கிரஸுக்கு மட்டும் ஆதரவு கேட்டு எழுதாமல், பாரதிய ஜனதாக் கட்சிக்கும் கடிதம் எழுதியிருக்கிறார். பிரதமர் வேட்பாளராக நரேந்திரமோடி அறிவிக்கப்பட்டுள்ளதில் தனக்கு ஒன்றும் ஆட்சேபனையில்லை என்பதை சுட்டிக்காட்டும் விதத்தில் அமைந்திருக்கிறது இந்த ஆதரவு கோரும் கடிதம். 'என் வேட்பாளர் வெற்றி பெற பா.ஜ.க.வின் வாக்குகளைப் பெறுவதில் தயக்கமில்லை' என்பதை வெளிப்படுத்தியுள்ள தி.மு.க. தலைவர் கருணாநிதி, வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கான யுக்தியில் பா.ஜ.க.வை புறந்தள்ளி வைக்க இஷ்டமில்லை என்பதை கோடிட்டுக் காட்டியிருக்கிறார்!

தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் களத்தில் இறங்கும் நேரத்தில் தமிழகத் தேர்தல் களம் அ.தி.மு.க. மற்றும் தி.மு.க.விற்கும் இடையேயான முக்கிய போட்டி என்பது வாக்காளர் மனதில் அழுத்தமாகப்பதிவாகும். அதுவே வருகின்ற பாராளுமன்றத் தேர்தலின் பிரசார யுக்தியாக இருக்கும். இது தவிர மற்ற கட்சிகள் என்ன செய்யப் போகின்றன என்பது தான் இப்போதைக்கு எழுந்துள்ள சுவாரஸ்யமான கேள்வி. இந்தத் தொகுதியில் உள்ள 2.15 இலட்சம் வாக்காளர்கள் என்னென்ன பிரிவினர் என்பதும் இதற்கு சற்று உதவிக்கரமாக இருக்கும். இங்கே முக்கிய சமுதாயங்கள் என்று நினைத்தால் முதலில் இருப்பது பழங்குடி மக்கள் சமுதாயம். சுமார் 70000 வாக்காளர்கள் இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் 23000 பேரும், அருந்ததியினர் 12000 பேரும் இருக்கிறார்கள். ஆக மொத்தம் இந்த மூன்று பிரிவினரும் சேர்ந்து 2.15 இலட்சம் வாக்காளர்களில் 1.05 இலட்சம் வாக்காளர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு அடுத்தபடியாக இருப்பது வன்னியர் இன வாக்கு வங்கி. அவர்கள் 35000 பேர் இருக்கிறார்கள். அதற்கு அடுத்தபடியாக இருப்பவர்கள் உடையார் சமுதாயம். அவர்கள் 17000 பேர் இருக்கிறார்கள். மீதமுள்ள நாடார், நாயக்கர் ஆகியோரின் சார்பில் தலா 10000 பேரும், கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் வாக்காளர்கள் 18000 பேரும் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வாக்குகளில் வன்னியர் சமுதாயத்திற்கும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கும் இடையே உருவாகி வரும் 'காதல் பிரச்சினை' இந்தத் தேர்தலில் எதிரொலிக்க வாய்ப்பு இருக்கிறது. டாக்டர் ராமதாஸ் அதற்காக வேட்பாளரை நிறுத்த முன்வரவில்லை என்றாலும், அவர் சார்ந்த சமுதாயத்தினர் யாருக்கு வாக்களிப்பார்கள் என்பது மிக முக்கியம். ஏனென்றால், வாழப்பாடி ராமமூர்த்தி தலைமையிலான அகில இந்திய திவாரி காங்கிரஸ், பா.ம.க.வுடன் இணைந்து இங்கு போட்டியிட்ட 1996 சட்டமன்றத் தேர்தலில் திவாரி காங்கிரஸ் வேட்பாளர் 12900 வாக்குகளைப் பெற்றார்! 'காதல் பிரச்சினையை' முன்வைத்து தனிக் கச்சேரி நடத்தி வரும் டாக்டர் ராமதாஸ், மலைவாழ் மக்களுக்காக ஒதுக்கப்பட்ட இந்தத் தொகுதியில் தன் பிரசாரத்திற்கு தன் இன மக்களிடம் எந்த அளவிற்கு ஆதரவு கிடைத்திருக்கிறது என்பதை சோதிக்க இங்கு போட்டியிட்டு இருக்கலாம். ஆனால் பிரதான வாக்கு வங்கியாக வன்னியர் வாக்கு வங்கி இல்லை என்பதால், அந்த விஷப்பரீட்சைக்கு டாக்டர் ராமதாஸ் தயாராக இல்லை. ஆனால் யாரை ஆதரிக்கப் போகிறார் என்பது தான் மிச்சமுள்ள கேள்வி. இன்றைய நிலையில் தன்னை கைது செய்த அ.தி.மு.க.வை ஆதரியுங்கள் என்று அவர் கூற முடியாது. அதற்குப் பதில் 'நாம் சும்மா இருந்து விட்டால் போதும். தாங்களாகவே வன்னியர் சமுதாயத்தினர் தி.மு.க.விற்கு வாக்களித்து விடுவார்கள்' என்று டாக்டர் ராமதாஸ் கருதி அமைதி காக்கலாம்.

விஜயகாந்த் தலைமையிலான தேசிய முற்போக்கு திராவிடர் கழகத்தைப் பொறுத்தவரை 'தி.மு.க.விற்கும், அ.தி.மு.க.விற்கும் மாற்று நான்' என்ற நிலைப்பாட்டை எடுத்துச் செல்ல அவர் விரும்புவதால், தே.மு.தி.க. இங்கே தனித்துப் போட்டியிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. ஏற்கனவே ஏற்காடு தொகுதியில் 2006 சட்டமன்றத் தேர்தலில் அவரது வேட்பாளர் 10736 வாக்குகள் பெற்றிருந்தார். பிறகு 2009 பாராளுமன்றத் தேர்தலின் போது கள்ளக்குறிச்சி பாராளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டார் தே.மு.தி.க. வேட்பாளர் சுதீஷ். இந்த பாராளுமன்றத் தொகுதியின் கீழ் ஏற்காடு சட்டமன்றத் தொகுதியும் வருகிறது. (ஒரு பாராளுமன்றத் தொகுதிக்குள் ஆறு சட்டமன்றத் தொகுதிகள் இருக்கும்). அப்போது ஏற்காடு சட்டமன்றத் தொகுதியில் சுதீஷ் 21949 வாக்குகள் பெற்றார். இதன் அடிப்படையில் பார்த்தால் தே.மு.தி.க. வேட்பாளர் 15000 வாக்குகளையாவது பெறும் வாய்ப்பு உண்டு. ஏனென்றால், விஜயகாந்தின் மைத்துனரான சுதீஷுக்கு விழுந்த வாக்குகள் இன்னொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தே.மு.தி.க. வேட்பாளருக்கு அப்படியே விழும் என்று கூற முடியாது. இங்கு விஜயகாந்த் வேட்பாளர் பெறும் வாக்குகளே அடுத்து வரும் பாராளுமன்றத் தேர்தல் கூட்டணிக்கு அச்சாரமாக அமையும். ஒரு வேளை, காங்கிரஸ் கட்சியும் தே.மு.தி.க.வை ஆதரித்தால், ஏற்காடு தொகுதி தே.மு.தி.க.விற்கு ஒரு திருப்பு முனையாக அமையலாம்.

காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த மட்டில் இன்னும் கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடிக் கொண்டிருக்கிறது. மத்தியில் தன் அரசை நிலைநிறுத்திக் கொள்ளவும், முக்கிய மசோதாக்களுக்கு ஆதரவைப் பெறவும் இன்றைய நிலையில் தி.மு.க. தேவை என்றே காங்கிரஸ் மேலிடம் நினைக்கிறது. ஆனால் உள்ளூர் காங்கிரஸ்காரர்களுக்கு அந்த நினைப்பு இல்லை. அவர்கள் தே.மு.தி.க. பக்கமோ, அ.தி.மு.க. பக்கமோ அணி சேர வாய்ப்புக் கிடைக்காதா என்ற ஏக்கத்திலேயே இருக்கிறார்கள். இலங்கையில் நடக்கும் பொதுநலவாய மகாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக்கூடாது என்று வலியுறுத்தி உண்ணாவிரதம் இருந்த தியாகுவின் உண்ணாவிரதத்தை முடித்து வைக்க ஏற்பாடு செய்யுங்கள் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு பிரதமர் மன்மோகன்சிங் கடிதம் எழுதியதிலிருந்தே 'மேலிடம்' தி.மு.க.வை உதறித்தள்ள முன்வரவில்லை என்பதை வெளிப்படுத்துகிறது. தி.மு.க. நம்முடன் கூட்டணிக்கு வராது என்று முடிவு செய்து தே.மு.தி.க.வை ஆதரித்து விடலாம் என்ற மனநிலைக்கு இன்னும் வர முடியாமல் தவிக்கிறது காங்கிரஸ் கட்சி என்பதே புலப்படுகிறது. ஒருவேளை, தே.மு.தி.க.வை ஆதரிக்கலாம் என்று முடிவு எடுத்தால் கூட ஏற்காடு சட்டமன்ற இடைத் தேர்தல் மும்முனைப் போட்டியைச் சந்திக்கும் என்றே தெரிகிறது. தமிழகத்தில் 25 பேர் கொண்ட தேர்தல் பொறுப்பாளர்களை காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது இதற்கு ஒரு முன்னோட்டமா என்ற கேள்வியைக் கிளப்பியிருக்கிறது.

ஆனால், ம.தி.மு.க.தான் பெரும் சிக்கலில் இருக்கிறது. அக்கட்சி அ.தி.மு.க.வையும் ஆதரிக்க முடியாது, தி.மு.க.வையும் ஆதரிக்க முடியாது என்ற நிலைப்பாட்டை சமீபத்தில் விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் அறிவித்தது. அதுமட்டுமன்றி 'ம.தி.மு.க.-பா.ஜ.க' கூட்டணி அமையும் என்று தன் கட்சி நிர்வாகிகளிடம் வைகோ தொடர்ந்து சொல்லி வருகிறார். அதன்படி அவரே ஒரு வேட்பாளரை இங்கு நிற்க வைத்து, பா.ஜ.க. மற்றும் விஜயகாந்தின் ஆதரவைக் கோரலாம். ஆனால் அதற்குரிய அடிப்படை வாக்குவங்கி இந்தத் தொகுதியில் ம.தி.மு.க.விற்கு இல்லை. அக்கட்சி பிறந்ததில் இருந்து ஏற்காடு சட்டமன்றத் தேர்தலில் ம.தி.மு.க. போட்டியிடவில்லை. அதனால்தான் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும், ஏன் வைகோவை விட சிறிய கட்சித் தலைவர்களுக்குக் கூட ஆதரவு கேட்டு கடிதம் எழுதிய தி.மு.க. தலைமை, வைகோவிற்கு கடிதம் எழுதவில்லை. பா.ஜ.க.விற்கோ இங்கு 1500 முதல் 2000 வாக்குகள் மட்டுமே இருக்கின்றது. கடந்த 2006 மற்றும் 2011 சட்டமன்றத் தேர்தல்களின் முடிவு இதைத்தான் காட்டுகிறது. அதனால் ம.தி.மு.க.- பா.ஜ.க. ஆகிய இரு கட்சிகளிடம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட மாற்றம் ஏற்காடு தேர்தலால் தடுமாறி நிற்கிறது.

அ.தி.மு.க.வும், தி.மு.க.வும் மோதிக்கொள்ளும் இந்த ஏற்காடு இடைத்தேர்தல் 'தே.மு.தி.க.- காங்கிரஸ் கூட்டணி' 'பா.ஜ.க.- ம.தி.மு.க. கூட்டணி' என்றெல்லாம் கடந்த சில மாதங்களாக நடைபெற்ற பிரசாரத்திற்கு சங்கடத்தை உருவாக்கியிருக்கிறது. அதேசமயத்தில் ஏற்காடு சட்டமன்ற இடைத்தேர்தலின் முடிவுகள் எதிர்கால பாராளுமன்ற கூட்டணிக்கான அடித்தளத்தை அமைத்துக் கொடுக்கும் என்றே தெரிகிறது. ஏனென்றால் 'கட்சிகளின் அணிகள்' எப்படியிருக்கும் என்ற காட்சிகள் இந்தத் தேர்தல் முடிவிற்குப் பிறகு தெளிவாகிவிடும்.

## தியாகு உண்ணாவிரதம் போட்ட 'பொதுநலவாய' தீனி!



தியாகுவின் உண்ணாவிரதம் இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டை மீண்டும் பரபரப்பாக்கியிருக்கிறது. அக்டோபர் 1ஆம் திகதி தொடங்கிய இந்த உண்ணாவிரதம், 15ஆம் திகதி முடிவுக்கு வந்திருந்தாலும், உண்ணாவிரதத்தின் தாக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம் இன்னும் தமிழக அரசியலை உசுப்பி விட்டிருக்கிறது. தமிழ்த் தேசிய விடுதலை இயக்கப் பொதுச் செயலாளர் தியாகுவின் உண்ணாவிரதம் ஈழத்தமிழர்களுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் மற்ற தமிழக அரசியல் தலைவர்களைப் பதற்றப்பட வைத்தது என்பதே நூற்றுக்கு நூறு சதவீதம் உண்மை. குறிப்பாக 'தியாகு'வின் உண்ணாவிரதத்தை திராவிட முன்னேற்றக் கழகம், விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு, திராவிட இயக்க தமிழர் பேரவை போன்றவை 'ஹைஜாக்' பண்ணிக்கொண்டன. முன்பு மாணவர்கள் உண்ணாவிரதத்தை எப்படி வைகோ, பழ. நெடுமாறன், நல்லகண்ணு போன்றோர் கையிலெடுத்துக் கொண்டார்களோ, அதேபோல் இந்தமுறை தி.மு.க. தரப்பு தியாகுவின் உண்ணாவிரதத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

தியாகுவைச் சந்தித்த வைகோ 'உண்ணாவிரதத்தைக் கைவிடுங்கள்' என்று கேட்டுக் கொண்டார். நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் அந்தப் பக்கம் போகவில்லை. பழ.நெடுமாறனோ தஞ்சாவூரில் 'முள்ளிவாய்க்கால்' நினைவுத்தூண் திறப்பு விழா நிகழ்ச்சிக்கான முன்னேற்பாடுகளை கவனித்துக் கொண்டிருப்பதால், தியாகுவை வாழ்த்த வரவில்லை. அதே நேரத்தில் தியாகுவின் உண்ணாவிரதம் மெதுவாக மாணவ சமுதாயத்தில் ஊடுருவிக் கொண்டிருப்பதை உணர்ந்த அரசும், இந்த உண்ணாவிரதத்தை சுமுகமாக முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் அவரை ஆஸ்பத்திரியில் சேர்த்தது. அங்கும் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தார் தியாகு. இந்நிலையில் தி.மு.க. தலைவர் கருணாநிதி தன் கட்சி எம்.பி. டி.ஆர்.பாலுவை அனுப்பி பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்திக்க வைத்தார். பிரதமரும், 'பல்வேறு காரணிகளை ஆலோசித்த பிறகே பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பது குறித்து நான் முடிவெடுப்பேன்- குறிப்பாக உங்கள் கட்சி (தி.மு.க.) மற்றும் தமிழர்களின் உணர்வுகளையும் மதித்தே அப்படியொரு முடிவு எடுக்கப்படும்' என்று வாக்குறுதி கொடுத்து கலைஞர் கருணாநிதிக்கு ஒரு கடிதம் எழுதினார். அது மட்டுமன்றி, 'நீங்கள் தியாகுவின் உண்ணாவிரதத்தை முடித்து வைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுங்கள்' என்றும் பிரதமர் அக்கடிதத்தில் தி.மு.க. தலைவருக்கு ஒரு கோரிக்கை விடுத்திருந்தார்.

பிரதமர் மன்மோகன்சிங்கின் இந்த வாக்குறுதியை தி.மு.க. அமைப்புச் செயலாளர் டி.கே.எஸ். இளங்கோவன் தியாகுவைச் சந்தித்துச் சொல்ல, அவரும் தன் உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டார். அங்கிருந்தவாறு அளித்த பேட்டியில், 'பிரதமர் அளித்துள்ள வாக்குறுதி முதற்கட்ட வெற்றி' என்று கூறினார் தியாகு. இந்நிலையில் பொதுநலவாய மாநாடு பற்றி தமிழக முதல்வர் ஜெயலலிதா பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு அக்டோபர் 17ஆம் திகதி ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதில் தி.மு.க.விற்கு பிரதமர் அளித்த வாக்குறுதியை மேற்கோள் காட்டியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. அக்கடிதத்தில், 'தமிழர்களின் உணர்வுகளை மதித்து முடிவு எடுக்கப் போவதாக நீங்கள் கூறியிருப்பதாக செய்திகள் பார்த்தேன்' என்று கூறிவிட்டு, 'தமிழக மக்களின் உணர்வுகளையும், கட்சி பேதமற்ற ஒருமித்த கருத்தையும் மதித்து, அடுத்த மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய உச்சி மகாநாட்டைப் புறக்கணிக்கும் இந்தியாவின் முடிவை நீங்கள் தெரியப்படுத்துவீர்கள் என நம்புகிறேன்' என்று மீண்டும் பிரதமருக்கு கடிதம் எழுதியிருக்கிறார். இந்தியா பங்கேற்றால் அது தமிழக மக்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தும் என்பதையும் சுட்டிக்காட்டி பிரதமரை முதல்வர் எச்சரித்துள்ளார்!

பொதுநலவாய மகாநாட்டில் இந்தியா பங்கேற்கும் விவகாரம் மீண்டும் தமிழகத்தில் விஸ்வரூபம் எடுக்கிறது. தியாகுவின் உண்ணாவிரதம் அதற்கு தீனி போட்டிருக்கிறது. விரைவில் மாணவர்கள் அமைப்புகள் கூட மீண்டும் பெரிய அளவில் ஒரு போராட்டத்திற்கு தயாராகிக் கொண்டிருக்கிறது என்ற பேச்சும் அரசல் புரசலாகக் கிளம்பியிருக்கிறது. இந்தியா, இலங்கையில் நடக்கும் பொதுநலவாய மகாநாட்டில் பங்கேற்கக்கூடாது என்ற கோரிக்கையை வலியுறுத்தி நவம்பர் மாத முதல் வாரத்தில் இன்னும் விறுவிறுப்பான போராட்டங்கள் தமிழகத்தில் தலைதூக்கும் என்றே தெரிகிறது.

## 'நமக்குள் போட்டி. நமக்குள் மட்டுமே போட்டி' தி.மு.க.-அ.தி.மு.க. அதிரடி முடிவு!

சில மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற ராஜ்ய சபைத் தேர்தலில் கனிமொழியின் வெற்றிக்கு காங்கிரஸின் உதவியைப் பெற்றது தி.மு.க. ஆனாலும், கனிமொழியின் வெற்றி அ.தி.மு.க. போட்டியிடாததாலேயே கிடைத்தது என்ற குற்றச்சாட்டை விஜயகாந்த் முன்வைத்தார். அன்றிலிருந்து தி.மு.க.விற்கும், அ.தி.மு.க. விற்கும் இரகசிய உறவு என்ற பிரசாரத்தையும் அவர் கிளப்பிவிட்டார். இந்தப் பிரசாரம் கிராம அளவில் கூட மெல்ல நகரத் தொடங்கியது. இந்த வேளையில் தமிழக அரசியல் களம் பா.ஜ.க.வின் பிரதமர் வேட்பாளர் நரேந்திரமோடியை வைத்து முன்னிறுத்தப்படுகிறது. சமீபத்தில் திருச்சிக்கு வந்து மகாநாடு நடத்தி விட்டுச் சென்றார் மோடி. பிறகு பிரபல வழக்கறிஞர் பல்கிவாலா ஆற்றிய உரைகள் அடங்கிய புத்தக வெளியீட்டு விழாவிலும் நரேந்திரமோடி பங்கு கொண்டார். சென்னையில் உள்ள மியூசிக் அகடமியில் இந்த விழா நடைபெறுவதாக இருந்தது. ஆனால் தீவிரவாதிகள் பொலிஸ் பக்ருதீன் கைது, அதைத் தொடர்ந்து ஆந்திர மாநிலம் புத்தூரில் மாலிக், பன்னா இஸ்மாயில் ஆகியோர் அதிரடி ஒப்பரேஷனில் கைது செய்யப்பட்டது எல்லாம் நரேந்திர மோர்டியின் பாதுகாப்பு விடயத்தில் தமிழக பொலிஸை டென்ஷன் அடைய வைத்தது.

இதனால், மியூசிக் அகடமியில் நடைபெறும் புத்தக வெளியீட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழா மோடியின் பாதுகாப்பிற்கு உகந்தது அல்ல என்று எச்சரிக்க, அதைத் தொடர்ந்து அந்த விழா சென்னை பல்கலைக்கழக ஆடிட்டோரியத்தில் நடைபெற்றது. மோடி வருகையை முன்னிட்டு மட்டுமல்ல, அதற்கு முன்பே 'தமிழக அரசியல் நமக்குள் மட்டுமே சுற்றி வர வேண்டும்' என்ற நோக்கில் அ.தி.மு.க. தலைமையும், தி.மு.க. தலைமையும் பேசி வைத்தாற் போல் அறிக்கைகள் விட ஆரம்பித்தார்கள். உணவுப் பாதுகாப்புச் சட்ட மசோதாவிற்கு தி.மு.க. ஆதரவு அளித்ததில் நடைபெற்ற அறிக்கைப்போர், பெங்களூர் சொத்துக் குவிப்பு வழக்கு விவகாரத்தில் இரு தரப்பிற்கும் உச்ச நீதிமன்றம் வரை நடைபெற்ற வழக்குப் போர், அதை முன்னிட்டு தமிழகம் முழுவதும் தி.மு.க. தரப்பு விநியோகித்த 'நோட்டீஸ்' இது எல்லாமே தமிழக அரசியல் களத்தை 'அ.தி.மு.க.விற்கும் தி.மு.க.விற்கும் இடையே போட்டி' என்ற நிலைப்பாட்டை மீண்டும் தூக்கி நிறுத்தியது. இந்நிலையில் நரேந்திர மோடியை மையமாக வைத்து பா.ஜ.க., ம.தி.மு.க., தே.மு.தி.க. போன்ற கட்சிகள் எல்லாம் ஓரணியில் நிற்கப் போகின்றன என்ற பேச்சு கிளம்பியது. இதையும் முறியடிக்க இரு தலைமைகளுமே முயற்சிகள் மேற்கொண்டன.

ஏனென்றால், மாநில அரசியல் மோடியை மையமாக வைத்துச் சென்று விட்டால் அ.தி.மு.க.வைப் பொறுத்தவரை 'பிரதமர் பதவியை' குறிவைத்து செய்யப்பட்டு வரும் அக்கட்சியின் இரு வருட பிரசாரத்திற்கு சிக்கல். அதே போல் அ.தி.மு.க. அரசின் மீதான வெறுப்பினை தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ள நினைக்கும் தி.மு.க.விற்கும் பேரிழப்பு. பாராளுமன்றத் தேர்தல் களம், 'மோடிக்கும்- மற்றவர்களுக்கும்' என்று போட்டி ஏற்படுவதைவிட 'அ.தி.மு.க.விற்கும் தி.மு.க.விற்கும் போட்டி' அல்லது 'கருணாநிதிக்கும் ஜெயலலிதாவிற்கும் போட்டி' என்ற நிலைப்பாட்டில் சென்றால் மட்டுமே இரு திராவிடக் கட்சிகளுக்கும் லாபம். அது அதன் தலைவர்களுக்கும் தெரியாமல் இல்லை. அதனால் தான் அ.தி.மு.க.வின் 42 ஆவது ஆண்டு தொடக்க விழாவில் பேசிய அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா 'கருணாநிதி அட்டாக்'கை அந்தப் பேச்சில் பிரதானமாக முன்வைத்துள்ளார். அதேபோல் அதற்குப் பதிலளித்து தி.மு.க. தலைவர் கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில், 'ஜெயலலிதா அட்டாக்கை' முன் வைத்துள்ளார். அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த இரண்டரை வருடத்தில் இவ்வளவு கடுமையான வார்த்தைகளைப் பிரயோகம் செய்து கலைஞர் கருணாநிதி அட்டாக் பண்ணியிருப்பது இதுவே முதல் முறை. இரு தலைவர்களின் பேட்டிகள், அறிக்கைகள், 'நமக்குள் மட்டுமே தமிழக அரசியல் போட்டி இருக்கட்டும்' என்பதை மீண்டும் ஒரு முறை பகிரங்கப்படுத்துவதாகவே அமைந்திருக்கிறது! ■

---

*(66ஆம் பக்கத்தொடர்ச்சி)*

மருந்து உங்கள் கைக்கு வந்துவிடும். ஆனால், எந்தவிதமான விபரங்களையும் அவர்கள் கூறமாட்டார்கள். அதற்கு நீங்களும் ஒரு காரணம் என்றே கூறலாம். எக்காரணத்தைக் கொண்டும் நாம் மருத்துவரின் மருந்துச்சீட்டு இல்லாமல் மருந்து வாங்குவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். மருந்தாளர்களும் இதை உறுதிப்படுத்த வேண்டும்.

எந்தவொரு மருந்தும் நோயாளியை உடனடியாகத் தாக்காது. பக்க விளைவுகளையும் உடனடியாக ஏற்படுத்தாது. அவ்வாறான மருந்துகளைத் தயாரிக்க கம்பனிகளும் விரும்பமாட்டாது. அதனால் மருந்துச் சீட்டு இல்லாமல் மருந்துகளை உட்கொள்ளும் போது உங்களை நீங்களே சில நோய்களுக்கு இழுத்துச் செல்கின்றீர்கள். உதாரணமாக, பிரட்னிசிலோன் எனப்படும் மருந்தை மருத்துவரின் அனுமதியின்றி தொடர்ந்து உட்கொள்பவர்களுக்கு நீரிழிவு நோய் வரலாம். இந்த மருந்து தொடர்ந்து தேவையா? இல்லையா? என்பதை நிர்ணயிக்கும் பொறுப்பு மருத்துவரின் கையில் மட்டுமே உள்ளது. அந்தப் பொறுப்பை மருந்தாளராகிய நாங்களோ நோயாளராகிய நீங்களோ பொறுப்பெடுத்துக் கொள்ளக் கூடாது.

இலங்கையில் பட்டப்படிப்பு முடித்த மருந்தாளர்கள் இல்லை. அப்படி பட்டப்படிப்பு முடித்தவர்கள் கூட சில்லறை மருந்தகங்களில் கடமையில் இல்லை. அதற்குரிய காரணங்களாக சம்பளம், வேலை நேரம் போன்றவற்றைக் கூறலாம். அதைவிட மருத்துவர், சட்டத்தரணி என்றால் மதிக்கும் இந்த உலகம் மருந்தாளருக்கு அத்தகைய மதிப்பைக் கொடுப்பதில்லை. மருத்துவர் தவறு செய்யலாம் மருந்தாளர் தவறு செய்தால் நோயாளிக்கு மரணம் தான். மருத்துவர் தவறான மருந்தைக் கொடுத்து நோயாளிக்கு இறப்பு ஏற்பட்டால் சட்டப்படி முதலில் கைதாவது மருந்தாளர்தான். இத்தகைய பொறுப்பிலிருக்கும் மருந்தாளரை சமூகம் கவனத்தில் கொள்வதில்லை. அநேக மருந்தகங்களில் இருப்பவர்கள் மருந்தாளர்கள் அல்ல. உதவி மருந்தாளர்கள் தான். வெளிநாடுகளில் அவர்களை Pharmacy Technicians என்றுதான் குறிப்பிடுவார்கள். அவர்கள் குறைந்தது ஒரு பட்டப்படிப்பு முடித்திருக்க வேண்டும். இலங்கையில் பிரதானமாக மருந்து விற்கும் மருந்தாளர் தவிர அடுத்து இருப்பவர்கள் க.பொ.த (சா.த) சித்தியடைந்திருப்பார்களா? என்பது கேள்விக்குறிதான். நாம் மருந்தாளரின் மேற்பார்வையில் நமக்கு மருந்து கிடைக்கின்றதா? என்று உறுதிப்படுத்துவதோடு, நாம் செய்யக்கூடாததையும் செய்ய வேண்டியதையும் தெளிவாக அடையாளங் கண்டு நாம் வாழ வேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின் ஒரு சகாப்தம்

■ சிவகணேசன்



விளையாட்டு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




விளையாட்டுலகில் ஒரு வீரரின் ஓய்வு இந்தளவுக்கு ஒரு போதும் பரபரப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்திய தில்லை. விளையாட்டுலகை தன் பிடிக்குள் வைத்திருக்கும் கால் பந்தாட்டமென்றாலும் சரி வேறு விளையாட்டுகளென்றாலும் சரி மிகப்பெரும் வீரர்கள் பல்வேறு காலகட்டங்களிலும் ஓய்வுகளை அறிவித்தபோது உலகம் அவற்றை பரபரப்பில்லாது ஏற்றுக் கொண்டது. ஆனால் நூறு கோடி தாண்டிய மக்கள் கொண்ட இந் தியாவில் கிரிக்கெட்டை மதமாகவும் அதில் சச்சின் டெண்டுல்க ரைக் கடவுளாகவும் ரசிகர்கள் போற்றிப் புகழ்ந்து வந்த நிலையில் அந்தக் கடவுள் காட்சி தராமல் இருக்கப்போகிறாரென்றால் பக் தர்கள் தாங்கிக் கொள்வார்களா?

1983 இல் உலகக் கிண்ணத்தை கபில்தேவ் தலைமையிலான இந்திய அணி கைப்பற்றிய போது, இந்திய உபகண்டத்தில் கிரிக் கெட்டின் எழுச்சிக்கு வித்திடப்பட்டது. மேற்கிந்தியர்கள் தங்கள் அபார திறமையால் கிரிக்கெட் உலகைக் கட்டிப் போட்டிருந்த காலத்தில் அவர்களைத் தோற்கடித்து உலகக் கிண்ணத்தை இந் தியா வென்றது, கிரிக்கெட் உலகில் இந்தியாவின் ஆதிக்கத்திற்கு அத்திபாரமிட்டது. ஆனால், உலகக்கிண்ண த்தை இந்தியா வென் றிருந்த நிலையில், இந்தியாவில் நடைபெற்ற மேற்கிந்தியாவுக்கு எதிரான தொடரில் இந்தியா மிகமோசமாகத் தோல்வியைத் தழு விய போது இந்திய ரசிகர்களால் தாங்கிக்கொள்ள முடிய வில்லை. மேற்கிந்தியாவுக்கு கிளைவ் லொயிட், விவியன் ரிச்ச ர்ட்ஸ், கோல்டன் கிறினிட்ஜ், டெஸ்மன்ட் ஹெய்ன்ஸ் போன்று இந்தியாவுக்கும் ஒரு நம்பிக்கை நட்சத்திரம் தோன்றுமென்ற எதிர்பார்ப்பில் அன்று இந்திய ரசிகர்கள் இருந்தனர். அவர்களது எதிர்பார்ப்பு வீண்போகவில்லை. 1988 இல் தனது 14ஆவது வயதில் சக பாடசாலை மாணவன் வினோத் காம்ப்ளி (16வயது) உடன் சேர்ந்து 664 ஓட்டங்களை சச்சின் டெண்டுல்கர் குவித்த போது அவர் மீது அனைவரது கவனமும் திரும்பியது.

1988இன் பிற்பகுதியில் தனது 15ஆவது வயதில் மும்பை (பம்பாய்) வான்கடே மைதானத்தில் முதல்தரப் போட்டியில் குஜ ராத் அணிக்கு எதிராக ஆட்டமிழக்காமல் சச்சின் சதமெடுத்தார். முதல்தரப் போட்டியின் முதல் ஆட்டத்திலேயே சதம் எடுத்த முதல் வீரர் என்ற சாதனையுடன் தனது கிரிக்கெட் வாழ்வை சச்சி ன் தொடங்கினார். அந்தப் போட்டியில் இவரது அற்புத ஆட்டத் தைப் பார்த்தவர்கள் இவரை இந்திய தேசிய அணிக்குள் இழுக்க முயன்ற போது, வலைப் பயிற்சியில் இந்திய ஜாம்பவான் கபில் தேவின் பந்துகளை மிக வேகமாக ஆடிய விதத்தைப் பார்த்த இந்திய அணி வீரர் திலிப் வெங்சர்க்கார் சச்சினை மும்பை அணிக்குத் தேர்வு செய்ய, சச்சினின் கிரிக்கெட் வாழ்வு ஒளியூட் டப்பட்டது.

1989 இல் தனது 16ஆவது வயதில் சச்சின் இந்திய அணியில் இணைந்து கொண்டார். அப்போது, தமிழகத்தின் ஸ்ரீகாந்த் தலை மையில் இந்திய அணி பாகிஸ்தானில் பயணம் செய்தது. அப் போது பாகிஸ்தான் அணியில் இம்ரான் கான், ஜாவிட் மியன் டாட் போன்ற மிகப் பெரும் ஜாம்பவான்கள் இருந்தார்கள். கராச்சியில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் தான் சச்சின் அறிமுகமானார். 16ஆவது வயதில் அவர் 15 ஓட்டங்க ளில் வக்கார் யூனிஸின் பந்தில் ஆட்டமிழந்தார். ஆனால், அடுத்து நடந்த ஒரு நாள் போட்டியில், பாகிஸ்தானின் உலகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ்பெற்ற சுழல்பந்து வீச்சாளர் அப்துல் காதரின் பந்து வீச்சை நையப்புடைத்த போது கிரிக்கெட் உலகின் பார்வை சச்சின் மீது விழுந்தது. 18 பந்துகளில் 53 ஓட்டங்களைக் குவித்தார். இதில் அப்துல் காதரின் ஒரு ஓவரில் 27 ஓட்டங்களைக் குவிக்க கிரிக்கெட் உலகம் ஸ்தம்பித்தது. அ னை வ ரு ம் சச்சின் பற்றிப் பேச அதற்குப் பிறகு நடந்ததெல்லாம் வரலாறு. அதன் பின்னர் அவர் ஆடிய ஆட்டமெல்லாம் கிரிக்கெட் உலகையே பேச வைத்த விவரணச் சித்திரங்கள்தான்.

டெஸ்ட், ஒருநாள் போட்டிகளென அவரது படையல்களில் விருந்துண்டவர்கள் இந்திய ரசிகர்கள் மட்டுமல்ல, முழு உலகமும் தான். அன்று முதல் கிரிக்கெட் உலகை சச்சின் ஆளத் தொடங்கினார். கிரிக்கெட் போட்டிகளில் ரசிகர்களின் ஆர்வத்தைத் தூண்டி அவர்களை அதில் லயிக்க வைத்தவர் சச்சின்தான். டெஸ்ட் போட்டிகள், ஒரு நாள் போட்டிகளெல்லாம் மிகவும் சுவாரஸ்யமாகின. இந்திய அணி உள்நாட்டிலென்றாலும் சரி வெளிநாடுகளிலென்றாலும் சரி ஆடியபோது மைதானங்களில் ரசிகர் கூட்டம் திரண்டது. தொலைக்காட்சிப் பெட்டிகளின் முன்னால் மணிக்கணக்கில் ரசிகர்கள் மொய்த்துக் கிடந்தனர். 1990 இல் இங்கிலாந்தின் ஓல்ட்ராபோர்டில் நடைபெற்ற டெஸ்டில் தனது முதல் சதத்தை சச்சின் அடித்தார். 1991 -1992இல் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற போட்டிகளில் சதங்களை விளாசி உலக கிரிக்கெட்டின் கதாநாயகனானார்.

இதுவரை 198 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள சச்சின் 51 சதம், 67 அரைச்சதங்களுடன் 15, 837 ஓட்டங்கள் குவித்துள்ளார். இந்த இமாலய சாதனையை அவரது சமகால வீரர்களாலோ, எதிர்கால வீரர்களாலோ முறியடிக்கும் வாய்ப்புகள் மிக மிகக் குறைவுதான். 'ருவென்ரி - 20' கிரிக்கெட்டின் வருகையுடன் டெஸ்ட் போட்டிகளின் ஆயுள் முடிவுக்கு வந்து விட்டதாகக் கருதப்படும் நிலையில் துடுப்பாட்டத்தில் சச்சினதும் பந்து வீச்சில் முரளிதரனினதும் சாதனைகளை முறியடிப்பதென்பது சாத்தியமற்றதாகி விட்டது.

டெஸ்ட், ஒரு நாள் போட்டிகளில் மட்டுமல்லாது உலகக்கிண்ணத்திலும் அவர் பல்வேறு சாதனைகள் படைத்தார். 1992 முதல் கடைசியாக 2011 உலகக்கிண்ணம் வரை அனைத்து உலகக்கிண்ணப் போட்டிகளிலும் பல்வேறு சாதனைகள் படைத்தவர். 2010இற்குப் பின்னர் தான் அவர் பற்றிய விமர்சனங்கள் அதிகரிக்கத் தொடங்கின. ஒருநாள் போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிராக அறிமுகமான சச்சின் இதுவரை 463 ஒரு நாள் போட்டிகளில் 49 சதம், 96 அரைச் சதங்களுடன் 18, 426 ஓட்டங்கள் குவித்துள்ளார். இதில் 2010 இல் தென் ஆபிரிக்காவுக்கு எதிராக இரட்டைச் சதமடித்து ஒரு நாள் போட்டி வரலாற்றில் முதல் இரட்டைச் சதமடித்த வீரர் என்ற சாதனையையும் படைத்தார். 154 விக்கெட்டுகளை வீழ்த்தி 140 கேட்ச்களையும் பிடித்து சகல துறையிலும் சச்சின் முத்திரை பதித்துள்ளார்.

துடுப்பாட்டத்தில் மிகவும் பிரபலயம் பெற்றபோதும் அணித்தலைமை என்பது அவருக்கு ராசிப் பொருத்தமாக அமையவில்லை. கப்டன் பதவியை ஏற்ற இருமுறையும் தோல்விகள், பின்னடைவுகள், நெருக்கடிகளைச் சந்தித்தார். இதன் பின்னர் டிராவிட், கங்குலி உட்பட இளம் வீரர்கள் அணித் தலைமையை ஏற்ற போதும் அவர்களுக்கு கீழ் விளையாடத் தயங்கியதில்லை என்பதுடன், அவர்களை மிகவும் உற்சாகப்படுத்தி தனது பெருந்தன்மையை வெளிப்படுத்தி வீரர்கள், அணித் தலைவர்கள், அணி நிர்வாகம், ரசிகர்கள் மத்தியிலும் பெரும்பாராட்டைப் பெற்றதுடன், கப்டன் பதவிக்காக மீண்டும் ஒரு போதும் ஆசைப்பட்டதில்லை. எந்த வீரரானாலும் அவரது திறமையை மதிக்க சச்சின் ஒரு போதும் தயங்கியதில்லை. தன்னுடன் சேர்ந்து ஆடும் போதும் சரி அணியின் சக வீரர்கள் சிறப்பாக ஆடும் போதும் சரி அவர்களை தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்தி அவர்களுக்கு மிகப் பெரும் உந்து சக்தியாகவும் நம்பிக்கை நட்சத்திரமாகவும் திகழ்ந்தவர் சச்சின்.

எதிரணி வீரர்களின் திறமைகளையும் மிகவும் சிலாகித்துப் பாராட்டுவதில் சச்சினுக்கு நிகர் எவருமில்லை. எந்த சிறிய வீரரும் சச்சினிடம் சென்று எந்தக் கூச்சமோ, தயக்கமோ இன்றி துடுப்பாட்ட இரகசியங்களையும் நுட்பங்களையும் அறிந்து கொள்ள முடியுமென சிம்பாப்வே, பங்களாதேஷ் வீரர்கள் கூட பல முறை கூறியுள்ளனர். களத்தில் இருக்கும் போது எதிரணிப் பந்து வீச்சாளர்களுக்கு சிம்மசொப்பனமாக இருந்தவர் சச்சின். அவரது அற்புதமான, அட்டகாசமான ஆட்டங்களைப் பார்த்து எதிர்த்தரப்பில் நின்ற வீரர்களும் நடுவர்களும் தங்களை மறந்ததும் நினைவு கூரத்தக்கது.

சச்சின் படிப்படியாக ஓய்வுகளை அறிவித்தபோது ரசிகர்கள் மிகவும் வேதனையடைந்தனர். சச்சின் 'ருவென்ரி-20' போட்டியில் இந்திய அணிக்காக ஒரு போட்டியிலேயே பங்கேற்றார். வயது காரணமாக அதற்கு மேல் அதில் ஆடவில்லை. இளம் வீரர்களின் வருகையும் வயது காரணமாகவும் ஒரு நாள் போட்டிகளில் தடுமாறியபோது கடந்த வருடம் அதற்கு விடைகொடுத்தார். இந்திய ஊடகங்கள் அவருக்கு கடும் நெருக்கடி கொடுத்தன. அவரை எப்போது சந்தித்தாலும் அவரது ஓய்வு பற்றியே ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பத் தொடங்கிய போது, பொறுமையின் சின்னமான சச்சின் சில தடவை பொறுமையிழந்துள்ளார். எனினும், அதனை அவர் மீறவில்லை. அவரது ஆட்டம் பற்றி எவ்வளவோ விமர்சனங்கள் இருந்தன. சுயநலமாக ஆடுகிறார். அணிக்காக ஆடுவதில்லை என்றெல்லாம் பல தடவைகள் அவர் மீது விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால், அதுபற்றியெல்லாம் அவர் ஒரு போதும் அலட்டிக் கொள்ளவில்லை.

சச்சினின் அற்புத ஆட்டத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பின்னர் தான் கிரிக்கெட்டை இந்திய ரசிகர்கள் மதமாக்கி அதில் சச்சினை கடவுளாக்கினர். டெஸ்ட் போட்டியின் எதிர்காலம் கேள்விக்குறியாகி விட்ட நிலையில், அந்த டெஸ்ட்டுக்கு உயிரூட்டக்கூடியவராக சச்சின் கருதப்பட்டார். 'ருவென்ரி-20' போட்டிகள், குறிப்பாக ஐ.பி.எல்., கிரிக்கெட்டின் சாபக்கேடென வர்ணிக்கப்பட்ட போது அதனை பணம் கொழிக்கும் வியாபாரமாக மாற்றியது இந்திய கிரிக்கெட் சபைதான். டெஸ்ட் போட்டிகளின் முக்கியத்துவத்தைக் குறைத்து 'ருவென்ரி-20' போட்டிகளை பணத்துக்காக இந்திய கிரிக்கெட் சபை ஊக்குவிக்கின்றதென்ற குற்றச்சாட்டு அதன் மீதுள்ளது. டெஸ்ட் போட்டிகளிலிருந்து சச்சினை ஓய்வு பெறச் செய்து கிரிக்கெட்டின் அனைத்து வகையிலுமிருந்து அவரை அப்புறப்படுத்தியது இந்திய கிரிக்கெட் சபைதான் என்ற கடும் விமர்சனம் எழுந்துள்ளது. ஆனால், கண்துடைப்பாக, சச்சினின் கடைசி டெஸ்ட்டை அவரது சொந்த மண்ணில் வைத்து அவருக்கு மிகப் பெரும் பிரியாவிடை கொடுக்க இந்திய கிரிக்கெட் சபை முயல்கிறது.

1989 முதல் சுமார் 24 வருடங்கள் இந்தியாவுக்காக கிரிக்கெட் விளையாடி விட்ட சச்சின் எந்தச் சர்ச்சையிலும் சிக்காதவர். அவரை எவருடனும் ஒப்பிட முடியாது. கிரிக்கெட்டின் பிதாமகன் என வர்ணிக்கப்படும் அவுஸ்திரேலியாவின் டொன் பிரட்மனே சச்சினுக்கு மிகப்பெரும் புகழாரம் சூட்டியவர். ஆனாலும், கிரிக்கெட்டுக்கு அப்பால் இந்த உலகத்தை தன்னால் நினைத்துப் பார்க்கவே முடியாதெனக் கூறியவர் சச்சின். தன் னடக்கத்தின் மறுபெயர் சச்சின். மைதானத்திலும் சரி ஓய்வு அறையிலும் சரி சச்சினுடன் பழகியவர்களுக்குத்தான் அவரது அருமை பெருமை பற்றித் தெரியும். சச்சின் ஓய்வு பெற வேண்டுமென்ற வற்புறுத்தல்கள் அதிகரித்து வந்த போதும், சச்சின் இல்லாத கிரிக்கெட்டை நினைத்துப் பார்க்க முடியவில்லை எனக் கூறுவோர் இன்றைய இந்திய இளம் வீரர்களான கோஹ்லி, ரோகித் சர்மா போன்றோர்.

ஆனாலும், சச்சின் ஓய்வுபெறும் விடயத்தில் ஓரளவு சலிப்பைச் சந்தித்து விட்டதாக பல ஊடகங்கள் விமர்சிக்கின்றன. தனது திறமையின் உச்சத்தில் இருக்கும் போது, ஓட்டங்களை குவித்து சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கும் போது சச்சின் ஓய்வை அறிவித்திருந்தால் அது இந்தியா முழுவதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும், கவலையையும் ஏற்படுத்தியிருக்கும், அவருக்கு மிகவும் பெருமையை சேர்த்திருக்கும் என்றெல்லாம் விமர்சிப்போரும் இருக்கின்றனர். ஆனாலும் சச்சினைப் பற்றி சாதாரணமாக ஒரு கட்டுரை எழுதிவிட முடியாது. அவரது 24 வருட கிரிக்கெட் வாழ்க்கையை விபரிப்பதென்றால் அத்தியாயங்களாக தொடர் கட்டுரைகளும் நாவல்களும் எழுதத்தான் வேண்டும். என்னதான் இருந்தாலும் சச்சின் ஒரு சகாப்தம் தான். தனது கிரிக்கெட் உலக ஓய்வின் மூலம் இந்திய கிரிக்கெட்டில் மட்டுமல்ல, உலக கிரிக்கெட்டிலும் மிகப்பெரும் சகாப்தம் முடிவுக்கு வருகிறது. இந்திய கிரிக்கெட்டை சச்சினுக்கு முன் சச்சினுக்குப் பின் என்று பிரிக்கலாம் என்று ரசிகர்கள் பலர் கூறுவது மிகப்பெரும் உண்மையாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிட கௌரவத்தை பேணுவதற்கு சளைப்பின்றி உழைத்த போராளி – சுனிலா

**புற்றுநோய்க்கு எதிரான சமரில் சுனிலா தோற்றுப்போனார். ஆனால், அவர் மனித உரிமைகளுக்கும் மனித கௌரவத்திற்கு மான தனது சமரைக் கைவிடாது தொடர்ந்தார். அவரது மரணத்திற்காக வருந்தும் அதேவேளை அவரது தளராத போராட்ட உணர்வை மெச்சுகிறோம்**



பேராசிரியர்
என். சண்முகரத்தினம்

*அரசாங்கத்தை விமர்சிப்பவர்களை பயங்கரவாதிகள் என்று நாமம் சூட்டி நாட்டை விட்டு ஓடச்செய்யும் அரசாங்கம் ஒன்றைக்கொண்ட நாட்டை ஜனநாயகநாடு என்று சொல்வதன் அர்த்தம்தான் என்ன? எது தேசபக்தி, எது தேசத்துரோகம் என்பதைத் தீர்மானிப்பவர் யார்? யார் யாரது குரல்கள் செவிமடுக்கப்படுகின்றன? எவரது உரிமைகள் உண்மையாகப் பாதுகாக்கப்படுகின்றன?*

***22.10.2012 இல் ஊடகவியலாளர் Kiri Westby உடனான நேர்காணலில் சுனிலா அபயசேகர கூறியவை***

2012, ஒக்டோபர் 2 ஆம் திகதியன்றுதான் சுனிலாவுடனான எனது இறுதிச் சந்திப்பு நிகழ்ந்தது. அப்போது அவர் நோர்வேஜிய உயிரின அறிவியல் துறைகள் பல்கலைக்கழத்தில் (Norwegian University of Life Sciences) சொற்பொழிவாற்ற வந்திருந்தார். போருக்குப்பின்னான இலங்கையில் பெண்களின் நிலையும், மனித உரிமைகளும், இராணுவமயமாக்கலும் ஆபத்தில் இருக்கும் புலமையாளர் (Scholar at Risk) ஒருவரின் சொந்த அனுபவங்கள் என்ற தலைப்பில் அவர் பேசுவதற்கு வந்திருந்தார். நோர்வேயில் வந்திறங்குவதற்கு முன்னரே சுனிலா எனக்கு தன் வருகை பற்றிக் கடிதம் அனுப்பியிருந்தார். ஆனால், அவர் வருகை பற்றி பல்கலைக்கழகத்தினர் மூலம் முன்கூட்டியே நான் அறிந்திருந்தேன். அவருடன் பல்கலைக்கழக வளாகத்தில் சந்திப்பதை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தேன். நோர்வேயில் Scholars at Risk (SAT) அமைப்பின் பிரிவு ஒன்று இயங்கிக் கொண்டிருந்தது.

அதுவே சுனிலாவுக்கான அழைப்பை விடுத்திருந்தது. SAT அமைப்பு நோர்வே பல்கலைக்கழகங்களுடனும் உயர் கற்கை நெறிகளுக்கான கல்லூரிகளோடும் தொடர்பு வலையமைப்பைக் கொண்டிருந்தது. சுனிலா அப்போது ஒல்லாந்தின் The Hague நகரில் அவர் முன்னர் கல்வி கற்ற Institute of Social Studies இன் வருகை ஆய்வாளராக இருந்தார். சில வருடங்களாக நாம் சந்திக்கும் சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை. அவரது சொற்பொழிவுக்கு முன்னர் உரையாடிய போது சுனிலா கலகலப்பாக இருந்தார். சொற்பொழிவுக்குப் பின்னர் பல்கலைக்கழத்தின் பிரதான உணவகத்தில் என் சக பல்கலைக்கழக ஆசிரியர்கள் சிலரோடும் சுனிலாவோடும் மதிய உணவை அருந்தினோம். அப்போது அவர் எனக்கும் நண்பர்களுக்கும் தம்மைப் பீடித்துள்ள நோய் பற்றியும் குறிப்பிட்டார். அவர் நோயிலிருந்து குணமடைவார் என நாங்கள் நம்பிக்கை கொண்டிருந்தோம். சுனிலாவின் அன்றைய சொற்பொழிவு பிரமாதம். அவரது பேச்சைத் தொடர்ந்து உயிர்ப்புடைய கலந்துரையாடலும் இடம்பெற்றது. பல்கலைக்கழகத்தின் நோர்வேஜிய மற்றும் பிற நாடுகளைச் சேர்ந்த உயர் பட்ட மாணவர்கள், பல்கலைக்கழக ஆசிரியர்கள் என்று பலர் சபையில் குழுமியிருந்தனர்.

இலங்கையில் தொடரும் இராணுவமயமாக்கல் பற்றியும் மனித உரிமைகள் மீறப்படுவது பற்றியும் அவர் எடுத்துக் கூறினார். போருக்குப் பிந்திய இலங்கையில் பெண்களின் அவல வாழ்வு பற்றியும் குறிப்பிட்டார். அவர் அரசாங்கத்தை மட்டுமல்லாது விடுதலைப்புலிகளையும் விமர்ச்சித்துப் பேசினார். அரசாங்கம் ஊடகவியலாளர்களைத் துன்புறுத்திவருவதையும் மனித உரிமைகளையும், ஜனநாயக சுதந்திரங்களையும் காப்பதற்காகப் போராடும் மனித உரிமைக்காப்பாளர்கள் வேட்டையாடப் படுவதையும் சுனிலா சுட்டிக்காட்டிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசினார். மகிந்த ராஜபக்ஷ எதிர்க் கட்சி அரசியல்வாதியாக இருந்த காலத்தில் தன்னைப் போன்ற மனித உரிமைக்காப்பாளர்களுடன் அணுக் கமாகச் செயற்பட்டார் என்றும் 1980 களில் அவர் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் மனித உரிமை மீறல் களை எதிர்த்து பிரசார இயக்கம் நடத் தினார் என்றும் சுனிலா குறிப்பிட் டார். அவரது உரை பகுப்பாய்வுத் தன்மை மிக்கதாய் இருந்தது. அவர் கருத்துகளை உணர்ச்சியோடு ஆணித்தரமாய் கூறினார். இன்று அதே மகிந்த ராஜபக்ஷவின் அடக்கு முறை ஆட்சியில் ஜனநாயக உரிமை கள் நசுக்கப்படுவதைக் கூறி இல ங்கை மக்களின் உரிமைகளுக்காக குரல் எழுப்பினார். மகிந்த ராஜபக்ஷ சர்வவல்லமை படைத்த நிறைவேற்று ஜனாதிபதியாக இருப்பதையும் நினைவுபடுத்தினார்.

சுனிலாவை முதன்முதலாக நான் 1970களில் சந்தித்தேன். அப்போது அவர் பல் திறன்கள் மிக்க ஒரு கலை ஞராகவும் இளமையும் நய நாக ரீகமும் மிக்க ஒருவராகவும் இருந் தார். சுனிலாவின் தந்தை சாள்ஸ் அபயசேகரவை எனக்கு நன்றாகத் தெரியும். நான் அக்காலத்தில் வேலை செய்த நிறுவனத்தின் தலைமை அதி காரியாக அவர் இருந்தார். அவர் எனது மேலதிகாரி அதற்கும் மேலாக நெருங்கிய நண்பரும் ஆவார். சாள்ஸ் ஒரு மனித உரிமைப் போராளி, பண்பட்ட ஆய்வறிவாளர். இளம் சுனிலா அப்போது அரசிய லில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். பெண்ணியவாதியாகவும் ஜே.வி.பி ஆதரவாளராகவும் இருந்தார். அக்கா லத்தில் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) ''விமுக்தி கீ'' என்னும் விடுதலைக்கீதங்கள் என்ற ஒரு இசை நிகழ்ச்சியைப் பல இடங்களிலும் அரங்கேற்றி வந்தது. இந் நிகழ்ச்சிக ளில் தோன்றும் சுனிலா ஒரு இசைத் தாரகையாக பிரகாசித்துக் கொண்டி ருந்தார். ஆனால், விரைவிலேயே சுனிலா மக்கள் விடுதலை முன்ன ணியை விட்டு நீங்கிச் சென்றார். 1980களில் அவர் ஓர் முனைப்பு மிகு மனித உரிமைப் பிரசாரகராகவும் போராளியாகவும் மாறினார். சுனிலா மனித உரிமைச் செயற்பாட்டாளராக மாறிய காலகட்டம் இலங்கையின் அரசியல் நிலத்தோற்றத்தில் முக்கிய திருப்பங்கள் ஏற்பட்ட காலமாகும். இனத்துவ வேற்றுமை ஆழமாகிக் கொண்டிருந்தது. ஆயுதப்போராட் டம் வெடித்தது. நவதாராள பொருளா தாரக் கொள்கைகள் செயற்படுத்தப் பட்டன. தொழிலாளர் உரிமைகள் பறிக்கப்பட்டன. நாட்டில் அதிகார வாதம் மேலோங்கியது. இடதுசாரி



நினைவுப் பரவல்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இயக்கம் பிளவுபட்டு பலவீனமுற்றிருந்தது. சிவில் சமூகம் தொடர்ச்சியான தாக்குதல்களுக்கு உள்ளானது. நாட்டிற்குள்ளே இயங்கிய மனித உரிமைக் குழுக்கள் பலவிதமான தொல்லைகளுக்கு ஆளாகின.

மறுபுறத்தில் சர்வதேச மட்டத்தில் மேற்கிளர்ந்த மனித உரிமைச் சொல்லாடலை பெண்ணியவாதிகளும் ஏனைய தீவிரவாத விமர்சகர்களும் கடுமையாக விமர்சித்தனர். மேற்கு நாட்டின் பெண்ணியவாதிகள் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் தந்தையதிகார ஆணாதிக்கச் சார்பும் பாரபட்சமும் உடையது எனக் கண்டனம் செய்தனர். மூன்றாம் உலகின் பெண்ணியவாதிகள் மனித உரிமைச் சொல்லாடலும் மனித உரிமைச்சட்டமும் உலகின் தென்பகுதியில் வாழும் பெண்களின் பிரச்சினைகளைக் கவனத்தில் கொள்ளாது புறக்கணித்திருப்பதாகக் கண்டனம் செய்தனர். இவ்வாறாகப் பெண்ணியவாதிகள் முன்வைத்த விமர்சனம் மனித உரிமைகளின் விடய எல்லையை விரிவாக்கவும் சர்வதேச விவகாரங்களில் மனித உரிமை விடயங்களை புதிய கோணத்தில் விளக்கம் கொடுக்கவும் காரணமாயின. சர்வதேச மனித உரிமைகள் தொடர்பாக இடதுசாரிகள் எதிர்நோக்கிய இக்கட்டை SLAVOJ ZIZEK என்ற அரசியல் மற்றும் சமூக சிந்தனையாளர் DOUBLE BLACKMAIL என்று கூறினார். உதாரணமாக, ஒருவர் நேட்டோ படைகளின் வான் தாக்குதலைக் கண்டித்தால் அவரை மிலோசெவிக்கின் மூல பாசிச (proto&Fascist ) ஆட்சிக்கும் அதன் இனச்சுத்திகரிப்புக்கும் துணை போவதாக குற்றம் சாட்டலாம். இதற்கு மாறாக மிலோசெவிக்கை கண்டனம் செய்து பேசினால் உலக முதலாளித்துவ புதிய ஒழுங்கின் ஆதரவாளன் என்று குற்றஞ்சாட்டலாம் என்று அவர் குறிப்பிட்டார். (ZIZEK, New Left Review, March April 1999). ஒரு இடதுசாரியைப் பொறுத்தவரை மனித உரிமைகளுக்கான போராட்டம் ஜனநாயகத்திற்கும் சமூக சமத்துவத்திற்குமான நீண்ட போராட்டம் ஒன்றின் பகுதியே ஆகும். தாராளவாத சர்வதேச மனித உரிமைகள் சொல்லாடலின் மட்டுப்பாடுகளைக் கவனத்தில் கொண்டுதான் இடதுசாரிகள் மனித உரிமைப் போராட்டத்திற்கு தமது ஆதரவை வழங்கி வருகின்றனர். அவர்கள் ஒரு மாற்று ஜனநாயக அரசியல் பண்பாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற உறுதியோடுதான் அதற்குத் தமது ஆதரவை வழங்கி வருகின்றனர். இன்று மனித உரிமைச் சொல்லாடல் ஒருமித்த தன்மையுடையதல்ல, அது பன்முகப் போக்குகளைக் கொண்டது. மேலும் சொல்வதானால், இன்று ஒன்றுக்கொன்று போட்டியிடும் மனித உரிமைச் சொல்லாடல்களின் காலம் எனச் சொல்வது பொருத்தமானது. இந்த விவாதங்களில் சுனிலாவின் நிலைப்பாடு என்ன என்பதை என்னால் திடமாக கணிப்பிட முடியவில்லை. ஆனால், அவரது பேச்சுகளும் செயல்பாடுகளும் அவரை பாலின வேறுபாடுகள் பற்றிய நுண்ணுணர்வையும் பாதிக்கப்பட்ட எல்லாத் தரப்பினரையும் உட்படுத்தும் கொள்கையையும் கொண்டவராக இருந்தார் என்பதைக் காட்டின.

அரச கட்டுப்பாட்டில் இருந்து வரும் ஊடகங்கள் சுனிலாவைத் துரோகி என்று கூறின. 2012இல் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வரப்பட்ட பிரேரணை நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதையும் பொறுப்புக் கூறலையும் வற்புறுத்தியது. இந்தப் பிரேரணையை ஆதரித்ததற்காகவே சுனிலாவின் மீது இவ்வாறான அபாண்டமான பழி சுமத்தப்பட்டது. ஆனால், சுனிலா மனஉறுதியும் துணிச்சலும் மிக்கவர். அவர் அரசின் இராணுவத்தின் அத்துமீறல்களைக் கண்டித்ததோடு, அரசின் துணைப்படைகளினதும், விடுதலைப் புலிகளினதும் அத்துமீறல்களையும் கண்டித்தார். இனவாத அடிப்படையில் ஆழமான பிளவுகளை உடைய இலங்கைச் சமூகத்தின் இனத்துவ, சமய பேதங்களுக்கு அப்பால் சென்று நீதிக்காக குரல் கொடுக்கும் துணிச்சல் அவரிடம் இருந்தது. அவர் மனித உரிமைக் கொள்கைகளின் உலகப்பொதுவான விழுமியங்கள் மீதும், மனித கௌரவம் மீதும் ஆழ்ந்த நம்பிக்கையுடையவராய் இருந்தார். இலங்கையில் பெரும்பான்மை இனத்துவ மேலாதிக்க அரசு இழைத்து வந்த கொடுமைகளையும் அநீதியையும் கண்டு உள்ளம் கொதித்தார். ஜனநாயக கொள்கைகளுக்காக பற்றுறுதியோடு செயற்படுவதில் உள்ள ஆபத்துகள் வெளிப்படையானவை. இருந்தபோதிலும், சுனிலா இனவாதத்திற்கும் அதிகாரவாதத்திற்கும் எதிராக அச்சமின்றிக் குரல் கொடுத்தார்.

இலங்கையில் யுத்தத்தின் முடிவு ஜனநாயகத்தின் மலர்ச்சிக்கும், மனித உரிமைகளைப் பேணுவதற்குமான சமிக்ஞையாக அமையவில்லை. இது ஒரு துர்அதிஷ்டமான விடயம். யுத்தத்தைத் தொடர்ந்து பெரும்பான்மை இனத்தின் வெற்றிப் பெருமித உணர்வு கிளர்த்தப்பட்டது. இராணுவமயமாக்கல் அதிகரித்தது. குற்றம் இழைப்போர் தண்டனையில் இருந்து தப்பிக் கொள்வதும், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மற்றும் சுதந்திர ஊடகவியலாளர்கள் வேட்டையாடப்படுவதும் தொடர்ந்தது. தனது சொந்தப் பாதுகாப்பைக் கருதிச் சுனிலா நாட்டை விட்டு வெளியேறினார். புற்றுநோயுடன் போராடியவாறே தமது வகிபாகத்தை அவர் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருந்தார். இலங்கைக்கு மீண்டும் வந்த அவர் தன் இறுதி நாட்களை தனது அன்புக்குரியவர்களுடன் செலவிட்டார். புற்றுநோய்க்கு எதிரான சமரில் சுனிலா தோற்றுப்போனார். ஆனால், அவர் மனிதஉரிமைகளுக்கும் மனித கௌரவத்திற்குமான தனது சமரைக் கைவிடாது தொடர்ந்தார். அவரது மரணத்திற்காக துயருறும் அதே வேளை அவரது அணையாத போராட்ட உணர்வை வாழ்த்திக் கொண்டாடுவோமாக. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




க.சண்முகலிங்கம்

# ஏ.பி.டி சொய்சா

## போர்க்குணமிக்க சோசலிஸ்ட் ஜனநாயகவாதியும் பௌத்த சீர்திருத்தவாதியும்

ஆய்வறிவாளர், சிந்தனையாளர், எழுத்தாளர், கலைஞர், அரசியல்வாதி என்ற பன்முக ஆளுமைமிக்க ஏ.பி.டி.சொய்சா (1890 -1968) பற்றி அவரின் மகளும் இலங்கையின் முன்னணி ஆய்வறிவாளருமான குமாரி ஜயவர்த்தன வாழ்க்கை வரலாற்று நூல் ஒன்றை எழுதியுள்ளார். A.P.dezoysa combative social Democrat and Buddhist Reformer in 20th century sri lanka என்பது நூலின் தலைப்பு. தனிநபர் ஒருவரின் வாழ்க்கை வரலாற்றை 20ஆம் நூற்றாண்டு இலங்கையின் சமூக வரலாற்றுடன் இணைத்துச் சுவைபடச் சித்திரிக்கும் நூல் இது.




1890ஆம் ஆண்டில் காலி மாவட்டத்தில் ரண்தொம்ப என்ற கிராமத்தில் பிறந்த சொய்சா காலி மகிந்த கல்லூரியிலும், கொழும்பு வெஸ்லி கல்லூரியிலும் ஆங்கிலம் மூலம் கல்வி பெற்று மெற்றிக்குலேசன் பரீட்சையில் தேர்ச்சி பெற்றார். 1920 -1931 வரை மகிந்த, வெஸ்லி, ஆனந்த, றோயல், தர்மராஜ (கண்டி) முதலிய பிரபல கல்லூரிகளில் ஆசிரியராக பணியாற்றிவிட்டு மேற்படிப்புக்காக பிரித்தானியாவிற்குச் சென்றார். சிக்கனமான வாழ்க்கை மூலம் தன்கையில் இருந்த சிறுதொகைப் பணத்துடன் லண்டன் சென்ற சொய்சா பட்டப்படிப்பை முடித்ததோடு மானிடவியலில் டாக்டர் பட்டமும் பெற்றார். பாரிஸ்டராகி சட்டத்துறையிலும் தகைமை பெற்றார். லண்டனில் புலமையாளர்கள்,அறிவாளிகள், இடதுசாரி லிபரல் அரசியல்வாதிகள் ஆகியோருடன் ஊடாடிய சொய்சா, 1934 இல் இலங்கைக்குத் திரும்பி வழக்கறிஞராகத் தொழில் செய்ததோடு கொழும்பு பல்கலைக்கழகக் கல்லூரியில் வருகை தரு விரிவுரையாளராகவும் பணியாற்றினார். டொனமூர் சட்டசபைக் காலகட்டத்தில் 1936இல் கொழும்பு தெற்குத் தொகுதியில் போட்டியிட்டு சட்டசபை உறுப்பினராகத் தெரிந்து எடுக்கப்பட்டார். 1941-43 காலத்தில் கொழும்பு மாநகர சபையின் உறுப்பினராகவும் இருந்தார். பெண்கள் உரிமைகள் தொழிலாளர் உரிமைகள், சிறுபான்மையினர் உரிமைகள், ஆகியவற்றுக்காக குரல்கொடுத்த முற்போக்கு அரசியல்வாதியாக விளங்கிய சொய்சா கொழும்பு நகரின் மலையாளித் தொழிலாளர்களை நாடு கடத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டபொழுது அதனை எதிர்த்தார். இனவாத அரசியல்வாதிகள் அவரைக் 'கொச்சி சொய்சா' என்று வசைபாடினர். சொய்சா மலையாளிகள் எமது இரத்த உறவினர்கள் அல்லவா என்ற பொருள்பட 'Malayalis are our kith and kin' என்று கூறி தொழிலாளி வர்க்கத்திற்குள் இனவாதத் தைப்புகுத்த முயன்றவர்களிற்கு பதிலடி கொடுத்தார்.

## வாழ்க்கை வரலாற்று நூல் அறிமுகம்

சிங்கள இலக்கியம், மொழியியல், அகராதியியல் ஆகியவற்றிற்கு சொய்சா ஆற்றிய பங்களிப்பு மகத்தானது என்று போற்றப்படுகின்றது. பல சிங்கள-ஆங்கில அகராதிகளை வெளியிட்ட சொய்சா பாளி, சிங்களம், சமஸ்கிருதம், லத்தீன், ஆங்கிலம் ஆகிய பன்மொழிகளில் ஆழமான புலமை உடையவர். தனியாக ஒரு அச்சகத்தையும், பதிப்பகத்தையும் நடத்தியதோடு, பல நூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை வெளியிட்டவர், 20ஆம் நூற்றாண்டில் இலங்கையில் பிரபல மான சிங்கள அறிஞர்களான ஈ. டபிள்யு. அதிகாரம், முனிதாச குமார துங்க, மார்ட்டின் விக்ரமசிங்க போன் றோருடன் வைத்து எண்ணத்தக்க அறிவாளியாகத் திகழ்ந்தார்.

நூலின் தலைப்பில் குறிப்பிட்டிருப் பது போல் சொய்சாவின் தனித்துவ மாக அவருடைய இருபண்புகளைக் குறிப்பிடலாம். 1) அவர் ஒரு சோஷ லிஸ்ட் ஜனநாயகவாதி- 'a combative social democra't அதாவது போர்க்குணமிக்க கொள்கைப் பற் றாளர். 2. பௌத்த சீர்திருத்தவாதி. இந்த இரண்டையும் கலப்பு செய்யும் போது அவர் இனவாதத்தின் பக்கம் சாயவில்லை. இது முக்கியமானது என்று நினைக்கின்றேன்.

'சோஷல் டிமோகிறட்' (இதனை 'சமூகஜனநாயகவாதி' என்று மொழி பெயர்ப்பது தவறு என்று எஸ்.வி.ஆர். ஓரிடத்தில் கூறியிருக்கிறார்) என்ப தன் பொருள் என்ன? பேராசிரியர் ஜயதேவ உயன் கொடவின் மேற்கோ ளினை குமாரி தந்திருக்கிறார். அதன் தமிழாக்கம் வருமாறு,

'சமூகவிடுதலை குறித்து ஜனநா யகம், சோஷலிசம் ஆகிய இரு சிந்த னைகளும் எடுத்துக்காட்டிய இலட்சி யங்களை சோஷலிச ஜனநாயகம் ஒன்றிணைக்கிறது. அது அவ்வாறான ஒரு கருத்தியலை (ideology) முன் வைப்பதோடு, கலப்புப் பொருளா தார முறையின் கீழ் அந்த இலட்சியங் களை (vision) அடைவதற்கான தந் திரோபாயத்தையும் வழங்குகிறது'.

இந்த மேற்கோள் சொய்சாவின் கொள்கையின் முற்போக்கு, கிளர்ச்சி வாத இயல்புகளை விளங்கிக் கொள்ள உதவுவதோடு அவரது தந்தி ரோபாயத்தின் மட்டுப்பாடுகளையும் புரிந்துகொள்ளவும் உதவுகிறது.

## பெருமதுர டி சில்வா குடும்பம்

தனிநபர் ஒருவரின் வாழ்க்கையூ டாக குமாரி ஜயவர்த்தன காலி மாவட்டத்தின் கிராமிய சமூக வர லாற்றினை பகுப்பாய்வு செய்திருப் பது இந்த நூலின் சிறப்பு அம்சம் என்று எனக்குப்படுகிறது. ஏ.பி.டி. செ ாய்சாவின் தாய்வழிப்பாட்டனார் பெயர் பெருமதுர டி.சில்வா என்ப தாகும். பெருமதுர டி. சில்வா குடும் பம் பற்றி நூலாசிரியர் பின்வருமாறு கூறுகிறார்.

'பெருமதுர டி சில்வா குடும்பம் கிராமத்துக் குட்டி பூஷ்வாக்கள் (Rural petty bourgeois) என்ற வகுப்பி னருக்கு வகைமாதிரியான உதாரண மாகும். இக்குடும்பத்தினர் கிராம த்தின் சிற்றுடைமை நில உடைமை யாளர் ஆவர். 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இவர்களின் பிள்ளை கள் எழுதுவினைஞர் சேவையில்



குமாரி ஜெயவர்தன

அல்லது ஆசிரியர் தொழிலில் சேர் ந்து கொண்டனர். இவைதாம் அக்கா லத்தின் 'கௌரவம்' மிக்க தொழில் கள். இவை பொருளீட்டுவதற்குரிய தொழில்களாக இல்லாத போதிலும் காலனிய சமூகத்தில் அந்தஸ்தை தேடிக்கொள்ள உதவின. நிலையான தொரு வருமானத்தையும், ஓய்வூதி யத்தையும் வழங்கிய இவ் உத்தியோ கங்கள், (இளைஞர்கள்) நல்ல சீதன த்தையும் பெற்றுக்கொள்வதையும் உறுதி செய்தன.' (பக்.21)

இம்மேற்கோளில் சொய்சா பிறந்த குடும்பம் குட்டி முதலாளிகள் (குட்டி பூஷ்வா) வர்க்கத்தைச் சேர்ந்தது என குமாரி வரையறை செய்கிறார். குட்டி முதலாளிகள் தமது சிற்றுடைமை நிலங்களைப் பராமரித்தல், கூலி உழைப்பையும் தேவைக்கேற்ப பயன்படுத்தி பயிர் செய்தல், குத்த கைக்கு கொடுத்து வருமானம் பெறு தல் என்பன மூலம் சிறு வருவாயைப் பெறுவதோடு, நடுத்தர வகுப்பு உத்தி யோகங்கள், சிறுவர்த்தக முயற்சிகள் மூலம் மேலதிக வருமானத்தையும் பெற்றுத் தமது அந்தஸ்தை உயர்த்திக் கொண்டவர்களாவர். இவர்களின் மூலம் விவசாயக்குடியான் நிலை (Peasant origins) சார்ந்தது. சமூகவி யலாளர் நியுடன் குணசிங்க இவ் வர்க்கத்தினரை 'குடியான் நிலையில் இருந்து பிரதானமாகக் கல்வியின் துணைகொண்டு தப்பிச் சென்றவர்கள் (escaped from peasant status mainly through education)' என்று கூறினார். (முன்னுரை பக் xviii இல் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது). இங்கே தப்பிச் செல்லுதல் என்ற சொல் அர்த்தச் செறிவுடையது. ஆசி ரியர், எழுதுவினைஞர் போன்ற பத விகளைப் பெறுவதற்காக குட்டி முத லாளி வகுப்பின் இளைஞர்கள் மேற் கொண்ட உழைப்பு, விடாமுயற்சி, பிரயாசை தனிநபர்களை உந்தித் தள்ளிய சக்திகளாகவும் சமூக மாற் றத்திற்கான செயலூக்கிகளாக வும் செயற்பட்டன. பெருமதுர டி சில்வா தன் ஆண்மக்களில் மூவரையும் ஆங்கிலக் கல்வி மூலம் சமூக அந் தஸ்தில் உயர்த்தி வைத்ததோடு, பதி னொரு வயதில் தனது தாயையும் (சில்வாவின் மகள்) தந்தையும் கொலரா தொற்று நோய்க்குப் பறி கொடுத்த பேரன் சொய்சாவை தேசிய அரங்கில் அறியப்பட்ட ஒரு வராக ஆக்கிவைத்தார். 1902 ஆம் ஆண்டில் ஏ.பி.டி.சொய்சா கொழும்பு வெஸ்லிக் கல்லூரிக்கு அனுப்பப்பட் டபோது பெருமதுர டி சில்வா தனது காணித்துண்டு ஒன்றை ரூ. 100/= இற்கு அடகு வைக்கிறார். டி சில்வா குடும்பம் மட்டுமல்ல அவரது உற வுக்குடும்பங்களும் அநாமதேயங் கள் என்ற நிலையில் இருந்து அறியப் பட்டோர் ஆயினர் (no body to some body) என்பதை குமாரி எடுத் துக் காட்டுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரண்தொம்பை, பலப்பிட்டிக்கும் அம்பலாங்கொடவிற்கும் இடையேயுள்ள கரையோரக் கிராமம். இக்கிராமத்தை குமாரி 'Colonial village' (காலனித்துவ காலக் கிராமம்) என்றும் கூறுகிறார். இதனையொத்த கிராமங்களில் பெரும் நில உடைமையாளர்கள் இருக்கவில்லை. 'குலாக்' வகுப்பு என்று சொல்லப்படும் செல்வந்த குடியான்களும் (rich peasants) இங்கு இருக்கவில்லை. (வறிய அல்லது இடைத்தர குடியான் நிலையில் இருந்து தமது உழைப்பால் கிடைத்த மேல்மிகையை முதலிட்டு விவசாய உற்பத்தியின் மூலம், பணக்கார விவசாயி என்ற நிலைக்கு உயர்பவர்களே 'குலாக்குகள்' (குலாக்குகள் என்பது ரஷ்ய மொழிச்சொல்). நிலப்பிரபுக்களும் குலாக்குகளும் இல்லாத ஒரு சமூகம் என்றும் குமாரி காலிமாவட்டத்தின் 'கொலோனியல் கிராமங்களை' வரையறை செய்கிறார். நூலாசிரியர் பலப்பிட்டி அம்பலாங்கொட பற்றிக் கூறியிருப்பவை சில அம்சங்களில் யாழ்ப்பாணத்திற்கும் ஆச்சரியமான வகையில் பொருந்துகிறது. ஏ.பி.டி.சொய்சாவை ஒத்த வயதினர் பலர் எனது வலிகாமம் பகுதியில் ஆங்கிலக் கல்வியின் மூலம் அநாமதேயங்கள் என்ற (குடியான் குடும்பம்) நிலையில் இருந்து அறியப்பட்டோர் ஆனதை நேரடியாகவே அறிந்திருக்கிறேன். அத்தகையோரின் வாழ்க்கை வரலாறு பற்றிய வாய்மொழிச் செய்திகளை சொய்சாவின் வரலாற்றுடன் ஒப்பிட்டவாறே இந்நூலைப் படித்த போது குமாரி ஜயவர்தனா யாழ்ப்பாணத்தின் உயர்தொழிலர் (Professionals) பற்றிக் கூறும் போது தனது பிறிதொரு நூலில் 'From no bodies some bodies through English education' என்று கூறியிருப்பதன் சமூகவியல் அர்த்தத்தையும் புரிந்து கொண்டேன். எம்மவர் சிலரே இன்றும் கூடப் பிதற்றிக் கொள்ளும் 'பிரித்தாளும் சூழ்ச்சி' 'பிரித்தானியர் யாழ்ப்பாணத்தவர்களுக்கு காட்டிய பாரபட்சம்' என்ற நைந்து போன தொடர்களை குமாரி போன்ற சமூக விஞ்ஞானிகள் . உபயோகித்ததே கிடையாது என்பதை இங்கு கூறுதல் அவசியம்.

## தென் இத்தாலியும், பலப்பிட்டி- அம்பலங்கொடவும்

மார்க்சிய சிந்தனையாளர் அந்தோனியோ கிராம்சி தென் இத்தாலியின் குடியான் சமூகம் பற்றி ஆழமான ஆய்வுகளைச் செய்தவர். பலப்பிட்டி -அம்பலாங்கொட கிராமங்களின் நிலையை விளக்குவதற்கு குமாரி கிராம்சியின் மேற்கோள் ஒன்றைத் தருகிறார். தென் இத்தாலியில் பெரு நிலங்கள் சிற்றுடைமைகளாக பிரிந்தழிவதையும் நிலத்தில் தங்கியிருந்த விவசாயிகள் உடலுழைப்புக்குத் தயாரில்லாத நிலையில் அலுவலகப் பதவிகளில் ('கோழிமேய்த்தாலும் பரவாயில்லை' என்ற எண்ணத்துடன்) நாட்டம் கொள்வதையும் கிராம்சியின் கூற்று எடுத்துக் காட்டுகிறது.

'பெரும் குடும்பங்களின் (நிலச்) சொத்துகள் துண்டங்களாகிக் கரைந்து அழிகின்றன. இருப்பினும், இந்த வகுப்பினர் உடல் உழைப்புக்குத் தயாராக இல்லை. எழுது வினைஞர்கள், காரியாலயச் சேவகர் போன்ற கீழ் மட்ட உத்தியோகப்பதவிகளையே விரும்பி அத்தகைய பதவிகளில் சேர்ந்து கொள்கின்றனர். (பக். 21)

இம்மேற்கோளில் சொத்துகள் துண்டங்களாக கரைந்தழிதல் (..... gets broken up... until it vanishes alto gether) என்ற விடயம் பற்றிய சுருக்கமான விளக்கம் அவசியம். தென் இத்தாலியில் சொத்துகள் மூத்த ஆண்மகனுக்கு வாரிசாக போய்ச்சேரும் முறை இருக்கவில்லை (Primogeniture என்றும் முறை காணிச் சொத்துகள் துண்டாடப்படுவதைத் தடுக்கக்கூடியது) இங்கிலாந்திற்கும் தென் இத்தாலிக்கும் இடையே உள்ள வேறுபாடு இது. தென் இத்தாலியில் பிள்ளைகளிடையே சந்ததி வழியில் காணிகள் துண்டங்களாவது போன்ற நிலை காலி மாவட்டத்தின் பலப்பிட்டிய-அம்பலாங்கொட பகுதிகளில் இருந்தது. ரண்தொம்பவின் பெருமதுர டி சில்வாவின் சொத்துகளும் துண்டங்களாக்கிச் சிதறியிருந்ததை குறிப்பிடுகிறார். இந்த முறை முன்னர் ஒரு காலத்தில் வசதியாக இருந்த விவசாயக் குடும்பங்களை வறுமை நிலைக் குத்தள்ளியதையும் காணலாம் (பக்.22). ரண்தொம்பையில், 'காலப் போக்கில் இந்த நிலங்கள் மேலும் மேலும் துண்டங்களாகின. இறுதியில் ஒருவருக்கு மிஞ்சியது அற்பமான துண்டமாகவிருக்கும். சொரியல் பங்காளிகளில் கிராமத்தை விட்டு வெளியே போனவர்கள் தமது பங்கைத் தரும்படி கேட்பதையே விட்டு விடுவார்கள். ஏ.பி.டி.சொய்சா செய்தது போல் தமது உறவினர்களுக்கு தம் பங்கை நன்கொடையாக எழுதிக் கொடுப்பதும் உண்டு' (பக்.23)

தனது பாட்டனார் தன்னைக் கல்விக் கற்பதற்காக அனுப்பியபோது ஈடுவைத்த 'இசக்கொல்வத்த' காணி

> சொய்சா என்ற தனிநபரின் வாழ்க்கையைக் கூறும் போது சாதி, வர்க்கம், சமயம் என்பன கிராமிய வாழ்க்கையில் எவ்வாறு பின்னிப் பிணைந்திருந்தன என்பதையும் அவற்றின் பிடியிலிருந்தும் அவை விரித்த தடைகளிலிருந்தும் விலகியும் தப்பியும் எவ்வாறு அவர் பயணித்தார் என்பதையும் குமாரி ஜெயவர்தன பகுப்பாய்வு முறையில் இந்த நூலில் விளக்கிச் செல்கிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் மிஞ்சியிருந்த 1/12 பங்கினை தனது மாமனாருக்கு 1941இல் சொய்சா நன்கொடையாக மாற்றிக் கொடுத்ததையும் குமாரி குறிப்பிடுகி றார். (பக்.29).

## சமூகப் பிரிவினைகள்

சொய்சா என்ற தனிநபரின் வாழ்க் கையை கூறும்போது சாதி, வர்க்கம், சமயம் என்பன கிராமிய வாழ்க்கை யில் எவ்வாறு பின்னிப் பிணைந்தி ருந்தன என்பதையும் அவற்றின் பிடி யில் இருந்தும், அவை விரித்த தடைகளில் இருந்தும் விலகியும் தப் பியும் அவர் பயணித்தார் என்ப தையும் குமாரி பகுப்பாய்வு முறை யில் விளக்கிச் செல்கிறார். குட்டி முதலாளித்துவப் புத்திஜீவி- அறி வாளி வகுப்பு 20 ஆம் நூற்றாண்டு வரலாற்றில் இயக்க வலுமிக்க சக்தி யாக (dynamic force) விளங்கினர் என்று கூறுவதோடு, இவ்வகுப்பினர் 'சாதி, சடங்குகள் இன்னும் இவை போன்ற பழைமையான வலிமை மிக்க கருத்துகளின் எதிர்ச்சார்புக ளால் (Strong prejudices) பீடிக்கப் பட்டவர்கள் என்றும் குறிப்பிடுகிறார். இந்த எதிர்ச்சார்புகளின் சமூகப்பின்பு லத்தை சொய்சாவின் ரண்தொம்ப கிராமத்தின் பின்னணியில் நூலாசிரி யர் விளக்குகிறார். ரண்தொம்ப சலாக மசாதிக் கிராமம் ஆகும். அதாவது ஒரு சாதிக்கிராமம். இதன் கிட்டிய நகரமான அம்பலாங்கொட கராவசா தியினரைப் பெரும்பான்மையாகக் கொண்டது. இப்பிராந்தியத்தில் திட்டுத்திட்டாக ஆங்காங்கே பிற தொழில் சாதிகளும் உள்ளன. சலாகம, கராவ என்ற இரண்டும் இப் பகுதியின் பெரும்பான்மைச் சாதி கள், இங்கு சாதிக்கென கோவில்கள் இருந்தன. சாதிப்பாடசாலைகளும் சில இடங்களில் இருந்தன (பக்.18). பிரைஸ்றயான் (Bryce Ryan) கூற்றை மேற்கோள்காட்டி சலாகம ச ாதியினர் தென்னிந்தியாவில் இருந்து வரலாற்றின் அண்மைக்காலத்தில் (relatively recent times) வந்து குடியேறிய கரையோரப் பகுதி மக் கள்.. பலப்பிட்டிய பகுதியில் செறி ந்து வாழ்கின்றனர்.. நீர்கொழும்பு வரையான கரையோரப் பகுதிகளில் செறிவற்ற முறையில் பரவியுள்ள னர். (பக். 18-19) என்று கூறுகிறார். சலாகமவின் தொழில் கறுவாப் பட்டை உரித்தலும் அதனோடு சார்ந்த வர்த்தக முயற்சிகளோடும் தொடர்புடையது. கறுவா உற்பத்தி வர்த்தகத்தோடு தொடர்புடைய இச் சாதியினரில் முதலாளிகளாக உயர் ச்சி பெற்ற குடும்பங்கள் பல உள் ளன. அதனால் வர்க்க வேறுபாடும் இடைவெளியும் உண்டு. சலாகம சாதியினர் 1. தம் சாதிக்குள்ளேயே திருமணம் செய்தல் என்றும் அக மணம் 2. சாதிக்குள் சாதி என்றும் உட்சாதிபேதம் 3. யார் தம்சாதிக்குள் உயர்ந்தவர்கள் என்ற பொய்ப் புனைவு (myths) எண்ணங்கள் போன்ற பிற்போக்கு சிந்தனைகள் நடத்தைகளில் இருந்து விடுபட்டவர் கள் அல்ல என்பதை குமாரி சுட்டிக் காட்டுகிறார்.

காலி மாவட்டத்தின் சமூக வரலாற் றின் இன்னோர் அம்சத்தையும் குறிப் பிடுகின்றார். அங்கு பிரித்தானியர் ஆட்சியின் தொடக்கத்தில் இருந்து 1905ஆம் ஆண்டு வரை, வரை முறைக்கலாசாரம் மேலோங்கியிருந் தது. டென்ஹாம் 1912 சனத் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கை அரசாங்க அதிபரின் கூற்றாக வரும் 'a spirit of lawlessness which reigned supreme' என்ற மேற் கோளைக் காட்டியுள்ளதோடு, ஆர் னல்ட் றைட் என்ற எழுத்தாளரின் 1907ஆம் ஆண்டு நூலில் பலப்பிட் டியைப் பற்றி குற்றச் செயல்களின் கருநிழல் (Black shadow of criminality) அங்கு படர்ந்தது என்று கூறியிருப்பதையும் எடுத்துக்காட்டுகி றார். அடிதடி, காணிப்பிரச்சினைகள், குடும்பங்களின் மீது பழிதீர்க்கும் வன்முறை என்பனவற்றுக்கும் பெயர் பெற்ற பகுதி இது என்பதைக் குறிப்பி டுகின்றார்.

இலங்கையின் தென்பகுதியின் பௌத்த சமயம், நாட்டார் வழிபாட்டு வழமைகள் பேய், பில்லி, சூனியச் சடங்குகள் பற்றியும் ஒரு தேர்ந்த மானிடவியலாளர் ஒருவருக்கு இருக் கக்கூடிய நுண்மையான நோக்குடன் குமாரி ஜயவர்த்தன விபரித்திருக்கி றார். சொய்சா மானிடவியலை தமது ஆய்வுக்குரிய விடயமாக எடுத்து லண்டன் பல்கலைக்கழகத்தின் டாக் டர் பட்டத்தைப் பெற்றவர். அவரின் வாழ்க்கை வரலாற்றை எழுதும் போது இளமை வாழ்வில் அவர் மன தைக் கவர்ந்த மானிடவியல் அம்ச ங்களை நூலாசிரியர் மிகப்பொருத்த மாகவே பதிவு செய்கிறார். ரண் தொம்பவிலும் அயற்பகுதிகளிலும் உள்ள சமயம் பற்றிக் குறிப்பிடும் போது நியுடன் குணசிங்க எம். எம்.ஜே. மாரசிங்க, கித்சிறி மலல் கொட ஆகியோரின் எழுத்துகளை ஆதாரம் காட்டி விபரிக்கிறார் (பக் 17) மக்ஸ் வெபரின் 'அடிநிலை மக்க ளின் சமயத் தேவைகள்' ('Plebian religious needs') 'புறத்தில் இருந் தும் அகத்தில் (உள்ளத்தில்) இருந்தும் எழும் துன்பங்களின் போதான ஆபத்து உதவி' (emergency aid in external and internal distress) என்ற பொருள் பொதிந்த தொடர் களை மேற்கோள்காட்டி விவசாயக் குடியான் சமயத்தின் (peasant Religion) இயல்புகளை சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்றார்.

## புலமையாளர் ஒருவரின் லண்டன் வாழ்க்கை

சொய்சாவின் இங்கிலாந்துப் பய ணம் என்ற கனவு 1921 இல் நனவா கியது 'or sova' என்ற கப்பலின் மேற்தளத்தின் குறைந்த மலிவு விலை டிக்கற்றில் 18 பவுண் செலுத்தி அவர் பயணித்தார். அதே கப்பலில் வேறு இருவரும் மேற்படிப்புக்காகச் சென் றார்கள். பலப்பிட்டியவைச் சேர்ந்த பணக்கார வர்த்தகரின் மகன் ஆர்தர் சொய்சா முதலாம் வகுப்பு ரிக்கற்றில் 120 பவுண் செலுத்திப் பயணமா னார். மருத்துவக் கல்விக்காகச் சென்ற டாக்டர் எம்.சி.எம். கலீல் 80 பவுண்கள் செலுத்தி இரண்டாம் வகுப்பு ரிக்கற்றில் பயணமானார். லண்டனில் இறங்கிய பின்னரும் சொய்சா சிக்கனமாகவே வாழ்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் அவர் கையில் 'ரியுசன் மூலம்' காசு புரளத்தொடங்கியது. மகிந்த, வெஸ்லி கல்லூரிகளில் படித்த சொய்சா லத்தீன் மொழியில் நிரம்பிய அறிவு படைத்தவராக இருந்தார். அக்காலத்தில் லண்டனிற்கு படிப்புக்காக வந்த காலனிகளின் மாணவர்களுக்கு லத்தீன் மொழியைப் படிக்கும் தேவை இருந்தது. பர்மியர்கள், சீனர்கள், எகிப்தியர்கள் போன்ற பல நாட்டவர்கள் அவர்களது மாணவர்களாய் இருந்தனர்.

சொய்சா தியோ சொபிஸ்டுகள், பகுத்தறிவு வாதிகள் ஆகியோர் நடத்தும் கூட்டங்கள், கலந்துரையாடல்களில் பங்கு கொண்டார். 1920களில் தொழிற்கட்சி அரசியல் உத்வேகம் பெற்றது. பல வேலை நிறுத்தங்கள் இடம்பெற்றன. 1926 இல் பொது வேலைநிறுத்தம் இடம்பெற்றது. இந்தியாவைச் சேர்ந்த சகல்த்வலா (Saklatvala) என்ற கம்யூனிஸ் தொழிற்கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்ட போது சொய்சா அவரை ஆதரித்தார். லண்டனில் அக்காலத்தில் மாணவர்களாக இருந்த இடதுசாரிகளான என்.எம்.பெரேரா, கொல்வின் ஆர்.டி.சில்வா, வெஸ்லி குணவர்த்தன முதலியவர்களோடும் சொய்சா தொடர்புடையவராக இருந்தார். இவர்களுள் கொல்வின் ஆர்.டி. சில்வா சொய்சாவின் ரண்தொம்ப கிராமத்தில் பிறந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. Ridley என்ற ரொட்கிசவாத மார்க்சிஸ்ட் அறிவாளி சொய்சாவின் நெருங்கிய நண்பராவார். லண்டனில் அக்காலத்தில் இருந்த மாணவர்கள் அரசியலில் கவரப்பட்டார்கள். ரஷ்ய புரட்சி நடந்து முடிந்திருந்த காலம் அது. இந்திய சுதந்திரப் போராட்டம் தொடங்கியிருந்தது. இவை உற்சாகத்தை எழுப்பியிருந்தன. இந்திய விடுதலைப் போராட்டத்தை கொண்டியக்கியவர்களும் சாம்ராச்சியத்தின் இருதயப் பகுதிக்குள்ளேயே நின்று செயற்பட்டவர்களுமானவர்களில் கிருஷ்ண மேனன் ஒரு பிரபலஸ்தர். அவர் வாரப்படாத குழம்பிய தலையுடன் லண்டன் தெருக்களில் நடந்துசெல்வதை அடிக்கடி காணலாம்.

லண்டனில் அக்காலத்தில் மாணவராக இருந்த வி.எஸ்.எம்.டி. மெல் என்பவருடைய நினைவுக் குறிப்புக்கள் நூலில் இருந்து நூலாசிரியர் தந்துள்ள மேற்படி மேற்கோள் இளைஞர்களுக்கு இலட்சிய வேட்கையை ஊட்டிய அந்த நாட்களை படம் பிடித்துக்காட்டுகிறது.

இந்த அறிமுகத்தில் ஏ.பி.டி. சொய்சாவின் வாழ்க்கை வரலாற்றை நான் முழுமையாக விபரிக்க முனையவில்லை. சில முக்கிய சம்பவங்களையும், நிகழ்வுகளையும், குறிப்பிட்டு விட்டு பல்பரிமாணம் கொண்ட வியத்தகு ஆளுமையுடைய அறிவாளி ஒருவரின் உருவாக்கத்தின் சமூகப் பின்புலத்தின் சில அம்சங்கள் நூலாசிரியரின் பார்வையூடாக தருவதற்கு முயன்றுள்ளேன். நூலின் தலைப்பில் குறிப்பிடப்பட்ட ஏ.பி.டி.சொய்சாவின் அரசியல் அவரது பௌத்த சமய சீர்திருத்தவாதம் என்ற இரண்டையும் பற்றி எழுதலாம். அது இவ்வறிமுகத்தை மிக நீண்டதொரு கட்டுரையாக மாறி விடும்.

இந்நூல் SANJIVA BOOKS நிறுவனத்தால் 2012 இல் பிரசுரிக்கப்பட்டது. ■

---

*(65ஆம் பக்கத்தொடர்ச்சி)*

வாய்ப்புகள் வழங்கப்பட்டிருக்கும். இதில் பொது இடங்களாகிய சந்தை மற்றும் வர்த்தக நிலையங்களில் ஏற்படும் சந்திப்புகள் உள்ளடக்கப்படமாட்டாது.

சுற்றுலாப் பயணிகளுக்கு மக்களுடைய அன்றாட வாழ்க்கை, பாரம்பரியங்கள் தொடர்பான அறிவினை மேம்படுத்துவதுடன், குறிப்பிட்ட சமூகத்தின் அபிவிருத்திக்கு பொருத்தமான வழிமுறைகளை கலந்துரையாடுவதற்கான வாய்ப்பினையும் ஏற்படுத்துகின்றது.

சூழல்சார் சுற்றுலா மையங்களில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உதவியளிப்பதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்கிறது.

முறையாக ஒழுங்குபடுத்தப்பட்ட சுற்றுலாக்குழுக்கள், சுற்றுலாப் பயணிகளுக்கான நுழைவுக் கட்டணங்கள் வழங்கப்பட்டதனை உறுதிப்படுத்துகின்றன.

சூழல்சார் சுற்றுலாப் பயணங்களின் போது குறிப்பிட்ட சுற்றுலா அமைவிடத்துக்கு பாதகமான தன்மைகள் ஏற்படாத வகையில் சுற்றுலாப் பயணிகளுக்கான தங்குமிட வசதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும்.

தற்போது உலகில் பல்வேறு வகையான சுற்றுலாப் பயணத்துறை காணப்பட்ட போதிலும் அவை ஒவ்வொன்றும் தனித்தனி பண்புகளைக் கொண்டனவாகக் காணப்படுகின்றன. குறிப்பாக பாரிய சுற்றுலாத்துறை எவ்வாறு தனித்துவமான பண்புகளுடன் காணப்படுகின்றதோ அதேபோன்று சூழல்சார் சுற்றுலாப் பயணத்தின் போதும் தனித்துவமான பண்புகள் காணப்படும். இந்த சிந்தனைகளை அறிவுபூர்வமாக புரிந்து கொள்வதற்கான ஓர் கையேடாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. அந்த வகையில் இந்நூலை ஆக்கித்தந்த பரமானந்தகுமார் நன்றிக்குரியவர்.

இந்நூல் தரும் வெளிச்சத்தில் இருந்து நாம் இலங்கையில் மேற்கொள்ளப்படும் சுற்றுலாத்துறை கொள்கை மீதான மீள்நோக்கு அவசியமாகின்றது. குறிப்பாக, இன்று வடக்கில் மேற்கொள்ளப்படும் சுற்றுலாப்பயணங்களின் பின்னால் உள்ள அரசியல் நலன்களை நாம் எச்சரிக்கையுடன் புரிந்துகொள்ள வேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆதிசேனன்



# பனுவல் பார்வை

சமீபத்தில் வாசித்த நூல்களுள் 'சூழல்சார் சுற்றுலாத்துறை' என்னும் நூல் முக்கியமான நூலாக இடம்பெற்றுள்ளது. இந்நூலை வை.பரமானந்த குமார் எழுதியுள்ளார். புவியியல் கற்கை மாணவராக விளங்கும் இவர், சூழலியல் கல்வியுடன் விரிவு பெறும் புதிய கூறுகளை உள்வாங்கி இந்நூலை எழுதியுள்ளார். இத்துறைசார்ந்த நூல்களுள் இந்நூல் தனித்துவமான சிறப்பு நூலாக ஆக்கம் பெற்றுள்ளது.

இந்நூல் 'இயற்கை வள முகாமைத்துவம், சூழல்




பாதுகாப்பு, சூழல்சார் சுற்றுலாத்துறை போன்ற விடயங்களைக் கற்கும் மாணவர்களுக்கும், சாதாரண வாசகர்களுக்கும் பயனுள்ள நூலாகும். மேலும், இந்நூலானது சூழல்சார் சுற்றுலாத்துறையை எவ்வாறு நோக்குவதென்பதை விளக்குவதற்கான கையேடாக மாத்திரம் அமையாது, சூழல்தொகுதி தொடர்பாக மிக ஆழமான புரிதலுடன் அவற்றை உற்றுநோக்குவதற்கான ஒரு வழிகாட்டியாகவும் இந்நூல் அமைந்துள்ளதென்பதனை இந்நூலுக்கு எழுதிய அணிந்துரையில் மிகத்தெளிவாக டாக்டர் ராம் அழகன் குறிப்பிட்டுள்ளார்.

இன்று அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் சமூக - பொருளாதார அபிவிருத்திக்கு கணிசமான பங்களிப்பைச் செய்துவரும் மிகவும் பெரிய துறைகளில் சுற்றுலாத்துறையும் ஒன்றாகும். இலங்கையில் இருந்து அதிகளவான அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொடுக்கும் துறையாக சுற்றுலாத்துறை பரிணமித்து வருகிறது. சுற்றலாத்துறையானது பொருளாதார வளர்ச்சிக்கும் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கும் சாத்தியக்கூறைக் கொண்டுள்ள ஒரு துறையாக வளர்முக நாடுகள் மத்தியில் தற்போது அதிகமாக உணரப்பட்டு வந்துள்ளது. மேலும், இத்துறை முக்கியமான ஓர் சேவைத்துறைச் செயற்பாடாக மாறிவருகிறது. ஸ்பெயின், பிரான்ஸ், மெக்சிக்கோ, தாய்லாந்து முதலான நாடுகளில் சுற்றுலாத்துறை ஏற்கனவே பல அதிசயங்களைத் தோற்றுவித்ததாகவும் அறியமுடிகிறது.

இன்றைய காலத்து சுற்றுலா விரிவாக்கம் உலகமெங்கும் காணப்படும் அதிகரித்துச் செல்லும் உலகமயமாதலின் ஓர் விளைவாகவும் அமைந்துள்ளது. ஆரம்பகாலத்தில் இருந்து சுற்றுலாத்துறை தொடர்பான செயற்பாடுகள் பிரதானமாக சேவைத்துறை சார்ந்தவையாக இருந்தன. ஆனால், தற்போது தூண்டல் விளைவுகள் காரணமாக ஏனைய துறைகளும் இதில் சம்பந்தப்படுகின்றன. இத்துறை பல்துறை அறிவுப் புலங்களுடன் கூடிய துறையாகவும் வளர்ச்சியடைகிறது.

இன்று வறிய மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு மிகவும் அவசியமாகத் தேவைப்படும் அந்நியச் செலாவணி வருமானங்களைப் பெற்றுத்தருவதில் சுற்றுலாத்துறை முக்கியம் பெற்றுள்ளது. இதனால் சுற்றுலாப் பயண இலக்குகளுக்கு மறைமுகமாக அதிகளவு வாய்ப்புகளை கொண்டுவருவதாலும் சர்வதேச சுற்றுலாத்துறை மேலதிக முக்கியத்துவத்தைப் பெறுகிறது. சமகால உலகமயமாக்கல் சூழல் உலகளாவிய மட்டத்தில் சுற்றுலாத்துறை மீது சமூக நலன் சார்ந்த விமர்சனங்களை முன்வைக்கும் போக்குகளும் உருவாகி வருகின்றன. இந்த வகையில் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் தெரிவிக்கும் கருத்தொன்றை இங்கு இணைத்துப் பார்ப்பது பொருத்தமாகும். அவர் கூறுகிறார், 'சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வழிமுறையில் அணுகப்படும்போது, ஓய்வு நேர இன்பப் பொதுப் போக்கிற்கான பயணத்தால் பொருளாதார வளர்ச்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யைத் தூண்டுவதுடன், வறுமையை ஒழிக்கவும் முடியும். உண்மையில் குறைவிருத்தி நாடுகள் உலகப் பொருளாதாரத்தில் தமது பங்குபற்றலை அதிகரிப்பதற்கு உள்ள பிரதான மார்க்கங்களில் ஒன்றான சுற்றுலாத்துறையும் உள்ளதென்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. ஐ.நா.வின் உலக சுற்றுலாத்துறை அமைப்பினுடைய 'சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத சுற்றுலாத்துறை - வறுமையை ஒழித்தல்' எனும் அதிகாரபூர்வமான நடவடிக்கையானது ஆயிரம் ஆண்டுகால அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் சுற்றுலாத்துறையின் பங்கை விளக்குகிறது' என்கிறார்.

இந்தப் பின்புலத்தில் சூழல்சார் சுற்றுலாத்துறை எனும் நூலின் முக்கியத்துவத்தை விளங்கிக்கொள்ள வேண்டும். குறிப்பாக, இந்நூலில் இடம்பெற்றுள்ள அறிமுகம் எனும் முதற்பகுதியில் சூழல்சார் சுற்றுலாத்துறையை வரைவிலக்கணப்படுத்தும் முயற்சியில் பல்வேறு அறிஞர்களின் கருத்துகள் தொகுக்கப்பட்டுள்ளன.

'கற்றல்,இயற்கைக் காட்சிகளை ரசித்தல், தாவரங்கள், வனவிலங்குகள் அல்லது கலாசார நிகழ்வுகளைப் போன்றவற்றைப் பார்த்தல் ஆகிய ஏதாவது ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக மனித செயற்பாடுகளால் பாதிக்கப்படாத, மாசுபடாத இயற்கைப் பிரதேசங்களுக்கு மேற்கொள்ளப்படும் சுற்றுப்பயணங்கள்' சூழல்சார் சுற்றுலாப் பயணங்களாக அமைகின்றன என்று வரைவிலக்கணம் கூறுகின்றது. சூழல்சார் சுற்றுலாத்துறை, சூழல்சார் கல்வி மற்றும் நீண்டகாலம் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி தொடர்பாக அதிக முக்கியத்துவம் பெறத்தக்கதாக விரிவாக்கம் பெற்றுள்ளது. மேலும், சூழல்சார் சுற்றுலாத்துறையானது இயற்கையை அடிப்படையாகக் கொண்டது, சூழல் ரீதியாக அறிவினை ஏற்படுத்தக் கூடியது, நிலைத்து நிற்கக்கூடிய வகையில் முகாமைத்துவம் செய்தல் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது. இந்தப் பண்புகளை மேலும் அடையாளம் கண்டு வளர்ச்சியடையும் நோக்கில் தான் ஐ.நா.சபை 2002 ஆம் ஆண்டை சூழல்சார் சுற்றுலாத்துறை ஆண்டாக பிரகடனப்படுத்தியிருக்கிறது.

சூழல்சார் சுற்றுலாத்துறை தொடர்பாக ஒரு முழுமையான விளக்கத்தினைப் பெற்றுக்கொள்ள இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. இந்நூலில் சூழல்சார் சுற்றுலாத்துறையின் தோற்றம், வளர்ச்சி, சுற்றுலாத்துறை மற்றும் சூழல்சார் சுற்றுலாத்துறை ஆகிய இரண்டிற்கும் இன்றுவரை கொடுக்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்கள், அவற்றிற்கிடையிலான வேறுபாடுகள் - இத்துறை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள விமர்சனங்கள், சூழல்சார் சுற்றுலாத்துறையை எவ்வாறு அபிவிருத்தி செய்தல், இதனால் ஏற்படும் தாக்கங்கள், சூழல்சார் சுற்றுலாத்துறையின் உபபிரிவுகள், இத்துறைசார் மையங்கள், விடுதிகள் போன்றவற்றை அமைத்தல், அவற்றை முகாமை செய்தல், நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியும், சூழல்சார் சுற்றுலாத்துறையும், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் இத்துறையின் பங்களிப்பு முதலான விடயங்கள் இங்கு ஆராயப்பட்டுள்ளன.

சூழல் பாதுகாப்பிற்கு 'சூழல்சார் சுற்றுலாத்துறை' முக்கிய ஒரு கருவியாக செயற்படுகின்றது. இச்சுற்றுலாத்துறையின் விருத்தி பின்வருவனவற்றைக் கொடுக்கின்றது. அவை-

பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் இருந்து சூழல்தொகுதிகளினால் வழங்கப்படுகின்ற சேவைகளுக்கு பொருளாதார ரீதியான பெறுமதியைக் கொடுக்கின்றது.

பாதுகாக்கப்பட்ட பகுதிகளை பாதுகாப்பதற்கு வருமானத்தினை நேரடியாக உருவாக்குகின்றது.

இதில் ஈடுபட்டுள்ள பங்குதாரர்களுக்கான வருமானத்தினை நேரடியாக உருவாக்குகின்றது.

கிராமிய மற்றும் சர்வதேச ரீதியில் சூழல் பாதுகாப்பிற்காக விதிமுறைகளைத் தோற்றுவிக்கின்றது.

இயற்கை வளங்களை நிலைத்து நிற்கக்கூடிய முறையில் பயன்படுத்துவதனை ஊக்குவிக்கின்றது.

உயிர்ப்பல்லினத் தன்மையில் ஏற்படும் அச்சுறுத்தலைக் குறைக்கின்றது. மேல்குறிப்பிட்ட சில பகுதிகள் சூழல்சார் சுற்றுலாத்துறையை விருத்திசெய்வதால் அதிக நன்மையடைவதற்கான வாய்ப்பினைக் கொண்டுள்ளன. மிகக்குறைந்தளவிலான சுற்றுப் பயணிகள் செல்கின்ற பகுதிகளில் சுற்றுலாத்துறையை விருத்தி செய்வதற்கான வாய்ப்பு எப்போதும் தெளிவற்றதாகவே காணப்படுகின்றது.

முழுமையான ஒரு சூழல்சார் சுற்றுலாப்பயணத்தின் பண்புகளென பின்வரும் விடயங்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன.

சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளவுள்ள குழுவிற்கு அவர்கள் பயணிக்கவுள்ள பிரதேசத்தின் கலாசாரம் மற்றும் இயற்கைச் சூழல் தொடர்பான விடயங்களை முன்கூட்டியே தெளிவுபடுத்தப்பட்டிருக்கும்.

சூழல்சார் சுற்றுலாத்துறை அமைந்துள்ள பிரதேச மக்களின் கலாசாரம் நடத்தைகள் மற்றும் ஏனைய பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள் தொடர்பாக சுற்றுலாப் பயணத்தின் போது வழிகாட்டியினால் உரிய முறையில் விளக்கப்படுவதுடன் அக்குழு சுற்றுப்பயணத்திற்கு புறப்படுவதற்கு முன் இவையனைத்திற்கும் எழுத்து வடிவில் உரிய விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கும்.

குறிப்பிட்டதொரு இடத்தினை சுற்றுலாப்பயணிகள் சென்றடையும் போது அவ்விடம் தொடர்பான புவியியல், சமூக, கலாசார, அரசியல் தொடர்பான பண்புகளை சுருக்கமாக விளக்க வேண்டும். அத்துடன், அப்பகுதி சூழல், சமூக மற்றும் அரசியல் தொடர்பாக எதிர்நோக்கும் சவால்களும் சுருக்கமாக விளக்கப்பட்டிருக்கும்.

நன்றாகப் பயிற்றப்பட்ட வழிகாட்டிகளின் ஊடாக போதியளவு விளக்கம் அளிக்கப்பட்டிருக்கும்.

சுற்றுலாப் பயணிகள் சூழல்சார் சுற்றுலாத்துறை அமைந்துள்ள பிரதேச மக்களை சந்திப்பதற்கான

*(63ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைசிப் பக்கம்

# மருந்தும் மக்களும்

பொதுவாக மக்களுக்கு மருந்தகம் (பாமசி) என்றால் என்னவென்று தெரியும். ஆனால் மருந்தாளர் (பாமசிஸ்ட்) என்றால் என்ன என்பது பற்றி ஆழ்ந்து புரிதல் அறிவு கிடையாது. இதுபற்றி மக்களும் பெரிதும் அலட்டிக்கொள்வதில்லை. இங்கு நாம் மருத்துவர் வழங்கிய மருந்துச்சீட்டினை பாமசியில் கொண்டு சென்று கொடுப்போம். பாமசியில் இருக்கும் நபர் மருந்து சீட்டைப் பெற்றுக் கொண்டு அதற்குரிய மருந்தைக் கொடுப்பார். நாமும் அதை வாங்கிக்கொண்டு வந்துவிடுவோம்.

நாம் செல்கின்ற மருந்தகம் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டதா? என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அதற்காகத்தான் இலங்கை அரசாங்கம் கொஸ்மெடிக் டிவைசஸ் டிரக் அக்ற் (Cosmetic Devices drug act) என்ற சட்ட அமுலாக்கத்தினை 1980இல் பிரகடனப் படுத்தியது. இந்தச் சட்ட அமுலாக்கத்தின்படி ஒரு மருந்தாளரின் மேற்பார்வையிலேயே ஒரு மருந்தகம் நடத்தப்பட



ப.சுந்தரேசன்

வேண்டுமென சட்டத்தில் உள்ளது. அது அரசாங்க மருந்தக அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தால் அதற்குச் சாட்சியாக தற்போது அரசாங்கத்தால் வழங்கப்படும் சான்றிதழ் மற்றும் லைசென்ஸ் மருந்தாளரின் புகைப்படத்துடன் இருக்கும்.

ஒவ்வொரு நோயாளியும் மருந்து வாங்குகின்ற போது அந்த மருந்தகம் இந்தச் சான்றிதழைக் கொண்டுள்ளதா? என்பதை கவனத்தில் கொண்டுதான் வாங்க வேண்டும். இந்தச் சட்டம் அரசாங்கத்தால் கடுமையாக நடைமுறைப் படுத்த முடியாமைக்கு சில காரணங்கள் உண்டு. அது தனியாக ஆராயப்பட வேண்டும்.

இலங்கையில் தனியார் துறையில் மாத்திரம் இரண்டாயிரம் மருந்தாளர்களுக்கு தட்டுப்பாடு உள்ளது. எனவே, அரசாங்கம் மேற்குறித்த இச் சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துமாயின் பல மருந்தகங்கள் மூடப்பட வேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே, அரசாங்கம் நோயாளிகளின் நலன் கருதி ஓரளவு இச்சட்டத்தைச் சற்றுத் தளர்த்தியுள்ளது என்றுதான் கூறலாம். இது மனித நேயத்தின் அடிப்படையில் தான் தளர்த்தப்பட்டுள்ளது. ஆனால் தற்போது நாட்டில் பல பாகங்களிலும் தினமும் மருந்தகங்கள் திறக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்த மருந்தகங்களில் மருந்தாளர்கள் இருக்கின்றார்களா? இல்லையா? என்பது ஒரு பெரும் பிரச்சினையாகவே உள்ளது.

ஒரு மருந்தகமானது ஆரம்பிக்க முன்; Business Registration Certificate (பி.ஆர்.சி) எனப்படும் சான்றிதழை எடுக்க வேண்டும். அது பின்னர் வியாபாரம் நடைபெறும் இடம் Drug Regulatory Authorityயால் நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்களைக் கொண்டு மேற்பார்வை செய்யப்படும். அதன் பின்னர் அவர்கள் அதற்கான சான்றிதழை வழங்குவார்கள். எமது நாட்டில் சற்று முரண்பாடுகள் உள்ளது போல் எனக்குத் தோன்றுகின்றது. ஏனென்றால் பல இடங்கள் பி.ஆர்.சியை எடுத்து பாமசி என்றொரு அடையாளத்தையும் வைத்துக்கொண்டு மருந்துகளை சில்லறையாக விற்பதற்குரிய சான்றிதழ் இல்லாமலேயே மாதக்கணக்கில் அல்லது வருடக் கணக்கில் மருந்தகத்தை நடத்திக்கொண்டு இருக்கின்றனர். இதனை அரசாங்கத்தால் கண்டு கொள்ள முடியாவிட்டாலும் பொதுமக்கள் அல்லது நோயாளர்கள் மருந்தகத்திடம் இவ்வாறான சான்றிதழ் இருக்கின்றதா? என்று கேட்டுத் தெரிந்துகொள்வது முக்கியம்.

நாம் வாங்குகின்ற மருந்து மருந்தாளரின் பார்வையில்தான் நமக்குக் கிடைக்கின்றதா? என்பதனை உறுதி செய்த பின்னர் மருந்துச்சீட்டின் அடிப்படையில்தான் மருந்தாளர் மருந்துகளைக் கொடுத்துள்ளாரா? என்பதையும் நாம் உறுதி செய்துகொள்ள வேண்டும். அதன் பின்னர்தான் மருந்துகளை எப்போது சாப்பிட வேண்டும், மருந்துகளால் வரக்கூடிய பக்க விளைவுகள் என்ன? அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? என்பதெல்லாம் கருத்தில் கொள்ள வேண்டும். இத்தகைய கேள்விகளுக்கு மருந்தாளரால் மட்டுமே விடைகூற முடியும். பல இடங்களில் நீங்கள் மருந்துச்சீட்டைக் கொடுத்தவுடனேயே

*(51ஆம் பக்கம் பார்க்க..)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வீரகேசரி
# இ-பேப்பர்
# இப்பொழுது
# புதுப்பொலிவுடன்..!




VIRAKESARI
வீரகேசரி

**epaper.virakesari.com**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Printed and published by Express Newspapers (Ceylon) (Pvt) Ltd. at No.185,Grandpass Road,Colombo -14, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org